லைமகள் வாசகம்

இரண்டாம் புத்தகம்

பாகம் 1

கலைமகள் வாசகம்

இரண்டாம் புத்தகம்

(இரண்டாம் பாரத்திற்கு)

6474

THE MADURA TAMIL SANGAM

6474

ஆக்கியோர்:

புலவர். சரவண. ஆறுமுக முதலியார் M.A., B.O.L., L.T.

ஆசிரியர் கல்லூரி, சென்னை.

பாகம் I

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி,

நுங்கம்பாக்கம் :: சென்னை.

பதிப்புரிமை] 1951 [விலை ரூ. 1

First Impression—1951.

6474

PRINTED AT SARASUBAI PRESS, MADRAS-1.

6474

THE MADURA TAMIL SANGAM

உரிமை உரை

எதிர்காலத் தமிழகத்தின் தனிப்பெருந் தலைவர்களாகவும், குடி மக்களாகவும் வரப்போகும், நிகழ்காலத் தமிழ் மாணவ மணிகளுக்கு இப்பாட நூல் உரியதாகுக.

முன்னுரை

ஆழ்ந்தபடிப்பு, அகன்றபடிப்பு, என்று இருவகையாக்கக் கூடிய மொழிப்படிப்பில், பாட நூல்கள் (Detailed texts) ஆழ்ந்து படித்தற் குறியவை. துணைப் பாட நூல்களிற்போல், (Non-Detailed texts) மேலெழுந்த வாரியாக, நுனிப்புல் மேய்ந்து படிக்காமல், ஆழ்ந்து, நுட்பமாகச், சுவைத்துப் படித்தற் குரியன இவை. இந் நூல்கள், பொதுவாக, மொழி அறிவை வளர்ப்பதோடு, சிறப்பாக, இலக்கியச் சுவை உணர் ஆற்றலை உண்டு பண்ணி, அதை வளர்த்து, இலக்கியப் பற்று, தாய்மொழிப் பற்று, தாய்நாட்டுப் பற்றுகளையும், நல்ஒழுக்க, சமய, உணர்ச்சிகளையும் விளைவித்து, பள்ளிக்கூடங்களை விட்டு மாணவர் அகன்ற பின்னரும், வாழ்நாள் முழுவதும், இவை நிலைத்திருக்குமாறு செய்ய வேண்டும்.

அங்ஙனம் படித்தால், முன் கூறியவற்றை அடைந்து, பாடப் பகுதிகளிற் காணலுறும் சொல், பொருள் நயங்களை உய்த்துணர்ந்து இன்புறும் வழக்கத்தையும் பெறுவர். மேலும் இவற்றின் வழியாய், இவற்றின் துணைகொண்டு, பாடங்களில் வரும் தலைவன், தலைவியர் முதலிய பல மக்களின் இயல்புணர்தலும், அவற்றிற் பயிலும், இலக்கணக் குறிப்புகள், அரிய சொல்லாட்சிகள், சொற்றொடர், மரபுத் தொடர்கள் முதலியவற்றை அறிந்து, அவற்றை, "முன்னோர் மொழி பொருளேயன்றி, அவர் மொழியும் பொன்னேபோற் போற்றுவம்" என்னும் தமிழ் மரபுக்கு ஏற்ப தம் பேச்சிலும் எழுத்திலும் வைத்து வழங்குவதற்குரிய பன்முறைப் பயிற்சியும், (Drill), பிழையறவும், தெளிவாகவும், கோவையாகவும், எளிய, இனிய, தூய நடையில் குறித்த ஒரு பொருள்பற்றி எழுதவும், பேசவும், கருத்துவளம், சொற்களஞ்சியம்

(Vocabulary) முதலியன உற்றிதி பெறவும், ஒரு பத்தியில் [paragraph) வரும் பொருளைச் சுருக்கமாக அறிந்து கொள்ளவும், காரண; காரியத் தொடர்பு (rogical arrangement) உணர்ந்து வகுத்துப் பார்க்கும் (analytic) நுண்ணறிவு பெறவும் பாட நூல்கள் உறு துணையா யிருக்கும்.

இத்தகைய நன்னோக்கங்களும், பயன்களும் கருதியே, தாய்மொழி முதன் மொழியானபின், அரசியலார் புதிய பாடத் திட்டங்களை அண்மையில் வெளியிட்டனர். புதிய தமிழ்ப் பாடத் திட்டத்தை அடியொற்றிப் பின்பற்றியே கீழ் அமைப்புகளுக்கு (Lower forms) இப்பாட நூல்கள் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவை, முற்கூறப்பட்ட நோக்கங்களையும் பயன்களையும் தரும் வழியில் மாணவர்களைச் செலுத்துமேல், அதையே என் பணியின் பயனாகக் கருதுவேன்.

பாடத்திட்டப்படியே பொது சிறப்பு, ஆகிய இரு பிரிவுகளுக்கும் செய்யுட் பகுதிகள் பல திறத்தனவும், பல சுவையுடையனவும், முற்கால, இடைக்காலத் தற் காலங்களுக்கு எவ்வளவு வரிகள் ஒதுக்கப்படவேண்டும் என்ற வரையறைக்குட்பட்டும் தொகுக்கப்பட்டுள்ளன. வாழ்த்துப் பகுதிகள், கடவுள், மொழி, நாடுகளுக்கு எனச் சேர்க்கப்பட்டுள்ளன. அறவுரையிலும் பாடத் திட்டப்படி பலவகை நூல்களிலிருந்து பகுதிகள் எடுக்கப்பட்டுள்ளன. வரலாற்று (கதைப்போக்கு)ப் பகுதியும் அமைக்கப்பட்டுள்ளது. பல்சுவைப் பகுதியில, முற்கால, இடைக்காலத், தற்காலப் புலவர்களின், தனிப்பாடல்கள், இயற்கை வர்ணனைப் பாடல்கள் எளிய இனிய பாடல்கள், நாட்டுப் பாடல்கள், கிராமத் தொழில் பற்றியவை, இசைப் பாடல்கள், முதலிய பல வகைகளும் உள்ளன.

உரைநடைப் பகுதியும், பொது சிறப்பு, ஆகிய இரு பிரிவுகளுக்கும் எளிய, இனிய, தூய நடையில், பாடத் திட்டத்தை ஒட்டிய பொருள் வகைகள் கொண்டு விளங்குகிறது. ஏறக்குறைய பாதி அளவுக்கு மறைமுகமாகவும், நேர் முகமாகவும், பாடங்கள் இலக்கியத் தொடர்புடையனவாக உள்ளன. பழைய இலக்கியப் பகுதிகளில் சுவையூட்டுமாறு, உரை நடைப் படுத்தப் பட்ட பழைய இலக்கியப் பகுதிகளும், கற்பனை நகைச் சுவைக் கதைகளும், அறிவியற் புதுமைகள், கிராமக் குடிசைக் கைத்தொழில், இன்ப வெளிச்செலவு, நீர்ப் பாசன வசதி, சிறந்த பெருமக்கள் வாழ்க்கை வரலாறு, சிற்பம், சிறந்த வரலாற்று நிகழ்ச்சி, கலை, உரை நடை நாடகம், பாங்குமுறை, முதலிய பலவகைப் பாடங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்பாட நூலுள் வரும் இக்காலப் புலவர்களாகிய, கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, நாமக்கல் கவிஞர், இராமலிங்கம்பிள்ளை, பாரதிதாசன், பாரதியார், சுத்தானந்த பாரதியார் கரந்தைக் கவியரசு, ம. வி. இராகவன் முதலிய பலரின் கவிதைப் பகுதிகளிலிருந்து எடுத்துப் பாடல்களைப் போட்டுக் கொள்ளும்படி உதவிய அவற்றின் உரிமையாளர்களுக்கு, என் உளமார்ந்த நன்றி உரியதாகும்.

இப்பாட நூலை, நன்முறையில் வெளியிட்ட "எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி" உரிமையாளர் கட்கும் என் நன்றி உரித்தாகுக. இப்பாடநூலை நாட்டாண்மை, நகராண்மைக் கழகத்தார்களும், பிற பள்ளிக்கூடங்களை நடத்துவோர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களும், சிறப்பாக மாணவர்களும் விரும்பி ஏற்றுக் கொள்வார்கள் என்னும் நம்பிக்கை எனக்கு மிகுதியாக உண்டு.

ஆசிரியர் கல்லூரி,
சைதாப்பேட்டை.

ச. ஆறுமுக முதலியார்,
தமிழ்ப் பேராசிரியர்.

உள்ளுரை

எண்	பொருள்		பக்கம்
1.	தமிழ்மொழியும் தமிழ் நாடும்	....	1
2.	கொலம்பஸின் கப்பற் செலவு	....	8
3.	காக்கையும் கோட்டானும்	....	13
4.	இந்திய நாட்டு முதல் அமைச்சர்	....	20
5.	எக்ஸ்-ரே	....	26
6.	வீரமங்கை தாராபாய்	....	32
7.	குதிரை முட்டை வாங்கியது	....	40
8.	கலைப் புரவலர்	....	48
9.	இராசேந்திரன் மேற் செலவு	....	53
10.	நான் கண்ட பொருட் காட்சி	....	57
11.	பாரதியார்	....	61
12.	ஒரு நாடகக் காட்சி	....	66
13.	கல்லணை	....	72
14.	வீடும் பயிர்பச்சைகளும்	....	80

I செய்யுட் பகுதி

(1)	வாழ்த்துப் பகுதி	....	87
(2)	பிரார்த்தனை	....	88
(3)	தமிழ்மொழி வாழ்த்து	....	88
(4)	நாடு	....	90

II அறவுரைப் பகுதி

(1)	திருக்குறள்	....	92
(2)	நன்னெறி	....	97
(3)	இன்னிசை இரு நூறு	....	99
(4)	சதகச் செய்யுட்கள்	....	99
(5)	விவேக சிந்தாமணி	....	101

III வரலாற்றுப் பகுதி

(1)	பஞ்ச தந்திரம்	....	102
(2)	ஆசிய சோதி	....	105

IV பல்சுவைப் பகுதி

(1)	தேவாரம்	....	110
(2)	திருமாலை	....	110
(3)	தனிப் பாடல்கள்	....	111
(4)	வெண்ணிலா	....	113
(5)	தமிழன் இதயம்	....	115

6474

கலைமகள் வாசகம்

இரண்டாம் புத்தகம்

1 உரைநடை (பொது)

1. தமிழ்மொழியும் தமிழ்நாடும்

உலகத்து உயிர்களுள் ஒவ்வொன்றும் தனக்குள் தோன்றிய உணர்ச்சியைப் பல வகையால் வெளிப்படுத்திக் காட்டுகின்றது. மக்கள், முதன் முதலில் விலங்குகளைப் போல உறுப்பு அசைவுகளால் கருத்தை வெளியிட்டார்கள்; பின்னர் ஒவ்வொரு கருத்திற்கும் ஒவ்வோர் ஒலியைக் குறியாகக் கொண்டு வெளிப்படுத்தினர்கள். பிற்காலத்தில் இதுவே வளர்ச்சியுற்று மொழி என்ற பெயர் பெற்றது. உள்ளக் கருத்தைப் பிறருக்கு வாயால் மொழிதலால் இது மொழியெனும் பெயர் பெற்றது. மக்களின் கூட்டு வாழ்க்கைக்கு மொழி இன்றியமையாததாகும்.

பல மொழிகள் இருப்பினும், ஒரு குழந்தைக்கு அதனுடைய அன்னை பாலூட்டித் தாலாட்டி, சீராட்டிப் பாராட்டிய மொழியே தாய்மொழியாகும். தாயின் கருவில் இருக்கும்போதே இஃது உருவும் திருவும் பெற்றதனுல் தாய்மொழி எனப்படும். இவ்வாறு நமக்குத் தாய்மொழியாக விளங்குவது தமிழ் மொழியே யாகும்.

தமிழ் மொழி இனிமை மிக்கது. இதனுலேயே "இனிமைத் தமிழ் மொழி எமது—எமக்கு இன்பந் தரும்படி வாய்த்த நல்லமுது" என்று அறிஞர்கள் போற்றுகின்ருர்கள். தாய்ப்பால் நமது உடலை வளம் பெறச் செய்கிறது; தமிழ்ப் பால் நமது உள்ளத்தையும் உணர்வையும் வளம்பெறச் செய்கிறது. "பால் வாய்ப் பசுந்தமிழ்" என இதைப் புலவர் போற்றுகின்றனர்.

நம் தமிழ் மொழி பன்னெடுங் காலத்திற்கு முன்னரே தோன்றியது. இது பழமையும் பெருமையும் வாய்ந்தது; உயர்ந்த இலக்கண இலக்கியச் செல்வங்களைக் கொண்டு வளர்வது.

இஃது இயல், இசை, நாடகம் என்ற மூன்று பகுப்பினைக் கொண்டு சிறந்து விளங்குவது; சேர, சோழ, பாண்டியர் என்ற முடியுடை வேந்தர்களாலும், குறுநில மன்னர்களாலும் போற்றி வளர்க்கப்பட்டது; கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலான மொழிகளுக்கு முதலாக அமைந்தது; உயர்தனிச் செம்மொழியாய் விளங்குவது.

உலகோர் போற்றி வியக்கும் தெய்வத் திருக்குறள் நம் செந்தமிழ் மொழியிலேதான் தோன்றியது. இளங்கோ அடிகளின் [illegible] நம் செந்தமிழிலேதான் உள்ளது. நமது தமிழன்னை, நந்தாப் புகழ் மிகு சிந்தாமணியை முடியணியாகப் புனைந்திருக்கின்றாள்; குண்டலகேசியைக் காதணியாகக் கொண்டுள்ளாள்; வளையாபதியைக் கைவளையாக அணிந்துள்ளாள்; மணிமேகலையை மேகலையாகவும், சிலப்பதிகாரத்தைக் காற்சிலம்பாகவும், திருக்குறளைக் கையில் ஏந்தும் செங்கோலாகவும் கொண்டு குறையற்று விளங்குகிறாள்.

உலகத்து மொழிகளெல்லாம் எழுத்தையும் சொல்லையுமே ஆராயும் இலக்கணத்தைக் கொண்டுள்ளன. ஆனால் நம் தமிழ் மொழியின் இலக்கணமோ எழுத்து, சொல இவற்றோடு உலக வாழ்வின் முறைகளை ஆராயும் பொருளதிகாரத்தையும் கொண்டு விளங்குகிறது. அஃது ஒன்றே தமிழ் மொழியின் சிறப்பிற்கும், தமிழ மக்களின் நாகரிகத்திற்கும், பண்பாட்டிற்கும் எடுத்துக்காட்டாக நிற்கின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர் வாழும் நிலப் பகுதிக்குத் 'தமிழகம்" என்பதும் "தமிழ்நாடு" என்பதும்

பெயராகும். இத்தமிழகம் பண்டைக் காலத்தில் வடக்கே வேங்கடமலை முதல் தெற்கே குமரியாறு வரையிலும், கிழக்கே வங்காளக் குடாக்கடல் முதல் மேற்கே அரபிக்கடல் வரையிலும் பரவியிருந்தது. இதுவே "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத், தமிழ் கூறும் நல்லுலகம்" என்று பனம்பாரனால் கூறப்பட்டுள்ளது. இத்தமிழகம் எல்லா இயற்கை வளங்களையும் கொண்டு விளங்குகின்றது. ஆரமும் தேக்கும் போன்ற அழியாச் செல்வங்களைக்கொண்ட மலைகளை உடையது நம் தமிழ்நாடு. "வான் பொய்ப்பினும் தான் பொய்யா" ஆறுகள் பல கொண்டதும் நம் தமிழ்நாடே.

பண்டைத் தமிழ் மக்கள், சிறந்த அறிவு நுட்பமும் தேர்ந்த கலையுணர்வும் உடையவர்கள். அவர்கள் உலகத்தைக் குறிக்க நானிலம் என்ற பெயரை வைத்துள்ளனர். இச்சொல்லின் கருத்து, அவர்களுடைய உயர்ந்த தரை நூல் அறிவை விளக்கும். நான்கு வகையான பகுப்புக்களைக் கொண்டதனால் உலகிற்கு நானிலம் என்ற பெயரை இட்டனர். மலையும், மலைசார்ந்த பகுதியும் குறிஞ்சி எனவும், காடும் காடுசார்ந்த பகுதியும் முல்லை எனவும், வயலும் வயல் சார்ந்தபகுதியும் மருதம் எனவும், கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் எனவும், பெயர் கொடுத்து, இந்நான்கும்கொண்ட உலகிற்கு நானிலம் என்னும் பெயரை வழங்கினர்.



குறிஞ்சி

குறிஞ்சியில் உயரிய மலைகள் விளங்கும். ஆரம், அகில் போன்ற மரங்களும், யானை, புலி போன்ற விலங்குகளும் இருக்கும். அங்கு வாழும் மக்கள் மலைத்தேன் எடுத்தல், கிழங்கு தோண்டுதல், வேட்டையாடுதல் முதலிய தொழில்களைப் புரிவர்.

முல்லையில் பரந்த காடுகளைக் காணலாம். அவற்றிடையே கானியாறுகள் ஓடும். இந்நிலத்தில் ஆவும், ஆடும் நிறைந்திருக்கும். மக்கள், ஆனிரை வளர்த்தல், வரகு, சாமை போன்றன பயிரிடுதல் முதலிய வேலைகளைச் செய்வார்கள்.

முல்லை

மருத நிலத்தில் கரை கடந்து பெருகும் ஆறுகளையும், கயல் விளையாடும் ஓடைகளையும், கழுநீர் மணக்கும் குளங்களையும், செந்நெல் தவழும் வயல்களையும் காணலாம். மக்கள் பயிர்த் தொழிலைச் செய்வார்கள்.

மருதம்

நெய்தல் நிலத்திலே தண்ணிலவு பொழியும் வெண்மணல் வெளியையும், முத்துக்களை வீசித் ததும்பும் அலைகளையுடைய கடலையும் காணலாம். அங்கு வாழும் மக்கள் உப்பு உண்டாக்கல், மீன் பிடித்தல் போன்ற தொழில்களைப் புரிவர்.



நெய்தல்

இப்பிரிவுகளேயன்றி, வெயிற் கொடுமையால் குறிஞ்சி, முல்லை நிலப் பகுதிகள் வறண்டு பாலை யாதலும் உண்டு. அஃது எக்காலத்திலும், எங்கும் இருப்பதில்லை யாதலால் அதனைத் தனியாகத் தமிழர் பிரித்துக் கூறவில்லை.



பாலை

இவ்வாறு தமிழர்கள் நிலத்தினை அதன் இயற்கைக் கூறுபாடுகளுக்கு இணங்கப் பகுத்து வகைப் படுத்தினர். மேலே கூறிய பாகுபாடுகள் அனைத்தும் கொண்டு விளங்குகிறது நமது தமிழகம். இதில் மலைபடு பொருள்களும், அலைபடு பொருள்களும், தரைபடு பொருள்களும் குறைவற்றிருக்கின்றன. நமது தாய் நாடாகிய தமிழ்நாடு இயற்கை, செயற்கை வளமெல்லாம் பெற்று விளங்குகிறது. இத்தகைய வாய்ப்பினைப் பெற்ற தமிழர்களாகிய நாம் பெரும்பேறு பெற்றவர்களேயாவோம்.

நாம் நமது தாய்மொழியாகிய தமிழைப் பிழையறப் பேசவும், எழுதவும் வேண்டும்; அதன் வளர்ச்சிக்கு வேண்டுவனவற்றையெல்லாம் தளராது செய்தல் வேண்டும். தாய்மொழிக்கு வரும் வாழ்வு நமக்கு வரும் வாழ்வாகும். அஃது அடையும் தாழ்வு நாம் அடையும் தாழ்வேயாகும். "செந்தமிழே உயிரே நறுந் தேனே, செயலினை மூச்சினை உனக்களித் தேனே-நைந்தாயெனில் நைந்துபோகும் என் வாழ்வு-நன்னிலை உனக்கெனில் எனக்கும் தானே" என்று ஒவ்வொரு தமிழரும் கருதவேண்டும். தமிழ் உயர்ந்தால் தமிழ்நாடு உயரும். தமிழ் நாடு உயர்ந்தால் தமிழர்

உயர்வடைவார்கள். அதனல் தாய்மொழியாகிய தமிழ் மொழி உயர்வடைய வேண்டுவன செய்தல் வேண்டும். அதற்கு வேண்டியது மொழிப் பற்றேயாகும். மொழிப் பற்றினல் நாட்டுப்பற்று உண்டாகும். எனவே, மாண வர்களாகிய நீங்கள், மொழிப் பற்றும் நாட்டுப் பற்றும் கொண்டு, மொழிக்கும், நாட்டிற்கும் தொண்டு செய்து புகழ் அடைய வேண்டும்.

"தமிழ் என்னில் எம்முயிர்ப் பொருளாம்—இன்பத்
தமிழ் குன்றுமேல் தமிழ் நாடெங்கும் இருளாம்.
தமிழுண்டு தமிழ்மக்க ளுண்டு—இன்பத்
தமிழுக்கு நாளும்செய் வோம்நல்ல தொண்டு"

என்ற குறிக்கோளுடன் ஒவ்வொரு தமிழரும் வாழ வேண்டும்.

பயிற்சிகள்

1. மொழி எங்ஙனம் தோன்றிற்று ?
2. தாய்மொழியின் இலக்கணம் யாது?
3. அறிஞர் தமிழ்மொழியை எவ்வாறு போற்று கின்றனர் ?
4. தமிழ் மொழியின் சிறப்பு யாது ?
5. தமிழ் அன்னை எவ்வணிகளை அணிந்துள்ளாள்?
6. ஏனைமொழி இலக்கணத்தைவிடத் தமிழ்மொழி இலக்கணத்தில் அமைந்த சிறப்பு என்ன ?
7. தமிழகம் என்பது எது? அதன் எல்லைகள் யாவை?
8. "நானிலம்" என்று உலகம் ஏன் பெயர் பெற்றது?
9. தமிழகத்தின் நான்கு நிலங்களிலும் காணக் கூடிய இயற்கைப் பொருள்களையும், அவற் றில் வாழும் மக்கள் செய்யும் தொழில்களையும்

கீழேகண்ட அட்டவணைகளில் வகைப் படுத்தி எழுதுக.

	குறிஞ்சி	முல்லை	மருதம்	நெய்தல்
இயற்கைப் பொருள்				
தொழில்கள்				

10. தமிழர் எவ்வாறு பெரும்பேறு பெற்றவர் ஆவர்?
11. தமிழ் வளர்ச்சிக்காகச் செய்ய வேண்டுவன யாவை?
12. தமிழர் எக்குறிக்கோளை, உள்ளத்திற் கொள்ள வேண்டும்?
13. குறுநில மன்னர், குமரி ஆறு, வேங்கடமலை இயல், இசை, நாடகம்: இவற்றைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
14. இன்றியமையாதது, உருவும் திருவும், தாய்ப் பால், தமிழ்ப் பால், நானிலம், தண்ணிலவு, வாழ்வு, தாழ்வு, உயர்தனிச் செம்மொழி, மலைபடு பொருள்களும் அலைபடு பொருள் களும், குறிக்கோள் — இத்தொடர்களை விளக்கி, தனித்தனியே உமது வாக்கியங் களிலே வைத்து எழுதிக் காட்டுக.
15. விலங்கு, உரு, திரு, ஆரம், வான், ஆ, ஆன், கயல் — இச் சொற்களுக்கு அகராதியைப் பார்த்துப் பொருள் எழுதுக.
16. "தமிழ் மொழிச் சிறப்பு" என்பது பற்றிப் பதினைந்து வரிகளில் ஒரு கட்டுரை எழுதுக.

2. கொலம்பஸின் கப்பற் செலவு

"முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்பது முதுரை. அவர்கள் உயர்ச்சி அடைவர் என்பது உறுதி. அதற்கு இலக்கியமாக இலங்குபவர், அமெரிக்காவை முதன் முதல் அரும்பாடுபட்டுக் கண்டு பிடித்த **கொலம்பஸ்** என்பவர். அவரது அமெரிக்கக் கப்பற்செலவை நீங்கள் அறியவேண்டும்.

கொலம்பஸ் இட்டாலி நாட்டிற் பிறந்தவர். அவர் மிகவும் எளியவர்; சிறிதளவு கல்வி அறிவே பெற்றவர். அவருக்கு இளமை முதல் கப்பற்செலவில் விருப்பம் மிகுதியாக இருந்தது. அவர் மாலுமிகள் பலரை நண்பராக்கிக் கொண்டு, அவர்களிடமிருந்து கடற் செலவு பற்றிய பல செய்திகளை அறிந்தார். நிலப் பகுப்புகளைப் பற்றியும், இட அமைப்பைப் பற்றியும் ஆவலோடு பல செய்திகளைக் கற்றார்; வான நூலிலும் ஓரளவு பயிற்சி பெற்றார்.



கொலம்பஸ்

இவற்றால் அவர், கடல் கடந்து சென்று, பல இடங்களைப் புதிதாய்க் கண்டு பிடிக்க வேண்டும் என்று விரும்பினர். அவர் தம் விருப்பத்தைப் பலரிடம் தெரிவித்தார். அக்கால மக்கள் அவர் பேச்சில் நம்பிக்கை கொள்ளவில்லை. அவர் ஸ்பெயின் நாட்டு அரசர் உதவியை நாடினர். அவ்வரசர் உதவி அளிக்க மறுத்தார். கொலம்பஸ் மனந்தளராமல் பல வகை

களில் முயன்று, முடிவில் வெற்றி பெற்றார். ஸ்பெயின் தேசத்து அரசியாரான 'இஸபெல்லா' என்பார் கொலம்பஸுக்குப் பொருள் உதவி செய்தார்.

கி. பி. 1492-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 3-ஆம் நாளன்று மூன்று கப்பல்கள் மேற்கு நோக்கிப் புறப்பட்டன. அம்மூன்றும் கொலம்பஸ் மேற்பார்வையில் சென்றன. அவரோடு கப்பல்களில் இருந்தவர்கள், 'இனி நாம் ஊர் வந்து சேர்தல் ஐயமே' என்று எண்ணியவராய்ப் புறப்பட்டனர். கரையில் இருந்தவரும் அங்ஙனமே எண்ணினர்.

அக்காலத்துக் கப்பல்கள் பாய் மரக்கப்பல்களே ஆகும். ஆதலால், அவை கடுமையான புயற்காற்றால் அவ்வப்போது நிலை தடுமாறுதல் இயல்பு. இக்கேடு இம்மூன்று கப்பல்கட்கும் பன்முறை ஏற்பட்டது. அத்துன்பம் நேரும் போதெல்லாம் மாலுமிகள் பயந்து ஒடுங்கினர்; இடையில் கொலம்பஸை மட்டும் தனியே விட்டுவிட்டுப் போகவும் முனைந்தனர்; அவரை மதிப்பின்றிப் பேசவும் துணிந்தனர்; தமது பிரயாணத்தை எண்ணி நடுநடுங்கினர்; அவரைப்பற்றி முணுமுணுத்தனர். கொலம்பஸ் கருமமே கண்ணானவர். ஆதலால் அவர், அத்துன்பங்களை எல்லாம் பொறுமையோடு பொறுத்துக்கொண்டார்; மாலுமிகளிடம் மரியாதையாகவும் அன்பாகவும் நடந்துகொண்டார்; அவ்வப்போது சீர்கெட்ட பாய்மரங்களைச் செப்பனிட்டுக் கப்பலைச் செலுத்திப் போய்க்கொண்டே இருந்தார்.

மூன்று கப்பல்களும் சில சமயங்களில் தவறான வழிகளில் போயின. அப்போது மாலுமிகள் கூக்குரலிட்டு அலறினார்கள்; ''இனி நாம் நமது நாட்டையும், உற்றார் உறவினரையும் பார்க்கப்போவதில்லை' என்று ஏங்கினர். கொலம்பஸ் அவர்கட்கு அமைதி கூறி அமர்த்தினர். அவர் இவ்வேலைகளுக்கு இடையே தமது குறிப்புப் புத்தகத்தில் தாம் பட்டறிந்த இன்ப துன்பங்களையும் அவ்வப்போது எழுதிவைத்தார்.

நாட்கள் சில ஆயின. கப்பல்கள் போய்க் கொண்டேயிருந்தன. கடலில் கண்டம் இருக்கலாம் என்பது உய்த்துணர்வே தவிர உறுதி அன்று என்பதை அம்மாலுமிகள் அறிவர். உய்த்துணர்வைக் கொண்டு இங்ஙனம் அவதிப்படுவானேன் என்பது அவர்கள் கேள்வி. அவர்கள், "தெரியாமல் வந்து அகப்பட்டுக் கொண்டோமே!" என்று பரிதவித்தனர்.

அவர்கள் இங்ஙனம் துன்பப்பட்டுக் கொண்டே போகையில், கடலுள் மூழ்கிய ஒரு கப்பலின் பாய்மரம் மிதப்பதைக் கண்டார்கள். மாலுமிகள், தங்கள் கப்பல்களும் மூழ்கிவிடுமோ என்று அஞ்சினார்கள். அந்நிலையில் அவர்கள் சில பறவைகள் பறந்து வருதலைக் கண்டார்கள்; கடலில், புல் பூண்டுகள் மிதத்தலையும் பார்த்தார்கள்; அருகில் ஏதேனும் தரைப்பாகம் இருக்க வேண்டும் என்பதை உணர்ந்தார்கள். அப்பொழுது தான் அனைவர் முகமும் அகமும் ஒருங்கே மலர்ந்தன.

கப்பல்கள் போய்க்கொண்டே இருந்தன. தரையோ காணப்படவில்லை. மாலுமிகள் மறுபடியும் மனக்கவலை கொண்டார்கள். அவர்கள் கொலம்பஸைச் சூழ்ந்துகொண்டு, "ஐயா, நாம் தரையைக் காணப்போவதாகத் தெரியவில்லை. நாம் புறப்பட்டு ஒன்றரை மாத காலம் ஆயிற்று. நாம் திரும்பி ஊருக்குப் போய்விடுவதே நலமாகும்" என்றனர். கொலம்பஸ் அமைதியாக அவர்களைப் பார்த்து, 'நண்பர்களே, நாம் மனவுறுதி இழத்தல் கூடாது. முயற்சி திருவினையாக்கும்' என்பது... நாம் சில நாட்களுக்குள் தரையைக் காண்போம். நீங்கள் என் பேச்சை நம்புங்கள்" என்றார். அவர்கள் ஒருவாறு அடங்கினார்கள்.

சில நாட்கள் சென்றன. கப்பல்கள் சென்றபடியே இருந்தன. திடீரென்று எல்லோரும் 'ஆ!' எனக் கூவினர். அவர்கள் தூரத்தில் தரை தெரிவதைக் கண்டதே அவ்வாறு கூவியதற்குக் காரணம்

ஆகும். கொலம்பஸ் அக்டோபர் மாதம் 12-ஆம் தேதி தரையைக் கண்டு மகிழ்ந்தார். அவருடைய ஆட்கள் மனமகிழ்ச்சி அடைந்தார்கள்; பீரங்கிவெடி வெடித்தார்கள். இவர்களைக் கண்டு கரையில் இருந்தவர்கள் வியப்பு அடைந்தார்கள்.

கொலம்பஸ் கப்பலைவிட்டு இறங்கினர்; நிலத்தைக் குனிந்து முத்தம் இட்டார்; அவ்விடத்தே முழங்கால் படியிட்டுக் கடவுளைத் தொழுதார். அக்காட்சியைக் கண்ட மாலுமிகள்-முன்னர் அவரை வழியிலேயே கொன்றுவிடவும் சூழ்ச்சி செய்த மாலுமிகள்-அவரை வாயார வாழ்த்தினர்; புகழ்ந்தனர்; மகிழ்ச்சி மேலீட்டால் ஆடினர்; பாடினர்; ஓடினர்; துள்ளிக் குதித்தனர்.

கொலம்பஸ் தமது விடாமுயற்சியால் ஒரு புதிய அமெரிக்க உலகம் கண்டார்; தமது செயற்கரிய செயலால் உலகப் புகழ் பெற்றார். அப்பெரியாரைப் போல நீங்களும் மேனிலைக்கு வர முயல்வது கடமை அன்றோ?

பயிற்சிகள்

1. கொலம்பஸ் யார்? அவர் முயற்சி யாது?
2. அவர் சரித்திரப் புகழ் பெற்றவர்—எப்படி?
3. அவர் புதிய கண்டம் காணப் புறப்படுமுன் பட்ட துன்பங்கள் எவை?
4. கப்பற் செலவில் அவருக்கு உண்டான துன்பங்கள் எவை?
5. அவருடன் சென்ற மாலுமிகளைப் பற்றி உனக்குஎன்ன தெரியும்?
6. கொலம்பஸ் கருமமே கண்ணயினர்—இஃது உண்மையா? எப்படி?
7. நீ இவரது வரலாற்றால் அறிவது யாது?

8. இச்செலவைப் பற்றிக் கொலம்பஸே கூறுவது போலக் கூறுக.
9. இச்செலவைப் பற்றி ஒரு மாலுமி கூறுதல் போல எழுதுக.
10. செலவு, இலக்கியமாக, முயன்று, மேற்பார்வையில், பட்டறிந்த, முகமும் அகமும், மனவுறுதி — ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
11. செலவு, மாலுமி, முனைந்தனர்; பரிதவித்தல்— இச் சொற்களின் பொருள்களை அகராதியில் பார்த்து எழுதுக.
12. நடு நடுங்கினர், முணுமுணுத்தனர் - நடுநடுங்கி, முணுமுணுத்து என்று இவை சேர்ந்தே வருவதால் இவற்றை இரட்டைக் கிளவி (சொல்) என்பர். இவற்றைப் பிரித்தால் பொருள்தரா. இவை போன்ற நான்கு சொற்களைக் கூறுக.
13. "கொலம்பஸின் விடாமுயற்சி" என்பது பற்றிப் பதினைந்து வரிகளில் ஒருகட்டுரை வரைக.

3. காக்கையும் கோட்டானும்

முன்ஞெரு காலத்தில் தென் நாட்டில் உள்ள மயிலை நகருக்கு அருகில் மிகப் பழையதும் பெரியதும் ஆகிய ஆலமரம் ஒன்று இருந்தது. அதில் **மேகவர்ணன்** என்னும் காக்கை அரசன் தன் இனத்தோடு தங்கி வாழ்ந்து வந்தது. அதற்கு அருகில் இருந்த ஒரு மலைக் குகையில் **அரிமர்த்தனன்** என்னும் அரச கோட்டான் கூட்டத்தோடு வாழ்ந்திருந்தது. அது நாள்தோறும் இரவில் தன் கூட்டத்தோடு வந்து ஆலமரத்தை வளைத்துக்கொண்டு அகப்பட்ட காகங்களை யெல்லாம் கொன்று வந்தது. கோட்டான்களின் கொடுமை நாளுக்குநாள் மிகவே காக்கை அரசாகிய மேக வர்ணன் தன் அமைச்சர்களை அழைத்து, "நம் பகைவர் நாளும் இரவில் இங்கு வந்து நம் இனத்தவரைக் கொல்லுகின்றனர். நமக்கோ, இரவில் கண் தெரிய வில்லை. அவர்கள் இருப்பிடம் தெரிந்தால் பகலில் அங்குச் சென்று அவர்களைக் கொல்லலாம். அதை நம்மால் தெரிந்துகொள்ள இயலவில்லை. பகைவரை அசட்டை செய்தோமாஞல் அவர் பின்னர் பெருந் தீங்கு விளைப் பர். ஆகவே, நாம் இப்போது என்ன செய்யலாம்?" என்று கவலையோடு வினவியது.

அதைக் கேட்டுச் சிரஞ்சீவி என்னும் கிழமந்திரி, "அரசே, இதுபற்றி நீ சிறிதும் கவலையுறவேண்டா. நான் கோட்டான்களிடம் போய்ச் சேர்ந்து, அவைகளை வஞ்சித்து உன் கருத்தை முடிப்பேன். சூழ்ச்சி ஒன்று உனக்கு உரைப்பேன், கேள். 'நீ பகைவர் பக்கம் இருக்கிருய்' என்று என்னைப் பழித்து, வேருென்றன் இரத்தத்தை என்மேல் பூசி, என்னை ஆலமரத்தின் கீழே எறிந்துவிட்டு, நீ நம் இனத்தாரோடு பக்கத்தில் உள்ள மலையின்மேல் போய் இரு. என்னைக் காக்கை களின் பகைவன் என்று கோட்டான்கள் எண்ணிக்

கொள்ளும். பிறகு நான் அவைகளுக்கு என்பால் நம்பிக்கை உண்டாகச்செய்து, அவைகளுடைய கோட்டை முதலானவற்றின் உளவறிந்து, அவைகளைக் கூட்டத்தோடு அழிப்பேன். இவ்வாலோசனை நான் முன்னமே செய்தது; இப்போது உனக்குச் சொன்னேன்" என்று கூறி, பொய்யாகக் கலகம் செய்யத் தொடங்கியது.

இவ் வுண்மை மற்றப் பறவைகளுக்குத் தெரியாது. அதனல் அவை சிரஞ்சீவியைக் கொல்லத் தீர்மானித்தன. அப்போது மேகவர்ணன், "நீங்கள் இவனைத் தண்டிக்க வேண்டா. பகைவர்களுக்கு உடந்தையாக இருந்து கொண்டு அழிவு தேடும் இந்தக் குலத் துரோகியை நானே கொன்று சினம் ஆறுவேன்" என்று கூறி அவற்றைத் தடுத்துவிட்டு, பலமுறை எழுந்து எழுந்து தன் மூக்கு முனையால் அதை வன்மையாகக் குத்துவது போலப் பாவனை செய்தது. சிரஞ்சீவி மூர்ச்சை அடைந்ததைப்போலச் சோர்ந்து கிடக்க, அதன்மேல் இரத்தம் பூசி அதை ஆலமரத்தின் கீழே எறிந்துவிட்டுத் தன் கூட்டத்தோடு வேறிடம்சென்றது.

வழக்கம்போல அன்று இரவும் அரசகோட்டான் கூட்டத்தோடு அவ்விடத்திற்கு வந்து ஆலமரத்தை முற்றுகையிட்டுக் காகங்களைத் தேடியது. அன்று அங்கு ஒரு காகமும் காணமையால், அது தன் கூட்டத்தைப் பார்த்து, "இங்கு வாழ்ந்திருந்த காகங்கள் எவ்வழியிற் சென்றன? அவ்வழி உங்கட்குத் தெரிந்திருந்தால் இப்பொழுதே தொடர்ந்து சென்று அவற்றைக் கொல்லுவோம். பாதுகாப்பான கோட்டை முதலியவற்றை அடைவதற்கு முன்னரே நாம் அவற்றைப் பற்ற வேண்டும். இல்லையேல் நாம் வெல்லுதல் இயலாது" என்று மிக்க சினத்தோடு கூறியது.

அப்பொழுது ஆலமரத்தின் கீழே கிடந்த சிரஞ்சீவி மெலிந்த குரலில் மெல்லக் கத்தியது. அக் குரலைக்

கேட்ட உடனே கோட்டான்கள் கூட்டமாகப் போய் அதைக் கொல்லத் தொடங்கின. அப்போது சிரஞ்சீவி, கோட்டான்களைப் பார்த்து நலிந்த குரலில், "நான் மேகவர்ணனுடைய அமைச்சன். என் பெயர் சிரஞ்சீவி. அக்கொடியவன் சிறிதும் இரக்கம் இன்றி என்னை இவ்வாறு துன்புறுத்தினன் ஆகையால் நான் உங்கள் அரசனை அடைக்கலம் அடைகிறேன்; அன்பு கூர்ந்து இதனை உங்கள் அரசனுக்கு அறிவியுங்கள்" என்றது. கோட்டான்கள் அதனைக் கொல்லுவதை விட்டு, தங்கள் அரசாகிய அரிமர்த்தனனை அடைந்து, இச்செய்தியைக் கூறின. அரிமர்த்தனன் வியப்பு அடைந்து அதன் அருகில் சென்று, "ஓ, சிரஞ்சீவி! உனக்கு இந்தக் கதி ஏன் வந்தது?" என்று கேட்டது.

சிரஞ்சீவி மிக்க அச்சத்தோடும் அன்போடும் கை குவித்து வணங்கி, "முன் நீர் காகங்களை அடித்துக் கொன்றீர் என்று அக்கொடிய மேக வர்ணன் சினம் கொண்டு உம்மோடு போர் செய்ய ஆயத்தப்பட்டான். அப்போது நான் அவனைத் தடுத்து வலியவரான உம்மோடு போர் செய்யலாகாது என்றும், நீர் வேண்டுவதைக் கொடுத்து உம்மோடு சமாதானம் செய்து கொண்டு வாழ்வதே தக்கது என்றும் கூறினேன். நான் பகைவர் பக்கம் பேசுகிறேன் என்று அவன் என்மீது சினம்கொண்டு என்னை இவ்வாறு குத்திக் கொடுமை செய்து வீழ்த்திவிட்டு, தன் இனத்தோடு வேறிடத்திற்குப் போய்விட்டான். இப்போது எனக்கு நீரே கதி. இந்தப் புண்கள் ஆறினல் நான் அக் காகங்களை இனத்தோடு கொன்று உமக்குக் கீழ்ப்பட்டிருப்பேன்" என்று மிகவும் உருக்கமாகக் கூறியது.

அதைக்கேட்டு அரசகோட்டான் தன் ஐந்து அமைச்சர்களையும் நோக்கி, 'பகைவர் அமைச்சனுகிய இவன் நம் வயமானன். இவனை என்ன செய்யலாம்?' என்று கேட்டது. குரூர நாசனைத் தவிர மற்ற நான்கு

அமைச்சர்களும் சிரஞ்சீவியைச் சேர்த்துக்கொள்வதே செய்யத்தக்கது என்று ஒருமுகமாகக் கூறின. அரிமர்த்தனன், "என்னுடைய கருத்தும் அதுவே ஆகும். நம்மை நம்பி அடைந்தவனைக் கொல்வது வஞ்சச்செயல் ஆகும். ஆகவே இவனை நம் இடத்திற்கு அழைத்துச் சென்று போற்ற வேண்டும்" என்று கூறிவிட்டு, சிரஞ்சீவியைப் பார்த்து, 'நீ, என் கோட்டையில் வந்து நலமாக இரு; நான் உன்னைப் பாதுகாப்பேன்' என்றது. சிரஞ்சீவி களிப்புற்று, "அரசனே, என் உயிருள்ள வரையில் நான் உங்கள் நன்றியை மறவேன். இன்றுமுதல் நான் உங்கள் அடிமை ஆவேன்" என்று பணிவோடு கூறியது.

குரூரநாசன் பலவாறு தடுத்துக் கூறியும், அரிமர்த்தனன் அதன் சொல்லைக் கேளாமல் சிரஞ்சீவியைத் தன் கோட்டையில் கொண்டுபோய் வைத்தது. அரசனது அறியாமையைக் கண்டு வருத்தம் கொண்ட குரூரநாசன், "அரசே, நான் இன்று வரையில் உமது சார்பில் இருந்தேன். இனி நான் இங்கு இருப்பதில் பயன் இல்லை. அறிவுடையவன் தீங்கு வருமுன் அதனை அறிந்து தன்னைத்தான் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். ஆகவே நான் விடை பெற்றுக் கொள்ளுகிறேன்" என்று கூறி அவ்விடம் விட்டு வேறிடத்திற்குச் சென்றுவிட்டது.

அது கண்டு சிரஞ்சீவி, "இவர்களுள் குரூரநாசன் ஒருவனே அறிவுள்ளவன். மற்றவர்கள் அனைவரும் அறிவற்ற மூடர்கள். அவன் இவர்களோடு இருப்பின் இவர்களை வெல்லுவது அரிது. நல்லவேளையாக அவன் இவர்களை விட்டு நீங்கிப்போனான். இனி இவர்களை எளிதில் அழித்துவிடலாம்" என்று எண்ணி மகிழ்ந்தது. அப்போது அரிமர்த்தனன் தன் ஊழியர்களைப் பார்த்து, 'இச் சிரஞ்சீவிக்கு நம் கோட்டை முழுவதையும் காட்டுங்கள்' என்று கட்டளையிட்டது.

அவ்வாறே அவை அழைத்துச்சென்று காட்ட, சிரஞ்சீவி எல்லாவற்றையும் கண்டு, "நான் இதற்குள் இருந்தால் எனது எண்ணம் முடியாது; என் வஞ்சனைகளையும் இவர்கள் அறிந்து கொள்ளுவர். ஆதலால். கோட்டைத் தலை வாயிலில் இருந்துகொண்டு வந்த கருமத்தை முடித்துக்கொள்ள வேண்டும் என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டது. பிறகு அரிமர்த்தனனை நோக்கி, "அரசனே நான் இழிகுலத்தவன்; ஆதலால நான் உங்களோடு உள்ளே இருப்பது தகாது. உமது கடைவாயிலைக் காத்திருந்து காலங்கழிப்பேன். அப் பணியை எனக்கு அருளுங்கள்" என்று வஞ்சகமாகக் கூறியது. அரிமர்த்தனன் அதன் வஞ்சகக் கருத்தை அறியாமல் அதற்கு உடன்பட்டது. சிரஞ்சீவி அன்று முதல் கோட்டான்கள் வசித்துவந்த குகையின் வாயிலில் இருந்து காவல் செய்து வந்தது.

சிரஞ்சீவி கோட்டான்களுக்குத் தன்மேல் ஐயம் உண்டாகாதவாறு நடந்து வந்தது. அரிமர்த்தனன் சிரஞ்சீவியிடம் முழுநம்பிக்கை வைத்து வாயிலில் காவலைப் பற்றிய கவலையே இல்லாமல் இருந்தது. இவ்வாறு சில நாள்கள் சென்றன. சிரஞ்சீவி தான் வந்த காரியத்தை முடித்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபடலாயிற்று. அது நாள்தோறும் ஒவ்வொரு விறகு கொண்டு வந்து குகை வாயிலுக்குஅருகில் மறைவாகச் சேர்த்து வந்தது. சில நாள்களில் விறகு பெரும் போராகக் குவிந்துவிட்டது.

ஒருநாள் இரவில் வேட்டையாடச் சென்ற கோட்டான்கள் எல்லாம் பொழுது விடியும் முன்னமே குகையில் வந்து அடைந்தன. கோட்டான்களுக்குப் பகலில் கண் தெரியாதாகையால் அவை பகற்காலத்தில் குகையைவிட்டு வெளியே வரமாட்டா என்பது சிரஞ்சீவிக்குத் தெரியும். எனவே, சிரஞ்சீவி அன்று கதிரவன் தோன்றினவுடன் தான் குவித்து வைத்திருந்த விறகு

களை எல்லாம் குகையின் வாயிலில் கும்பலாகச் சேர்த்து வைத்துவிட்டு மேகவர்ணனிடம் விரைந்து சென்றது.

சிரஞ்சீவியின் வருகையைக் கண்டு மேகவர்ணன் மிகவும் மகிழ்ச்சி கொண்டு, அதனை அன்போடு வரவேற்று, "சென்ற கருமம் என்ன ஆயிற்று? முயற்சி எந்நிலையில் உள்ளது?" என்று வினவியது. சிரஞ்சீவி, "அரசே முன் யோசனையோடு செய்யும் கருமமும் முடியாமற் போகுமோ? பகைவர்களைக் குலத்தோடு அழிக்கச் சூழ்ச்சி செய்திருக்கிறேன். நீங்கள் எல்லோரும் ஒவ்வோர் எரிகொள்ளி எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வந்து, நான் காட்டும் இடத்தில் இடவேண்டும். அவ்வளவே; பகைவர் அனைவரும் கணப்பொழுதில் எரிந்து சாம்பலாகிவிடுவர். விரைவில் எழுங்கள்" என்றது. உடனே மேகவர்ணன் தன் சுற்றத்தோடு எரிகொள்ளிகளைக் கொண்டு சென்று சிரஞ்சீவி காட்டிய விறகுக் குவியலில் இட்டது. உடனே விறகுக்குவியல் தீப்பற்றி எரியத் தொடங்கியது. அந்தப் புகையினால் கோட்டான்கள் பயந்து இரைச்சலிட்டுக்கொண்டு அங்கும் இங்குமாக ஓடின; கண் தெரியாமையாலும், வாயிலில் தீ மூடிக்கொண்டிருந்ததாலும், வெளியே வர வழி காணாமல் உள்ளேயே மூச்சுத் திணறிக் கூட்டத்தோடு மாண்டன.

அப்பொழுது மேகவர்ணராஜன் சிரஞ்சீவியைப் பார்த்து, 'நீ பகைவர் வீட்டில் இருந்து எவ்வாறு காரியத்தை முடித்தாய்?,' என்று கேட்டது. சிரஞ்சீவி தன்னை அவை ஆலமரத்தின் கீழ்க் கிடத்தி விட்டுச் சென்றது முதல், தான் குகைவாயிலில் விறகுகளைக் குவித்துவிட்டு வந்தது வரையில் நடந்தவைகளைக் கூறி, 'பகைவரில் குரூரநாசன் ஒருவனே அறிவுள்ளவன். மற்றவர்கள் அவன் சொல்லைக் கேளாமல் என்னைத் தங்கள் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அவன் வெறுப்புக்கொண்டு அவர்களை விட்டுப் பிரிந்து

வேறிடம் சென்றுவிட்டான். மற்றவர்கள் அறிவற்ற மூடர்களாகையால் என் வஞ்சனைக்கு உள்ளாகி எரிந்து இறந்தொழிந்தார்கள். ஏற்ற காலத்தில் தக்க வினையைச் செய்து பகைவர்களை அழிக்கவேண்டும்' என்றது.

அதுகேட்டு மேகவர்ணன், "ஆயிரம் இடையூறுகள் வந்தாலும் எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிப்பவர்களே சிறந்தவர்கள். நீ பல துன்பங்களை அடைந்தும் உன் அறிவினால் பல பகைவர்களைக் கொன்றாய். ஆயுதத்தால் ஒருவன் சாகிறான்; அறிவினாலோ பலர் ஒருசேரச் சாகிறார்கள்" என்று கூறிச் சிரஞ்சீவியைப் புகழ்ந்து பாராட்டியது.

பின்பு மேகவர்ண அரசன் முன் விட்டுவந்த தன் ஆலமரத்தை அடைந்து, அங்கு அமைச்சர்களோடும் சுற்றத்தாரோடும் பகைவர் பயம் இன்றி இன்பமாக வாழ்ந்து வந்தது.

கேள்விகள்

1. காகங்களுக்கு நேர்ந்த துன்பம் யாது?
2. காக்கை அரசனுக்குச் சிரஞ்சீவி என்ன சூழ்ச்சி கூறியது?
3. கொல்ல வந்த கோட்டான்களைப் பார்த்துச் சிரஞ்சீவி என்ன சொல்லியது?
4. அரச கோட்டானிடம் சிரஞ்சீவி என்ன கூறியது?
5. குரூரநாசன் வேறிடம் சென்றது ஏன்?
6. சிரஞ்சீவி அரச கோட்டானை என்ன வேண்டியது?
7. சிரஞ்சீவி கோட்டான்களை எப்படி அழித்தது?
8. கோட்டான்கள் அழிந்ததற்குக் காரணம் என்ன?
9. இக் கதையால் நீ அறிவது யாது?

10. நாளுக்கு நாள், பாவனை, முற்றுகை, சமாதானம், உளவறிந்து, ஒருமுகமாக—இவற்றைத் தனித்தனியே வாக்கியங்களில் அமைத்து எழுதுக?
11. களிப்பு, கருமம், பணி, ஐயம், போர்—இச் சொற்களுக்கு அகராதியைப் பார்த்துப் பொருள் காண்க.
12. விறகு - விரகு; எரி - எறி: இச் சொற்களின் பொருள் வேறுபாட்டை எழுதுக. இது போன்ற ர, ற, வேறுபாடு கொண்டுள்ள சொற்களைத் தொகுத்தெழுதுக.
13. இக் கதையைக் காக்கை அரசன் கூறுவது போல எழுதுக.
14. இக் கதையைச் சிரஞ்சீவியே கூறுவது போல எழுதுக.
15. இக் கதையைப் பதினைந்து வரிகளில் சுருக்கி எழுதுக.

---

4. இந்திய நாட்டு முதல் அமைச்சர்

நமது நாடாகிய இந்தியா அன்னிய ஆட்சியினின்று விடுதலையடைந்து உரிமை பெற்ற நாடாக விளங்குகின்றது. இதை இந்திய அரசாங்கமே ஆண்டு வருகிறது. அவ்வரசாங்க முதல் அமைச்சராக விளங்குகின்றவர் **பண்டித ஜவாஹர்லால் நேஹ்ரு என்பவர்.**

அவர் 'நமது தாய்நாடு விடுதலை பெற்று நன்னிலை அடையவேண்டும்' என்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டவர். ஆகவே ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் விடுதலைப் போரில் ஈடுபட்டு, அதனால் தமது இன்பவாழ்க்கையைத் துறந்த உத்தமர்; செல்வக் குடும்பத்தில் பிறந்தும் ஏழை மக்களுக்காக அரும்பாடு பட்டவர்; தன்னலம் கருதாது பிறர்நலம் பேணும் பெற்றி வாய்ந்தவர். அவரது வரலாறு உணர்ச்சியும் ஊக்கமும் ஊட்டவல்லது.

கண்ணைக் கவரும் காஷ்மீரத்தில், கலைகளில் வல்ல அந்தணர் பலர் வசித்து வந்தனர். ஏறக்குறைய இருநூறு ஆண்டுகட்கு முன் அவர்களுள் **இராஜ்கால்** என்பவர் பெரும் புலவராக வாழ்ந்து வந்தார். அவர், புலமை காரணமாக **பண்டித** இராஜ்கால் என அழைக்கப்பட்டார். டெல்ஹியை ஆண்ட முஸ்லீம் அரசர் விருப்பப்படி டெல்ஹியிற் குடியேறினர். அவரது இல்லம் ஒரு நஹாரின் (கால்வாயின்) கரையில் இருந்தது. எனவே, டெல்ஹி மக்கள், கால்வாய்க்கு உரியவர் என்று பொருள் படும் 'நெஹ்ரு' என்ற சொல்லைக்கூட்டி அழைக்கலாயினர். அது முதற்கொண்டு அவர் வழி வந்தவர்க்கெல்லாம் அப்பெயர் வழங்கப் படலாயிற்று. பண்டிதர் இராஜ்கால் வழிவந்தோரனை வரும் பண்டிதர் எனவும் வழங்கப்பட்டனர். ஜவாஹர் லாலும், பண்டித இராஜ்கால் நெஹ்ருவின் மரபில் தோன்றியவர். ஆதலின் பண்டித ஜவாஹர்லால் நெஹ்ரு என்று சிறப்பித்து அழைக்கப்படுகிறார்.

ஜவாஹர்லாலுக்குத் தந்தையார் பண்டித மோதிலால் நெஹ்ரு. அவர் அலஹாபாத் நகரத்தில் புகழ் பெற்ற வழக்கறிஞராகத் திகழ்ந்தவர்; தம் தொழிலில் அளவற்ற பொருள் ஈட்டியவர்; ஆனந்த பவனம் என்னும் அழகுற அமைந்த மாளிகையில் அரசரே போன்று வாழ்க்கை நடத்தியவர். அன்னாரின் மனைவியார் பெயர் சொரூப ராணியார் என்பது. அவர், கணவர் உள்ளமறிந்து நடப்பவர்; பெயருக்கு ஏற்ற பேரழகு வாய்ந்தவர்; கணவர் சொல் கடவாதவர்; சிறந்த அழகும், உயர்குணப் பண்பும் ஒருங்கே அமைந்த அவ்வம்மையாருடன் மோதிலால் இல்லறம் நடத்தி வந்தார். அவ்விருவருக்கும் ஜவாஹர்லால் என்னும் மைந்தரும், விஜயலட்சுமி, கிருஷ்ணபாய் என்னும் பெண்களும் பிறந்தனர்.

அன்னையார் சொரூபராணி தம் தவமைந்தரைச் சீரும் சிறப்புமாகச் சீராட்டி வளர்த்து வந்தார்.

ஜவாஹர்லால் சிறு வயதிலிருந்தே தமக்குப் பெரிய தாயான பீபி அம்மாளிடமே இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்களைக் கேட்டார். இராமன், பரதன், கண்ணன், அருச்சுனன் என்ற வீரர் வரலாறுகள் அவரது உள்ளத்தைக் கவர்ந்தன. மோதிலாலிடம் கணக்குவேலை பார்த்துவந்த முஸ்லீம் ஒருவர் பல நாட்டு வீரர் வரலாறுகளைக் கூறுவது வழக்கம். அவர் இந்திய வரலாற்றைத் தெளிவாகக் கதைகள் மூலம் விளக்கிவந்தார். அக்கதைகள் இளமையிலேயே ஜவாஹர் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்தன. அவ்வரலாறுகளிலிருந்து பெற்றோர்க்குப் பிள்ளைகள் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும், உடன் பிறந்தோர் ஒற்றுமையாக இருத்தல் வேண்டும், உண்மை கூறல், வீர உணர்ச்சி, அஞ்சாமை ஆகிய பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பனவற்றை ஜவாஹர் தமது உள்ளத்தில் நன்கு அமைத்துக் கொண்டார்.

ஜவாஹர் தம் பதினைந்தாம் வயது (1904-ஆம் ஆண்டு) வரை வீட்டிலேயே கல்வி கற்பிக்கப்பட்டார். ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் முதலிய பாடங்களை ஐரோப்பியர் ஒருவர் கற்பித்தார். புலவர் ஒருவர் இந்தியையும் வடமொழியையும் கற்பித்தார். பத்து வயதிற்குள் தொடக்க நிலைப் பள்ளிக்குரிய பாடங்களை ஜவாஹர் முடித்துவிட்டார்.

மோதிலால் தம் செல்வமைந்தரை இங்கிலாந்தில் படிப்பிக்க விரும்பி, 1905-இல் தம் குடும்பத்துடன் இங்கிலாந்து சென்று, ஒரு பள்ளியிற் சேர்த்து விட்டு வீடு திரும்பினர். ஜவாஹர் இங்கிலாந்தில் பள்ளியிற் சேர்ந்து படிக்கும்போதே நாடோறும் செய்தித் தாள்களைப் படித்து வந்தார். அரசியலை நன்கு அறிய ஆர்வம் கொண்டார். அவரே வகுப்பில் முதல்வராகத் திகழ்ந்தார். 1912-இல் பாரிஸ்டர் தேர்வில் சிறப்புறத் தேறிப் பட்டம் பெற்றார். உரிமைப் போராட்ட விவரங்களைச் செய்தித்தாள்கள் வாயிலாக அறிந்து உள்ளம்

துடிப்புக் கொண்டார். இந்திய நலனுக்காகவும் நாட்டு விடுதலைக்காகவும் தாமும் போராடவேண்டுமென்று உள்ளத்தில் உறுதி கொண்டார்.

1912-இல் இந்தியாவிற்கு மீண்டு வந்து அலஹாபாத் உயர் நீதி மன்றத்தில் வழக்கறிஞராகத் தம்மைப் பதிவுசெய்து கொண்டார். தொடக்கத்தில் ஊக்கமாகத் தொழில் புரிந்தார் எனினும் போகப் போக அத்தொழிலில் அவருக்குப் பற்று ஏற்படவில்லை. உரிமைக்காகப் போராடும் காங்கிரஸ் கட்சியிற் சேர்ந்தார். 1916-இல் லக்ஷ்மணபுரியில் காங்கிரஸ் பேரவை கூடியது. தென் ஆப்பிரிக்காவில் இந்தியர் துயரங்களைப் போக்க அரும்பணி புரிந்து சிறை சென்றவரான காந்தி அடிகளை முதன் முதலாகச் சந்தித்தார். அடிகளாரின் கேண்மை என்றும் நிலைத்து வளர்ந்தது.

1916-இல் தம் மரபைச் சேர்ந்த பெண்மணியார் ஒருவரை மணந்தார். அவர் பெயர் **கமலா நேஹ்ரு** என்பது. அந்த அம்மையார் கணவரைப்போலவே விரிந்த நோக்கமும் பரந்த உள்ளமும் படைத்தவர். அவர் உள்ளமும் உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டது. இருவரும் மனம் ஒத்து வாழ்க்கை நடத்தினர். மணமும் மலரும் போல ஒன்றுபட்டு நடத்திய இன்பவாழ்வின் பயனகப் பிறந்தவரே **இந்திரா நேஹ்ரு** என்னும் மகளார்.

மோதிலால் மனம் மாறிக் காந்தியடிகளின் ஒத்துழையா இயக்கத்திற் சேர்ந்து தொண்டாற்றுவதென உறுதி கொண்டார்; தம் தொழிலை விட்டார். இச் செயல் ஜவாஹருக்குப் பெருமகிழ்ச்சி ஊட்டியது. தாமும் தந்தையாருடன் சேர்ந்து நாட்டுத் திருப்பணி புரியலாம் என மகிழ்ந்தார்.

காந்தி அடிகள் சிறை சென்றார். அதன் காரணமாக நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட்டது, மோதிலாலும் மனம் கொதித்துச் சிறை சென்றார். ஜவாஹர்

லால், கமலா நெஹ்ரு முதலியோருக்குச் சிறைக் காவல் கிடைத்தது. ஜவாஹர் பல முறை சிறை சென்றார். தமது வாலிபப் பருவத்தில் பெரும்பகுதியைச் சிறைவாசத்திலும் உரிமைப்போராட்டத்திலுமே கழித்தார். சொரூப ராணியாரும் உரிமைப் போராட்டத்தில் கலந்து தடியடி பட்டார். இவ்வாறு சிறை வாழ்வே மோதிலாலுக்கும் சொரூப ராணியாருக்கும் கூற்றாயிற்று என்னலாம். ஜவாஹர்லால் குடும்பத்தினர் நாட்டுரிமைக்காகச் செய்த தியாகங்கள் எண்ணிறந்தன. இங்ஙனம் பண்டித ஜவாஹர்லால் நெஹ்ரு 35 ஆண்டுகளாக இந்திய உரிமைக்காகவே தம் வாழ்க்கையைத் தியாகம் செய்தார்; தம் வழக்கறிஞர் தொழிலையும் தந்தையார் ஈட்டிய பொருளையும் உரிமைப் போரில் தத்தம் செய்த உத்தமர்; உள்ளம், உரை, உடல், இம் மூன்றிலும் தூய்மை உடையவர்; இந்தியா உரிமை பெற்று இந்திய மக்கள் இன்ப வாழ்வு அடையவேண்டும் என்பதையே கருத்தாகக் கொண்டவர்; உரிமைப்போராட்டத்திற்காக ஒன்பது முறை சிறை சென்ற தியாகி; அதனால் கோடிக்கணக்கான மக்களின் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறார்.

இப்பொழுதும் நமது தாய்நாடாகிய இந்தியாவின் அரசாங்க முதல் அமைச்சராக இருந்து நாட்டிற்கு நலம் விளைத்துவருகிறார். இப்போது உலகமே அவருடைய அரசியல் நுண்ணறிவினையும், நாட்டுத் திருப்பணிகளையும் போற்றுகிறது.

பயிற்சிகள்

1. ஜவாஹர்லால் மரபினர் 'பண்டிதர்' எனவும் 'நெஹ்ரு' எனவும் ஏன் அழைக்கப்படலாயினர்?
2. ஜவாஹர்லால் நெஹ்ரு கல்வி கற்ற முறையைக் கூறுக?
3. அவர் எவற்றைத் தம் உள்ளத்தில் அமைத்துக்கொண்டார்?

4. அவர் இங்கிலாந்தில் பெற்ற பட்டம் யாது?
5. அவருக்குக் காந்தியடிகளுடன் நட்பு எப்பொழுது ஏற்பட்டது?
6. மணமும் மலரும்போல—இவ்வுவமை எதனை விளக்க வந்தது?
7. அவர் குடும்பத்தினர் செய்த தியாகம் யாது?
8. ஜவாஹர்லாலின் குணங்களைத் தொகுத்துக் கூறுக? (பதினைந்து வரியில்)
9. ஜவாஹர் எதையே கருத்தாகக் கொண்டவர்?
10. வாக்கியங்களில் அமைக்க:—
பிறர் நலம் பேணும், அன்னிய ஆட்சி, தியாக உள்ளம், வீர உணர்ச்சி, ஈடுபட்டு.
11. இல்லறம்—துறவறம்—இவை நேரெதிர்ச் சொற்கள். அண்மை, இயற்கை, இன்பம், நன்மை, பழமை, கொந்தளிப்பு, தன்னலம், ஒற்றுமை, நிலைத்து, அஞ்சாமை—இவற்றிற்கு நேரெதிர்ச் சொற்களை எழுதுக.
12. பிரித்துக் கூறுக.—வழக்கறிஞர், தொண்டாற்றுவது, சிறைவாசம்.
13. சேர்த்துக் கூறுக:—
நாடு + திருப்பணி, அருமை + பாடு, செய்தி + தாள்.
14. பெற்றி, வழிவந்தவர், ஈட்டுதல்—இச் சொற்களுக்கு அகராதி கண்டு பொருள் காண்க.

5. எக்ஸ்-ரே

பொது மக்கள் நன்மையின் பொருட்டுப் பாடுபடும் உண்மை மருத்துவர்களைப் போன்று உற்றுழி உதவு வோர் வேறு எவரும் இல்லை என்றே சொல்லலாம். ஏனையோரைக் காட்டிலும் அவர்களுக்கு நாம் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவராவோம். காய்ச் சல், குடல் பற்றிய நோய்கள், நுரை ஈரல்கள் பற்றிய நோய்கள் ஆகிய பலவித உள்நோய்களாலும், பிளவை, வெட்டுக் காயம், எலும்பு முறிதல் முதலான வெளி நோய்களாலும் நலியும் மக்களுக்கு அவர்கள் ஆற்றி வரும் உதவி கைம்மாறு செய்யத் தக்கது அன்று. கைக்கும் மருந்துகளை உண்ணத் தந்தும், கடும்பத்தியம் விதித்தும், புண்களானல் கத்தியால் அறுத்தும், நமது நோயைக் குணப்படுத்தும் இம் மருத்துவரை, தவறு செய்யுங்கால் அடித்தும் வைதும் நம்மைத் திருத்தி நல்வழியிற் செலுத்தும் தாய்க்கும் ஓரளவு நிகராகக் கூறலாம்.

இவர்கள் தாம் பட்டு அறிந்தவற்றாலும், ஆராய்ச்சி யாலும் இக் காலத்தில் பலவித மருந்துகளையும், கருவி களையும், நோய் போக்கு முறைகளையும் கண்டு பிடித் திருக்கிறார்கள். உறுப்புகளின் கோளாறுகளைக் கண் கூடாகக் கண்டறியும் பொருட்டு மிகவும் அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள முறைகளில் எக்ஸ்-ரே என்னும் புதிய ஒளியும் ஒன்று. இம்முறை புகைப்படம் பிடிப்பதைப் போன்றதே யாகும்.

ஒரு பொருளைப் புகைப்படம் பிடித்தால், அப் படத்தில் அப்பொருளின் உருவமும் சாயலும் தெளிவா கத் தெரிகின்றன. ஒரு பெட்டியைப் படம் பிடிப்பதாக வைத்துக்கொள்வோம். அதன் வெளிவடிவம் அப் படத்தில் விளக்கமாகக் காணப்படுகிறது. ஆனல் அப் பெட்டியின் உள்ளே இருக்கும் பொருள்களின் உரு வமும் சாயலும் விழும்படி படம் பிடிக்க முடியு

மென்றால், அது மிகவும் வியப்பாகத்தானே இருக்கும்! அவ்வாறு செய்வதற்கு உதவும் ஒளிக்கே எக்ஸ்-ரே என்பது பெயர்.

இவ்வொளியைக் கண்டு பிடித்தவர் ஜெர்மனி என்னும் நகரில் 1845-ஆம் வருடத்தில் தோன்றிய **டாக்டர் கான்ராட் வில்லியம் ராண்ட்ஜன்** என்னும் வல்லுநரே ஆவர். இவர் **உட்ரெக்கு** என்னும் பட்டணத்தில் வாசித்துத் தேறி **உட்ஸ்பெர்க்கு** என்னும் நகரில் உள்ள பல்கலைக் கழகத்தில் இயைபு நூற் பேராசிரியராய் இருந்தார். அப்பால், 1888 ஆம் ஆண்டில் **மியூனிச்** பல்கலைக் கழகத்தில் இவருக்கு ஆசிரியர் பதவி கிடைத்தது. இவர் ஆராய்ச்சித் துறையில் தமக்கிருந்த பேருக்கத்தாலும், தமது நுண்ணறிவாலும், திறமையாலும் இயைபுநூல்(இரசாயனம்)பற்றியும் மின்சாரம் பற்றியும் பல உண்மைகளைக் கண்டு பிடித்தார். சுருக்கமாகவும், தெளிவாகவும், விரைவாகவும், பெருமிதமாகவும் பேசுவதிலும் இவர் வல்லவராய் விளங்கினர்.

இவர் ஒரு நாள் மின்சாரத்தின் தன்மைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். அச்சமயம்



எக்ஸ்-ரே கருவி

இவர் இருந்த அறையின் கதவுகளும், பலகணிகளும் நன்கு மூடித் தாளிடப் பட்டிருந்தன. செறிந்த இருளில் **குருக்ஸ் குழாய்** என்னும் கருவியின் உதவி

யால், இவர் தாம் கருதிய ஒரு பொருளை ஆராய்ந்து கொண்டிருக்கும் போது, இவருக்கு எதிரே யிருந்த புகைப்படக் காகிதம் ஒன்றின்மீது மாத்திரம் மின்னலைப்போன்ற ஒருவித ஒளி உண்டாயிற்று. அவ்வாறு உண்டானதன் காரணம் என்ன என்பதை அவர் கருதாமல், தமது ஆராய்ச்சியில் ஏதோ தவறு நேர்ந்து விட்டது என்று கருதி, அன்று தமது ஆராய்ச்சியை அதோடு நிறுத்திவிட்டார்.

மறுநாள், இவர் முன்னாளில் செய்தது போலவே, அறையின் கதவுகளையும் பலகணிகளையும் அடைத்துத் தாளிட்டுக் கொண்டு, செறிந்த இருளில் இருந்த வண்ணம் தமது ஆராய்ச்சியைத் தொடங்கிச் செய்து கொண்டிருக்கும்போது, அன்றும் முதல் நாள் போலவே, அப் புகைப்படக் காகிதத்தில் அந்த மின்னலொளி தோன்றுவதைக் கண்டார்; கண்டதும், "இங்ஙனம் ஒளி தோன்றுவதற்கு இந்தக் குருக்ஸ் குழாயின் தன்மையே காரணமாக இருத்தல் வேண்டும்" என்று கருதினார். இவருடைய நுண்ணறிவு அதோடு நிற்கவில்லை. 'குருக்ஸ் குழாயிலிருந்து ஏதோ ஒரு புது விதமான புது ஒளி வருகிறது. இவ்வொளி பொருள்களை ஊடுருவிச் செல்லும் ஆற்றல் வாய்ந்தது. ஆகையால், பொருள்களின் வெளி உருவத்தோடு உட்பாகத்தையும் படம் பிடித்து இஃது உதவக்கூடும்' என்று எண்ணியபடியே இவர் தலை அசைத்துக் கொண்டார்.

உடனே இவர் இதை ஆராய விரும்பித் தம் பக்கத்திலிருந்த ஒரு பெட்டியை எடுத்து, அதற்குள் அங்கிருந்த சில பொருள்களைப் போட்டு மூடி, குருக்ஸ் குழாயின் உதவியால் புகைப்படம் பிடித்தார். அப்பொழுது அப் பெட்டியினுள் இருந்த பொருள்களின் உருவங்கள் யாவும் மிகத் தெளிவாக அப்படத்தில் விழுந்திருந்தன. அதைக் கண்டு இவர் அடைந்த

வியப்பையும் மகிழ்ச்சியையும் அளவிட்டுரைக்க எவரால் இயலும்!

இதன்பின் இவரது நுண்மதி, அவ்வாராய்ச்சியின் மற்றொரு படியையும் காண முயன்றது. அதாவது 'இப்பெட்டியில் ஊடுருவிப் பாய்ந்து, உள்ளிருக்கும் பொருள்களைத் தெளிவாகக் காட்டிய இந்தக் குரூக்ஸ் குழாயின் ஒளி, மனிதன் உடம்பிலும் ஊடுருவி, எலும்பு, நரம்பு முதலியவற்றையும் காட்டாதோ?' என்பதே. இவ்வினு உள்ளத்தில் எழுந்ததும், இவர் தமது கரத்தின் மேல் குரூக்ஸ் குழாயின் ஒளி படும்படி வைத்துப் படம் பிடித்தார். அந்தப் படத்தில் இவருடைய கையிலுள்ள தசை நிழல் போன்றும், எலும்புகள் கருப்பாகவும் தெளிவாகவும் விழுந்திருந்தன. இஃது இவருக்கு மிக்க வியப்பை விளைவித்தது. பின்னர் இவர் ஒரு மனிதனை அவ்வொளியின் உதவியால் படம் பிடித்துப் பார்த்துத் தமது ஆராய்ச்சியைத் திட்டப்படுத்திக்கொண்டு, பிறகு அதைப் பற்றி எழுதி வெளியிட்டார்.

அக்கட்டுரையை வாசித்தவர் தம் மூக்கின் மேல் கைவைத்தனர்; தாமும் ஆராய்ந்து பார்த்துத் தெளிந்து, வியந்து தத்தம் ஆராய்ச்சிக்கு ஏற்றவாறு அவ்வொளியினைப் பயன்படுத்திக் கொள்ளலாயினர். இவ்வொளிக்கு இவர் பெயரைக் கொண்டே **இராண்ட்ஜன்** ஒளி என்று பெயர் வழங்கலாயிற்று. "அப்படியானல், 'எக்ஸ்-ரே' என்று இதற்குப் பெயர் ஏற்படுவானேன்?" என்று நீங்கள் கேட்கலாம். இவ்வொளி கண்டு பிடிக்கப்பட்ட சமயத்தில் இஃது உண்டாவதற்கு முதற் காரணம் என்ன என்பதை எவரும் கண்டறிய முடியவில்லை. ஆகையால், முதற்காரணம் இன்னதென விளங்காத ஒளி என்னும் பொருள்பட, இவ்வொளிக்கு 'எக்ஸ்-ரே' (X-RAY) என்னும் பெயர் வழங்கி வருகிறது. கணக்கில் நீங்கள் 'எக்ஸ்'

என்னும் எழுத்தை வழங்க வில்லையா? அதுபோலவே இதற்கும் 'எக்ஸ்' என்னும் எழுத்து வழங்குகிறது.

மருத்துவத்தில், அதிலும் சிறப்பாக உள்நோய் போக்கு முறையில் 'எக்ஸ்-ரே' மிகவும் பயன்படுகிறது. இவ்வொளியின் உதவியால் உட்புண் இருக்கும் இடம் எலும்பு முறிந்துள்ள இடம் முதலியவற்றைப் புகைப் படம் பிடித்துத் தெரிந்து கொள்ளலாம். போர்களில், போர்வீரர் உடம்பில் குண்டுகள் பாய்ந்திருந்த இடத்தைக் கண்டு பிடித்து எடுத்து, நோயைப்போக்க இவ்வொளி மிகவும் பயன்படுகிறது. 'எக்ஸ்-ரே' யின் உதவியால் மருத்துவ முறைகளில் ஏற்பட்டுள்ள நன்மைகள் அளவிறந்தனவாகும். நோயாளியின் உடம்பினுள் உள்ள கோளாறுகள் அனைத்தையும் எக்ஸ்-ரேயால் படம் பிடித்துப் பார்த்துக்கொண்டு ஏற்ற முறைகளை மருத்துவர் கையாண்டு வருகின்றனர்.

பயிற்சிகள்

1. மருத்துவர் எதனால் சிறந்த, உற்றுழி உதவுவோர்களாகின்றனர்?
2. எக்ஸ்-ரே என்பது என்ன?
3. எக்ஸ்-ரே ஒளியைக் கண்டுபிடித்தவர் யார்?
4. எக்ஸ்-ரே எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது?
5. எக்ஸ்-ரேயின் பயன் என்ன?
6. உற்றுழி உதவுவோர், இயைபு நூல், கட்டுரை, கைம்மாறு, நுண்ணறிவு, அண்மைக்காலம், பட்டு அறிந்த, பெருக்கம், கோளாறுகள்— ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்தெழுதுக.
7. நுண்ணறிவு = நுண்மை + அறிவு, ஊடுருவி = ஊடு + ஊருவி, நுண்மதி = நுண்மை + மதி— இவை போலப் பிற சொற்களையும் பிரிக்கப் பழகுக.

8. விளங்கினார், இருக்கிறது, வருகின்றது— காலங்காட்டும் இடைநிலைகள் எவை?

9. இரண்டாம் பத்தியில் உள்ள வாக்கியங்களில் வந்துள்ள வேற்றுமை உருபுகளை வகைப்படுத்திக் கட்டத்தில் அமைத்துக் காட்டுக.

10. மூன்றாம் பத்தியில் உள்ள வினை முற்றுகள், வினையெச்சங்கள், பெயரெச்சங்களைக் கூறுக.

11. பால் குடி, பாலைக்குடி— இவ்விரண்டில் முன்னதில் 'ஐ'—உருபு தொக்கி (மறைந்து) நிற்கிறது; பின்னதில் வெளிப்படையாக இருக்கிறது. தொக்கி நிற்பது **தொகை** எனப்படும். பின்னது **விரி** எனப்படும். இது போன்று வேற்றுமைத் தொகைகளையும் விரிகளையும் தொகுத்தெழுதுக.

12. இவ்வொளியைக் கண்டுபிடித்தத தாண்ட்ஜன் கூறுமாறு சுருக்கிக் கூறுக.

13. உற்றுழி, பெருமிதம், கரம், தசை-இச்சொற்களுக்கு அகராதியைப் பார்த்துப் பொருள் அறிக.

6. வீரமங்கை தாராபாய்

நம் பாரத தேசத்தில் விந்தியமலைக்கும் இமய மலைக்கும் இடையேயுள்ள பகுதியில் ஒரு பாகமாகிய ராஜ புதனத்தில் அநேக சிறு நாடுகள் இருந்தன. அவற்றை ராஜபுத்திரர் என்னும் மரபினர் முறை வழுவாமல் ஆண்டு வந்தனர்.

ராஜ புதனத்தில் உள்ள சிறிய நாடுகளுள் **தோடா** என்பது ஒன்று. இதனைச் சுமார் நானூறுண்டு களுக்கு முன்னர்ச் **சூரதன்** என்ற மன்னன் ஆண்டு வந்தான். இவன் சித்தூர் நாட்டிற்கு உட்பட்ட ஒரு சிற்றரசனுதால், அதற்குக் கப்பங் கட்டிவரலா யினன். இக்காலத்தில் மொகலாயர்கள் இந்தியாவின் மீது படை எடுத்து வந்தனர்.

குணசீலனுன சூரதனல் ஆளப்பட்டு வந்த தோடா நாட்டிலும் இந்த மொகலாயர் படை நுழையத் தலைப்பட்டது. சூரதன் சூரனேயாஞலும், மிகப் பெரிதாயிருந்த மொகலாயரது சேனையை எதிர்க் கும் வலிமை தனக்கில்லாமையை உணர்ந்து, உதவி வேண்டிச் சித்தூர் வேந்தருக்குச் செய்தி அனுப்பி னன். ஆனல் சித்தூரும் அதே சமயத்தில் முகம் மதியர் படையால் முற்றுகை இடப்பட்டிருந்தது. ஆதலின், அங்கிருந்து துணைப்படை பெறுவதும் இயலாமற் போகவே, சூரதனுக்குச் சரண்புகுதல், அல்லது பகைவர் கைக்குத் தப்பியோடிப் பிழைத்தல் என்பவற்றில் ஒன்றைச் செய்வதையன்றி வேறு வழியில்லை. சரண்புகவோ, அவ்வீரன் மனம் இடந் தரவில்லை. அதனல், அவன் தனது ஒரே புத்திரி யான **தாராபா**யுடன் வெளியேறிச் சித்தூருக்கு அருகி லிருந்த **பீதனூர்** நாட்டை அடைந்தான். தோடாநாடு பகைவர் கைவசமாயிற்று. சூரதன் விதிசெய்த கூறுபாட்டை எண்ணி எண்ணிப் புண்பட்ட மனத் துடன் பீதனூரில் வசிக்கலானன். அவனுடைய

செல்வியான தாராபாய் தன் வீரமொழிகளால் அவன் மனப்புண்ணை ஆற்றி வந்தாள்.

சில ஆண்டுகள் கழிந்தன. அழகில் அரம்பைக்கு நிகரானவளான தாரா, வளர்பிறை போல வளர்ந்து மணப்பருவம் எய்தினள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களுடன் வீரமும் அவளிடம் குடிகொண்டிருந்தது. படைக்கலப் பயிற்சியில் வல்லவனான சூரதன் அவளுக்குப் போர்த்தொழில் முறைகளைப் புகட்டிவந்தான். சமயப்பற்றும், தேசப் பற்றும், உயிரினும் சிறந்ததான ஒழுக்கமும், தயையும் ஏனைய நற்குணங்களும், இவற்றோடு இணையற்ற எழிலும் பொருந்தி விளங்கினள் தாரா.

தாராவின் அழகையும், மற்ற அரிய குணங்களையும் பற்றிக் கேள்வியுற்ற இராஜபுத்திர சிற்றரசர்களின் மைந்தர்பலர், அவளை மணக்க ஆவல் கொண்டனர். அவர்களுள் அவளைக் கண்டு களிகூர்ந்தவர் உள்ளத்தில் மண வேட்கை பின்னும் அதிகமாய் இருந்தது. சூரதன், தன்னிடம் தாராவின் மணத்தைப் பற்றிக் கேட்டவரிடமெல்லாம் தான் இழந்த நாட்டை மீட்டுத் தரும் வீரனுக்கே தன் மகளை மணம் செய்து தரப்போவதாக உரைத்து வந்தான். இதைச் செவியுற்ற காளையரில் பலர், 'தாராவை மனைவியாகப் பெறுவது பெரும்பேறே யாயினும், பேராற்றலால் மொகலாயரை வென்று தோடா நாட்டை மீட்பது எங்ஙனம்? என்று மயங்கிப் பின்னிடலாயினர். இங்ஙனம் சில ஆண்டுகள் செல்ல, தன் வாய்மொழிக்கு இணங்கி அரச குமாரர் எவரும் முன் வராததையும், தாராவுக்கு வயதேறுவதையும் கண்ட சூரதன் கவலை கொண்டான்.

இச்சமயம் மீவார் மன்னன் குமாரருள் ஒருவனான ஜயபாலன் என்பவன் தான் தாராவை மனஞ் செய்து கொள்ள விரும்புவதாகச் சூரதனுக்குச் சொல்லி

யனுப்பினன். ஜயபாலன் தனக்கு மருமகனவது தகு மென்றே சூரதன் கருதினன். ஆயினும், தனது நாட்டை மீட்டுத்தரும் ஆற்றலில்லாத எவருக்கும் தன் மகளை மணம்செய்து தருவதில் அவனுக்கு விருப்ப மில்லை. இப்படியிருக்கையில், ஜயபாலன் தாரா வைப் பார்க்க விழைந்து பீதனூருக்கு வந்தான். சூர தனும் அவனைத் தக்க மரியாதைகளுடன் வரவேற்று உபசரித்தனன். இருவரும் அளவளாவிப் பேசிக் கொண் டிருக்கும்போது சூரதன் தன் சூளுரையை ஜயபாலனிடம் வெளியிட்டான். சூரதனை மெல்ல ஏமாற்றித் தாராவைத் தனக்கு மணம் செய்து தரச் செய்து விடலாம் என்று எண்ணி வந்த ஜயபாலனுக் குச் சூரதன் தனது சூளுரையில் ஊன்றி நிற்பது புலப் பட்டதும், தன் விருப்பம் ஈடேற வழியற்றுப்போன தால் ஆத்திரம் உண்டாயிற்று. அதனல் அவன் சூர தனை இகழ்ந்து பேசத் தொடங்கினன். பொறுமை சாலியான சூரதன் 'ஏதோ இளைஞன்; பித்துப் பிடித் தவன்; போகட்டும்,' என்று அவ்வார்த்தைகளைப் பொறுத்துக் கொண்டிருந்தான்.

கடுகு சிறுத்தாலும் காரம் போகுமா? பொறு மைக்கும் அளவு என்பது ஒன்று உண்டல்லவா? "உன் பெண்ணை ஒரு குதிரைக்காரன் கூட மணக் கப்போவதில்லை," என்று ஜயபாலன் கூறவே சூர தன் உள்ளத்தில் புகைந்து கொண்டிருந்த கோபக் கனல் குபீரென்று பற்றியது. அவன் தன் உடை வாளை உருவி ஒரே வீச்சில் ஜயபாலன் சிரத்தை வெட்டி வீழ்த்தினன். ஜயபாலன் உடல் மண்ணுக்கு இரையாயிற்று.

மீவார் அரசன் இந்நிகழ்ச்சியைப் பற்றிக் கேள்வி யுற்றான். அவன் நல்லவரைப் போற்றியும் பொல்லா தவரை ஒறுத்தும் வருபவன். குற்றம் செய்தவன் தன் மகனேயாயினும் தவறாது உரியபடி தண்டித்துவிடும்

அறநெஞ்சினனான அவன், தன் மூத்த குமாரனான பிருதிவி என்பான் இழைத்த ஒரு பிழைக்காக அவனை நாடு கடத்தியிருந்தான். கெட்ட குணங்களுக்கெல்லாம் உறைவிடமான ஜயபாலனிடத்திலும் அவனுக்கு விருப்பம் இல்லை. இங்நிலையில் ஜயபாலனுக்கு நேர்ந்த கதியைப்பற்றி அவன் கேட்டதும், "நன்று! குற்றத்திற்கு ஏற்ற தண்டனையே பெற்றான். சூரதனை நான் மெச்சுகிறேன். இப்படிப்பட்ட கெட்டவனான பிள்ளை இருப்பதைக் காட்டிலும், என் கண்மறைவில் இறந்தான் என்று கேள்விப்படுவதே நல்லது," என்று கூறினான்.

இச்சமயத்தில் நாடு கடத்தப்பட்ட பிருதிவி தன் தந்தையாகிய மீவார் வேந்தனைக் கண்டு தன் பிழை பொறுக்கும்படி வேண்ட, அவனும் அவ்வாறு செய்து, பிருதிவியை இளவரசனாக்கினான். பிருதிவி இயல்பாக நற்குணமுடையவனே. வீர தீரமும் வன்மையும் உடைய அவன் அறியாமையாற் செய்த குற்றம் அவனுடைய அருங்குணங்களால் மறைந்து போயிற்று. குடி மக்கள் அனைவரும் அவனிடம் சிறந்த அன்பு கொண்டிருந்தார்கள். அவனும் தன் நடத்தையாலும் அருஞ்செயல்களாலும் குடிகளின் ஆதரவையும், தந்தையின் அன்பையும் பெறலானான்.

இங்ஙனமிருக்க, பிருதிவி ஓர் அழகிய ஆடவன் என்பதையும் நற்குணமுடையவன் என்பதையும் தாரா அறிந்தாள்; அவன் படத்தையும் வருவித்துப் பார்த்து, அவன் அழகில் ஈடுபட்டாள். தன்னை மணக்கக்கூடிய தகுதியுடையவர் பிருதிவியைத் தவிர வேறு எவரும் இலர் என்பதும் அவள் மனத்திற் பட்டது. அவனும் தன்னை வரிப்பதில் பெரு விருப்புடையவனாய் இருப்பதாக அவள் தெரிந்துகொண்டாள்; அவன் துணைகொண்டு தான் தோடா நாட்டை மீட்டுவிடலாம் என்று உறுதி செய்தாள். சூரதனுக்கும் தன் மகளுடைய

எண்ணம் இன்னதென்பது தெரிந்தது. அதை நிறைவேற்றி வைப்பதில் அவனுக்குத் தன் சூளுரையைத் தவிர வேறு தடையொன்றும் இல்லை. தோடா நாட்டை மீட்டுத் தந்து, தாராவை மணப்பதற்கு முன் வருவார் வேறு எவருமே இலராயினர். சூரதன் என்ன செய்வான் பாவம்! அவன் அகமும் முகமும் வாடிப்போயின.

அச்சமயத்தில் பிருதிவி அங்குத் தோன்றினான்; தோடா நாட்டை மீட்டுத்தருவதாக வாக்குறுதி தந்தான்; போர்க்கோலம் பூண்டு புறப்படவும் ஆயத்தமாயிருந்தான். அவனைக் கண்ட தாராவின் மனம் அனலிற்பட்ட மெழுகைப்போல உருகிற்று. அவள் தன் தந்தையைப் பார்த்து, "தந்தையே, வணங்குகின்றேன். விடை தாருங்கள். யானும் அவருடன் சென்று சமர்செய்து தோடாவைக் கைப்பற்ற முயல்கிறேன். அவருக்கு நேர்வது எனக்கும் நேரட்டும். மணம் அல்லது மரணம்! எது வரினும் சரியே," என்றனள்.

தாராவின் வீர மொழிகளால் கலங்கியிருந்த சூரதன் உள்ளம் தெளிந்தது. அவ்வீர உரை அவன் மனத்தைத் திடப்படுத்திற்று. அவளுக்கு இளமைப் பிராயமுதல் படைக்கலப் பயிற்சி அளித்து வந்த அவன் அவளுக்குத் துணையாக அனுப்பத் தன்னிடம் ஒன்றும் இல்லாததால், வாழ்த்தி விடை கொடுத்தான். அவளும் தந்தையின் அடிபணிந்து ஊக்கத்துடன் குதிரை மீதேறிப் பிருதிவியுடன் தோடாவைப் பிடிக்கச் சென்றாள்.

பிருதிவியின்வசம் இருநூறு குதிரை வீரரே இருந்தனர்; அவன் அவர்களுடனும் தாராபாயுடனும் தோடா நாட்டிற்கு அருகிலிருந்த ஒரு காட்டை அடைந்து தங்கினான். அங்குப் பிருதிவியும் தாராவும்

தோடா நாட்டை மீட்பதற்கு உரிய சூழ்ச்சிகளை ஆராயலாயினர். "இன்னும் இரண்டு தினங்களில் மொகரம் பண்டிகை வருகிறது. பண்டிகையின் முடிவில் அவர்கள் அயர்ந்திருப்பர். அச்சமயம் நாம் சென்று திடீரென்று தாக்கலாம்," என்றாள் தாரா. இந்தச் சூழ்ச்சி மிகவும் ஏற்றதென்று அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இத்தருணம் இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியாதவனான பிருதிவியின் உயிர்த்தோழன் சங்கரன் அங்கு வந்து சேர்ந்தான். அவன் வீரர் இருநூற்றுவரும் பிருதிவியின் படையோடு சேர்ந்தனர்.

தாம் செய்துகொண்ட முடிவின்படி பிருதிவி, தாரா, சங்கரன் ஆகிய மூவரும் மொகரம் பண்டிகையன்று முற்பகலிலேயே மாற்று உருவத்துடன் தோடாக் கோட்டைக்குள் சென்றார்கள். இரவில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வீரர் அனைவரும் கோட்டைக்கு வெளியே வந்து போருக்குத் தயாராயிருக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இரவில் எதிரிகள் அயர்ந்திருந்த சமயத்தில் உள்ளிருந்த மூவரும் தமக்கு எதிர்ப்பட்ட எதிரிகளை வெட்டி வீழ்த்தத் தொடங்கினர். பகைவர், திடீரென வந்த இவ்வெதிர்ப்பைக் கண்டு, இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்து நாலா பக்கமும் சிதறியோடலாயினர். அவர்களிற் சிலர் ஓடோடிச் சென்று கோட்டைக்கதவுகளை மூடினர். உள்ளே பிணக் குவியல் மிகவே, கூக்குரலும் கலவரமும் மிக்கன. இச்சமயம் வெளியிலிருந்த படை வீரர் கோட்டையைத் தாக்கினர். கோட்டையைக் காப்பதா, அன்றி உட்பகையை எதிர்ப்பதா என்று ஒன்றும் விளங்காமல் பகைவர் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது, சங்கரன் கோட்டை வாயிலைத் திறந்து படைஞரை உள்ளே அழைத்துக்கொண்டான். அந்த நானூறு வீரரும்

போரை எதிர்பாராமல் அங்கிருந்த எதிரிகளை அடித்து நொறுக்கிச் சிதறியோடச் செய்தனர். வெற்றி ராஜ புத்திரர்களுடையது ஆயிற்று. வீரத்திருமகளாய் விளங்கினாள் தாராபாய்.

மொகலாயரில் பெரும்பாலோர் அழிந்தனர். எஞ்சியவர் ஓட்டம் பிடித்தனர். ராஜபுத்திரப் படை வீரர்கள் அவர்களையும் பின்தொடர்ந்து துரத்தினார்கள். அப்பொழுது தாராபாய், "அஞ்சியோடுபவரை விஞ்சிக்கொல்வது அறம் அன்று. அவர்களைக் கொல்ல வேண்டுமென்பது அன்று நம் கொள்கை. நாடு பிடித்தல் தானே நமது நோக்கம்? வேண்டா," என்று சொல்லித் தன் வீரர்களைத் தடுத்தாள்.

தோடா நாடு மீட்கப்பட்ட செய்தி விரைவாக ராஜ புதனமெங்கும் பரவிற்று. சூரதன் விரைவாக அங்கு வந்தான். நகரைவிட்டு ஓடிச் சிதறியிருந்த குடிகள் யாவரும் நகருக்கு மீண்டார்கள். மும்முரசும் முழங்கப் பிருதிவிக்கும் தாராபாய்க்கும் திருமணமும் முடி சூட்டும் ஒரே நாளில் மிகச் சிறப்பாக நடந்தேறின. சூரதன் சூளுரையும், தாராபாயின் ஆசையும், பிருதிவியின் விருப்பமும் நிறைவேறின. பொங்கும் மங்களம் எங்கும் தங்கியது.

பயிற்சிகள்

1. சூரதன் நாடிழந்து பீதனூர் சென்றதேன்?
2. சூரதன் கூறிய சூளுரை யாது?
3. ஜயபாலன் எவ்வாறு உயிரிழந்தான்?
4. பிருதிவி யார்? அவன் எவ்வாறு தோடா நாட்டை வென்றான்?
5. பிருதிவி--தாராபாய் இவர்களின் வீரத்தைப் பற்றித் தனித்தனி ஒரு பத்தி எழுதுக (எட்டு, எட்டு வரி)

6. மரபினர், கப்பம், மடம், பயிர்ப்பு, எழில், வாய்மொழி, சிரம், இணை, சூள்—இச்சொற்களுக்குப் பொருள் காண்க.

7. பொங்கும் மங்களம், அஞ்சியோடுபவரை விஞ்சிக்கொல்வது, இணைபிரியாதவனை, வாக்குறுதி தந்த அகமும் முகமும், ஈடேற வழியற்று, படைக்கலப்பயிற்சி, போர்த் தொழில் முறை, முறைவழுவாமல், இத் தொடர்களைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்தெழுதுக.

8. உறைவிடம், உட்பகை, சூளுரை, வயதேறுவது, சிறுநாடு—பிரித்தெழுதுக.

7. குதிரை முட்டை வாங்கியது.

அறிவற்ற ஒரு குருவுக்கு ஏவிய ஊழியம் செய்ய மட்டி, மடையன், மூர்க்கன், மிலேச்சன், மூடன் என்னும் மாணாக்கர் ஐவர் இருந்தனர். இவர்கள் ஐவரும் நாள்தோறும் குருவுடன் மடத்திலிருந்து புறப்பட்டுச் சுற்றுப்புறக் கிராமங்களுக்குச்சென்று வருவது வழக்கம். ஒருநாள், "கிராமங்களைச் சுற்றிவருவதற்குக் குருவுக்கு ஒரு குதிரை இருப்பது உத்தமம்; ஆதலால்



குதிரை முட்டை வாங்குதல்.

எப்படியாவது குதிரை ஒன்று வாங்குவது" என்று முடிவு செய்தனர். மாணவர் ஐவரும் குருவினிடம் சென்று எப்படியாவது அவருக்கு ஒரு குதிரை தேடிக் கொடுக்கவேண்டுமென்று விரும்புவதாகத் தெரிவித்

தனர். அதைக் கேட்ட குரு "குதிரை ஒன்று எவ்வளவு விலை இருக்கும்?" என்று கேட்க, "நூறு அல்லது ஐம்பது பொன் இருக்கும்" என்றனர். 'அப்படியாயின் பின்னர்ப் பார்ப்போம்' என்றார் குரு.

ஒரு நாள் பொழுது சாய்ந்த பின்னர் கூட, மடத்துப் பசு வராமை கண்டு எல்லாவிடங்களிலும் தேடினார்கள். எங்கும் கிடைக்காமையால் வறிதே மடத்திற்கு வந்து, குருவிடம், "ஐயா, பசுவைக் காணோம். ஆயினும் அது பெரிதன்று. சுருங்கிய விலையில் நமக்குக் குதிரை யகப்பட்டது" என்றான் மட்டி. "அது எப்படி?" என்று குரு ஆவலோடு கேட்டார். அதற்கு அவன், "ஐயா, தங்கள் அருளால் பசுவைத் தேடித் திரும்பி வரும் போது ஏரிக்கரைச் சாரிலே நாலைந்து பெரிய குதிரைகள் மேயவும் கிடக்கவும் கண்டேன். அங்கே பெரிய முட்டைகள் போன்றவை கிடந்தன. அருகே போய் அவை குதிரை முட்டைகளோ அல்லவோ என்று ஐயப்பட்டு அங்கிருந்த ஒருவனைக் கேட்க, அவன், 'அவை குதிரைமுட்டைகளே, ஒவ்வொன்றின் விலை நாலைந்து பொன் மாத்திரந்தான்' என்றான். ஆதலால் இந்த நல்ல சமயத்தில் எளிதிலே அவற்றுள் ஒன்று வாங்கிவிடவேண்டும்" என்று கூறி முடித்தான். எல்லோரும் அதை ஒத்துக்கொண்டனர். உடனே குருவும் அவனுடன் மடையன் என்பவனையும் சேர்த்துக் கையில் ஐந்து பொன் கொடுத்துக் காலந் தாழ்க்காமல் பிரயாணப்படுத்தி அனுப்பினார்.

சொன்னபடி மட்டியும், மடையனும் குதிரை முட்டை வாங்கப் போனபின் மூடன் என்பவன் குருவினிடம் வந்து "கேட்டீர்களா செய்தியை! குதிரை முட்டை உறுதியாக வந்து விடும். அம்முட்டையை அடைகாப்பது யார்? எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை. அது மிகப் பெரியதாய் இருக்கிறது என்றானே! பத்துப் பதினைந்து கோழிகளை வைத்தாலும்

போதாதே! என்ன வழி சொல்லுங்கள்?" என்றான். வழி தெரியாமல் எல்லோரும் திகைத்தனர். முடிவில் குரு "நம்மில் யாராவது ஒருவர் அடைகாத்தலைத் தவிர வேறு வழி காணேமே" என்று எதிரே இருந்த மூன்று மாணக்கர்களைப் பார்த்துக் கூறினர்.

முதலாவதாக மூடன், "நாள்தோறும் ஆற்றுக்குப் போய்த் தண்ணீர் கொண்டுவரவும், காட்டுக்குப் போய் விறகு தேடிக்கொண்டு வரவும் எனக்குச் சரியா யுள்ளது" என்றான். அதன் பின் மூர்க்கன் "நான் இரவும் பகலும் இடைவிடாமல் மடைப்பள்ளியில் பத்துப் பேருக்குச் சோருக்கவும், கறிகளைச் சமைக்கவும், புதுமையான பலகாரங்கள் செய்யவும், வெந்நீர் வைக்கவும் ஆக எந்நேரமும் வேலையிருப்பதால் என்னல் எப்படி இயலும்?"என்றான். மூன்ருவதாக மிலேச்சன், "ஐயனே! விடியற்காலை எழுந்து காலைக் கடன் முடித்துப் பூஞ்சோலைகளிற் புகுந்து நாளரும்புகள் எடுத்து விந்தை விந்தையாய்த் தொடுத்துக் கடவுளுக்குச் சாத்தி வழிபாடு ஆற்றுகிறேன்; செய்யும் வேலை நிறைய இருப்பதால் நான் அடை காப்பது எப்படி?" என்றான்.

குரு இவற்றையெல்லாம் கேட்டு மற்றிருவரில் "மடையனுக்கு இங்கே வந்து போகிறவர்களை விசாரிக்கவும், அவர்கள் கொண்டு வருகிற வழக்குகளைச் சீர்தூக்கி முடிவுகூறவும் பொழுது சரியாகப் போய்விடுகிறது; மட்டிக்கு, எதற்காவது ஏவின சமயத்தில் கடைக்கும், சந்தைக்கும், பேட்டைக்கும் போய் வருவதற்கு வேலை இருக்கிறது; அவர்களாலும் அடை காக்கும் வேலையைச் செய்ய முடியாது. ஆதலால் நான்தான் அந்த முட்டையை மடியிலேயே வைத்துக் கொண்டு கையாலே தழுவி, போர்வையாலே மூடி, மார்போடணைத்து! அன்போடு பேணி அடைகாக்க வேண்டும். அதைவிட எனக்கு வேறு

வேலை என்ன? முட்டை விளைந்து, பொரித்துக் குதிரையைக் கண்டடைந்தால் போதும்" என்று முடிவாகக் கூறினர்.

புறப்பட்ட அந்த நாளில் நடுச் சாமத்தில் மட்டியும் மடையனும் தாங்கள் குறித்த ஏரிக்கரைச் சாரலில் அடையாளமான இடத்துக்குப்போய், சாம்பற் பூசணிக்காய் திரளாய்க் காய்த்துக் கிடந்ததைக் கண்டார்கள். அங்கு இருந்த குடியானவனைக் கண்டு "அப்பா! இந்தக் குதிரை முட்டைகளில் ஒன்றை எங்களுக்கு விலைக்குத் தருவாயோ?" என்று கெஞ்சிக் கேட்டார்கள். இவர்கள் மூடத்தனத்தைக் கண்டு "ஓ! ஓ! இந்த உத்தம சாதிக் குதிரை முட்டையை நீங்கள் விலை கொடுத்து வாங்கத்தக்கவர்களா? இது மிகவும் விலை பெற்றதாகும்" என்றனன். மட்டியும் மடையனும் "போமையா, போம்! இதற்கு ஐந்து பொன்தானே விலை. நாங்கள் என்ன அறியோமா? எங்களுக்குத் தெரியாதுபோல் நீர் ஏன் சும்மா உயர்த்தி உயர்த்திப் பாடுகிறீர். கைமேல் இதோ ஐந்து பொன்னையும் வாங்கிக்கொண்டு நல்ல முட்டையாய் ஒன்று தாரும்" என்றனர்.

: ஐயா, ஏதோ கெஞ்சிக் கேட்கின்றீர்கள், பாவம்! உங்கள் நற்குணத்தைப்பற்றி இந்த விலைக்குக் கொடுக்க இசைகிறேன். நல்லது. உங்களுக்கு விருப்பமான முட்டையைத் தெரிந்தெடுத்துக்கொள் ளுங்கள். ஆனல் இவ்வளவு மலிவாய் வாங்கினதாக விலையை மாத்திரம் வேறு எவரிடத்திலும் வெளியிடா திருங்கள்" என்றான். 'அதைப்பற்றி எங்களுக்கு ஆகவேண்டியதென்ன? அப்படியே வெளிப்படுத்த வில்லை" என்று கூறி எல்லாவற்றிலும் பெரியதான காய் ஒன்று தேடித் தெரிந்தெடுத்துக்கொண்டு, மறுநாள் காலை விடியுமுன் எழுந்து, மட்டியின் தலை மேல் முட்டையைப் பதனமாய் வைத்து மடையன்

வழிகாட்டிக்கொண்டு முன்னே போகையில், மட்டி, வியந்து சொல்லத் தொடங்கினன்.

"பெரியோர்கள், 'எல்லாம் தவப்பயனல் கை கூடும்' என்பார்கள். அதற்குச் சான்று இப்பொழுது கண்கூடாகக் கண்டோம். நம்முடைய குருநாதர் செய்து வருகிற தவப்பயன் இதுதான். நூறு நூற்றைம்பது பொன் பெறும் சாதிக் குதிரையை நாம் எத்தனை எளிதாக ஐந்து பொன்னுக்கு வாங்கிக் கொண்டு வருகிறோம், பார்" என்றான் மட்டி. அதற்கு மடையன் " இதிலே நினைப்பதற்கு என்ன இருக்கிறது? 'பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்' என்று சொல்வதைக் கேட்டதில்லையோ? நமது குரு புண்ணியம் செய்தவர் என்பது இப்பொழுது கிடைத்த இந்தக் குதிரையினளவிலேயே உள்ளங்கை நெல்லிக் கனிபோலத் தெரிகிறது. இன்னும் ஓர் எடுத்துக் காட்டு. என் தகப்பனர் மிக்க ஒழுக்க முடையவர் என்பதும், "யோகசாலி" என்பதும் அவருக்கு நான் கிருஷ்ணன் போல் பிள்ளையாய்ப் பிறந்ததினல் அல்லவா தெளிவாகக் கண்டு பெருமகிழ்ச்சி கூர்ந்தார்" என்று சொல்ல, மட்டி 'அதைக் குறித்தும் ஐயமா? விதையொன்று போடச் சுரையொன்று காய்க்குமா? ஆமணக்கு விதைத்தால் ஆச்சா முளைக்குமா? நல்வினை நன்மையைத்தான் தரும். தீவினை தீமையைத்தான் தரும்" என்றான்.

இப்படி மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டே நெடுந் தொலைவு கடந்து, பின்பு குறுக்கு வழியிற் போகும் போது அவ்வழியோரத்தில் சாய்ந்திருந்த மரத்தின் கொம்பு குறுக்கே பட்டு, மட்டி தலையில் இருந்த சாம்பற் பூசணிக்காய் தவறிக் கீழே நெருங்கிய புதரின் மேல் விழுந்து, அதன் நடுவிற்கிடந்த கல்லின் மேல் விசையாய்த் தாக்கித் தகர்ந்து உடைந்தது. அப்போதந்தப் புதரில் பதுங்கியிருந்த முயல் ஒன்று அதிர்ந்து

எழுந்து ஓடியது. அதுகண்டு "இதோ முட்டைக்குள் இருந்த குட்டிப் பரி ஓடுகிறது!" என்று கூவிக் கொண்டு, இருவரும் அதைப்பற்றிப் பிடிக்கப் பின் தொடர்ந்தார்கள். அவர்கள் காடும் செடியும், மேடும் பள்ளமும், கல்லும் கரடும், முள்ளும் முரடும் பாராமல் ஓடவே, உடுத்த ஆடை செடிகளிலே மாட்டிக்கிழிந்து கயிறு கயிறாகத் தொங்க, முட்கள் முதுகைக் கிழிக்க, கற்கள் காலில் உறுத்த, உடம்பெலாம் காயம்பட, குருதி பீறிட்டுப் பாய, ஊற்றிலிருந்து பெருகுவது போல் வேர்வை வடிய, நெஞ்சு பதைக்க, காதடைக்க, நாக்கு வறள, தாகம் மிக, குடல் குழம்ப, இரைப் பெடுக்க, பெருமூச்சு வாங்க ஓடியும், முயல் அகப்படா மல் அவர்கள் தவித்துத் தடுக்கி விழுந்தார்கள். இதற் குள்ளாக முயல் கண்ணிறைற் காணக் கூடாமல் மறைந்து வெகுதூரத்தில் ஓடிப்போய்விட்டது. அவர் களும் இளைப்பைப் பாராமல் எழுந்து கல்லும் முள்ளும் தைத்த காலால் நொண்டி நொண்டி வெயிலில் நடந்து அங்கங்கே தேடிச் சலித்துப் போய், அன்றைக்கெல் லாம் பசியுடன் பட்டினி கிடந்து மாலைக்குப் பின்பு மடத்துக்குச் சென்றார்கள்.

மடத்து வாசலில் நுழையும்போது "அட அப்பா! அட அப்பா!" என்று கூவி, வாயிலே மோதியடித்துக் கொண்டு கீழே விழுந்தார்கள். உள்ளேயிருந்தவர்கள் துணுக்குற்று ஓடிவந்து கைதூக்கி எடுத்து "என்ன அபாயம் வந்தது?" என்று கேட்க, நடந்த வரலாறெல் லாம் விவரமாய்ச் சொன்ன பிறகு, மட்டி என்பவன் தனக்குள்ளே வியந்து மற்றவர்களுடனே, "ஐயா! நான் பிறந்த நாள் முதல் இன்றைய வரையில் ஒரு காலும் இத்தனை வேகக் குதிரையைக் கண்டதேயில்லை. இது கறுப்புப் பாய்ந்த சாம்பல் நிறமாய், உயரத்தி லும் பருமனிலும் முயலை ஒத்ததாய், ஒருமுழ நீளமாய் இன்னும் முட்டைக்குள் கிடக்கும் குட்டியாய் இருந்தா

லும், இரு செவியும் விரித்துக்கொண்டு இரண்டு விரற்கிடை நீளமுடைய குறுவாலைத்தூக்கி நிலத்திலே மார்புபட நாலுகாலையும் விரித்து நீட்டி ஓடின சுருக்கும் வேகமும் சொல்லவும் நினைக்கவும் கூடாது" என்றான். அதைக் கேட்டு இவர்களெல்லாம் அங்கலாய்த்துக்கொண்டிருக்க, குருவானவர் அவர்களை அமர்த்தி, 'கூண்டோடே போச்சுது குளிருங்காய்ச்சலும்" என்றது போல, ஐந்து பொன் போனதன்றி அதனோடு குதிரைக் குட்டியும் போய்விட்டதே! சிறு குட்டியாயிருக்கும்பொழுதே இப்படிக் கடுமையாய் ஓட்டம் பிடித்தது; இனிமேல் வளர்ந்து பெரிய குதிரையாகும் காலத்தில் எப்படிப் பறக்கமாட்டாது? அச்சமில்லாமல் அத்தனை மன உறுதியோடு அதன் மேல் யார் ஏறியிருக்கப் போகிறார்கள். அப்பா, நான் கிழவன், அப்படிப்பட்ட வாயுவேகக் குதிரை பணச் செலவில்லாமல் சும்மா வந்தாலும் எனக்கு வேண்டாம்" என்றார்.

பயிற்சிகள்

1. "———" இவை இரட்டை மேற்கோள் குறிகள்; தன் கூற்றாக வரும்போதும், மேற்கோளாக ஒன்றை எடுத்துச் சொல்லும்போதும் இவை இடம்பெறும்.

   இப்பாடத்தின் முதல் பத்தியை உரையாடல் முறையில் தன் கூற்றாக மாற்றி எழுதி, இரட்டை மேற்கோள் குறியை ஏற்ற இடங்களில் இட்டுக் காட்டுக.

2. அதுபோலவே, இரண்டாம் பத்தியில் வரும் இரட்டை மேற்கோள் குறிகளை எடுத்துவிட்டு, தன்கூற்றை அயல்கூற்றாக மாற்றி எழுதிக் காட்டுக.

3. குதிரை முட்டையை யார், எங்கே, எப்பொழுது கண்டனர்?

4. தான் அடைகாக்க முடியாதென்பதற்கு, மடையன் கூறிய காரணம் என்ன ?

5. தாமும் அடைகாக்க முடியாதென்று மூடனும், மிலேச்சனும் ஏன் மறுத்தனர் ?

6. குரு அதற்கு என்ன கூறினர் ?

7. மட்டிக்கும் மடையனுக்கும், பூசணிக்காய்க் காரனுக்கும் நடந்த உரையாடலைச் சுருக்கி எழுதுக.

8. மட்டி மடையர்களாக இருவர் கருதிக்கொண்டு, முட்டையை எடுத்துக்கொண்டு வரும்போது அவர்களுக்குள் நிகழ்ந்த உரையாடலை உங்கள் நடையிலேயே நடத்திப் பாருங்கள்.

9. "பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்" இதைப்போல இன்னும் பாடநூலில் வரும் பழமொழிகளைத் தொகுத்தெழுதுக.

10. குறுக்கு வழியிற் போகும்போது குதிரை முட்டை என்ன ஆயிற்று ?

11. குட்டிப் பரியைத் துரத்திக்கொண்டு அவர்கள் ஓடியதைச் சுருக்கி விளக்குக.

12. காலம் தாழ்க்காமல், அடைகாப்பது, வழிபாடு, சான்று, கண்கூடு, கல்லும் கரடும், துணுக்குற்று, அங்கலாய்த்து—இத்தொடர்களை விளக்கித் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

13. இதில் உள்ள நகைச்சுவையை இரண்டு எடுத்துக்காட்டுகளால் விளக்குக.

14. ஆற்றுதல், பதனம், பரி, குருதி, பீறிடல்—இச்சொற்களுக்கு அகராதி பார்த்துப் பொருள் தெரிக.

8. கலைப் புரவலர்

செந்தமிழ்நாடு அன்று முதல் இன்று வரை தன் பண்டைப் பெருமைகளினின்று ஒருவாற்றானும் குறையாது விளங்கி வருகின்றது. தொல்காப்பிய நூலின் காலத்திற்கு முன்பிருந்தே நம் தமிழ்நாடு பண்பட்டு நாகரிக நாடுகளில் முதலிடம் பெற்று விளங்கியது. இதற்குக் காரணம் யாது?

செந்தமிழ்நாட்டில் கலையையும் கல்வியையும் தங்கள் இரு கண்மணிகளென மன்னரும் புரவலரும் போற்றி வளர்த்தனர். அவர்கள் தம் வாழ்க்கையின் பெரும்பகுதியைப் புலவருடனும் கலைஞருடனும் போக்குவதிலேயே கழித்தனர்.

சங்க காலத்தில் மன்னர்களே செந்தமிழ்ப் புலவர்களாக இருந்து தமிழன்னைக்குத் தொண்டாற்றி வந்தார்கள். கடையெழுவள்ளல்கள் புலவருக்கும் கலைவாணருக்கும் வேண்டியவற்றை வேண்டியாங்கு வரையாது வழங்கி வசையிலா இசையை நிறுவினர். பின்னர், குறுநில மன்னர்களும், சமீன்தார்களும், மிட்டாதார்களும் தமிழைப் போற்றி வளர்த்தனர்.

கடந்த ஒரு நூற்றாண்டாக மடத்தலைவர்களும் அரசியலாரும் போற்றி வருகின்றனர். ஆனால் இன்றோ, தெருவெல்லாம் தமிழ் ஓசை! வீசும் காற்றெல்லாம் கலைமணம்! இதற்குக் காரணம்தான் என்ன? தமிழின் பிரிவுகளாகிய இயல், இசை, நாடகம் என்ற மூன்றனுள் பின்னவையாகிய இசை நாடகம் இரண்டும் சமய காலத்தில் புறச்சமயத்தாரால் புறக்கணிக்கப் பட்டன. சைவ வைணவ சமய ஆசிரியர்கள் இசையையும் இறைவன் பூசனையோடு இயைத்துப் போற்றி வளர்த்தனர். இன்றைய தமிழ்நாடு தமிழுக்கு முழு ஆதரவையும், அன்பையும், தொண்டையும் அளிப்பதற்குக் காரணம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் என்று கூறலாம்.

மன்றுள் ஆடும் மணியாய் விளங்கும் பொன்னம் பலநாதனை வழிவழியாக வழிபட்டு அவன் அருளுக் குரியராய் விளங்கிய கானாடுகாத்தான் உயர்திருவாளர் முத்தையா செட்டியார் குடும்பத்தினரில் தில்லையம் பதியிலே மீனாட்சி கல்லூரியைப் பல்கலைக் கழகமாக் கிய பெருமை அம் முத்தையா செட்டியார் மூன்றும் குமாரரான [illegible] செட்டிநாட்டு அரசர். அண்ணா மலை [illegible] சாரும். தமிழன்னை தலைநிமிர்ந்து நிற்கச் செய்தவர் நம் செட்டிநாட்டு அரசர் என்று கூறலாம். இறையன்பும், கலையன்பும், தாய்மொழிப் பற்றும் வழி வழியாகக் கொண்டவர்களின் மரபில் வந்த காரணத்தினால் கருவிலே திருவுடையராய அண்ணாமலைச் செட்டியார் கலை விருப்பத்தையும் மொழி விருப்பத்தையும் ஒருங்கே கொண்டிருந்தார்.

இவர் 1881-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ஆம் தேதி தமிழ் அன்னையும் கலையணங்கும் களிநடம்புரியக் கானாடு காத்தானில் நகரத்தார் வகுப்பின் மாணிக்க மாகத் தோன்றினார். தந்தையைப் போலவே தனய னும் கொடைவள்ளலாக விளங்கினார். கல்வி பயிற்றிய ஆசிரியர் பலரால் நம் செட்டியாரின் கலை, மொழி விருப்பம் முன்னையினும் மிகுதியாகப் பெருகி வளர்ந் தது.

இவர் தம் வாழ்க்கையில், ஐரோப்பா முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்துள்ளார். ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ், அமெரிக்கா, பெல்ஜியம், பிரான்சு முதலிய நாடுகளில் சுற்றிவந்தபொழுது ஆங்காங்குத் தாம் கண்ட காட்சிகளையும், கருத்துக்களையும், முறை களையும் தமிழ் நாட்டுக்கலை, மொழி ஆகிய இரண்டை யும் நன்கு வளர்க்கப் பயன்படுத்த வேண்டும் என்று கருதினார்; இயற்கையாகவே தம்மிடத்தில் உள்ள கலை விருப்பினால், சுற்றுப்பிரயாணத்தில் தாம் அறிந்து கொண்ட கலைச்சுவைகளையும் அழகுகளையும் ஒருங்கு

திரட்டி, 1929-இல் பல்கலைக்கழகமாக்கி, அதற்கு இறைவன் பெயராகிய அண்ணுமலை என்பதனையே பெயராகச் சூட்டினர்; நெடுநாளாகப் பிள்ளைப்பேறிலாத ஒரு செல்வன் பின்னர்ப் பிறந்த குழந்தையை எங்ஙனம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ப்பானே அங்ஙனமே நாளுக்கு நாள் புதுக் கல்வித் துறைகளை ஏற்படுத்திப் பல்கலைக் கழகமாகிய செல்வக் குழந்தையைப் போற்றி வளர்த்தார்.

ஒரே செல்வனுல் இத்தகையதொரு பெரிய பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது என்பது உலகிலேயே இல்லாத ஒரு புதுமையாகும். தாம் இன்புறுமாறு உலகம் இன்புற வேண்டும் என்ற உயர்நோக்கும், வழிவழியாக வரும் ஈகைக் குணமும், பரந்து நின்ற உள்ளமும், மொழி கலை ஆகிய இரண்டினிடத்தும் கொண்ட ஆழ்ந்த பிணிப்புமே பல்கலைக் கழகத் தோற்றத்திற்குக் காரணங்கள். இக்கழகத்தில் பல கலைகளையும் கற்பிக்கவும், கற்கவும், ஆராய்ச்சி செய்யவும் வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

"ராஜா ஸர் அண்ணுமலை இசைக் கல்லூரி" என்று ஓர் இசைக் கல்லூரியையும் பல்கலைக் கழகத்துடன் இணைத்தார். எதிர்காலத்தில் தமிழன்னைக்கு வழி காட்டும் வீரத் தமிழர்களே அங்கு இன்றும் இருந்து தமிழ் இசையை ஆய்ந்து வருகின்றனர்.

செட்டிநாட்டரசர் தமிழிடத்தும், தமிழ் நாட்டிடத்தும் தனிப் பற்று வைத்திருந்தார். உலகிற்கு நாகரிகத்தைக் காட்டிய தென்னிந்தியாவில் செந்தமிழ்ப் புலவர் அன்று தொட்டு வாழ்கின்றனர் என்பதற்கும் கருத்தைப் பிணித்து இறைவனிடத்துச் செலுத்தும் தன்மைகொண்ட தாய்மொழி தமிழாக அமைந்தது என்பதற்கும், கலையரசர் இவ்விரண்டிடத்தும் தனிப் பற்றுக்கொண்டார். ஆனல், தன் நாடு, தன் மொழி, தன் கலை வாழவேண்டும் என்ருல் பிறர் நாடு, பிறர்

மொழி, பிறர் கலை அழியவேண்டும் என்ற எண்ணம் நம் அண்ணாமலை அரசரிடத்துக் கனவிலும் தோன்ற வில்லை. உள்ளம், சொல், செயல் மூன்றையும் தூய்மை நெறியில் செலுத்தும் ஆற்றல்கொண்டே இறுதிவரை நம் கலையரசர் வாழ்ந்தார்.

ADURA TAMIL S

வந்தவரை வாழ்விக்கும் தமிழ்நாடு, பிற இசை, கலை மோகத்தால் தமிழ் இசையையும் தமிழ்க் கலையையும் மறக்கத் தொடங்கியது. நம் அண்ணாமலை அரசர் உள்ளம் உருகியது. மனம் தளர்ச்சி அடையவில்லை. முயன்றால் வெற்றி என்று முயன்றார்; வெற்றியும் கொண்டார்; கல்விக்குக் கலைக்கழகமும், இசைக்கு இசைக் கல்லூரியும் ஏற்படுத்தினர்.

1941-இல் தமிழ்இசை இயக்கம் தென்னாட்டில் நம் அரசர் தலைமையில் தொடங்கப்பட்டது. இது காரணமாகக் கலையரசர் பல்லாயிரம் வெண்பொற் காசுகள் அள்ளி வீசியுள்ளார். கானாடுகாத்தான், அண்ணாமலை நகர், சென்னைபோன்ற இடங்களில் தமிழிசை மாநாடுகள் கூட்டினர். தமிழ் இசையின் தனிச் சிறப்பை வெறுப்பு மனப்பான்மையின்றிக் கூறினர். தூய்மையான உள்ளத்துடன் அன்று அவர் போட்ட தமிழ் இசைவிதை மரமாகி, பூவாகி, காயாகிப் பழுத்துத் தமிழ்ப் பாடல்களாகப் பயன்படுகின்றது. காற்றினில் மிதந்துவரும் இசையெல்லாம் தமிழ் மயமாக உள்ளது.

கலைக்கும் மொழிக்கும் தம் உடலையும் பொருளையும் கொடுத்த அண்ணல் வசையிலாப் புகழ்பெற்று வாழ்தலைக்கண்டு அழுக்காறு கொண்ட கூற்றுவன் அவர் இன்னுயிரைக் குடித்தான். அண்ணல் அண்ணாமலையார் சர்வதாரி ஆண்டு உயிர் நீத்தார்.

தமிழ் இயலுக்கும் இசைக்கும் இடம் நிறுவிய செட்டிநாட்டு அண்ணல் இன்னும் சில ஆண்டுகள்

இருந்திருப்பரேல், உறுதியாக நாடகத்திற்கும் நிலையான இடம் நிறுவியிருப்பார். அவர்தம் திருக்குமாரர் உயர்திரு. அரசர். மு. முத்தையா செட்டியார் அவர்கள், இக்குறையைப் போக்கி நிறைசெய்வார் என்று எதிர்பார்ப்போமாக.

பயிற்சிகள்

1. "கலைப்புரவலர்" என்னும் பெயர் அண்ணாமலை அரசருக்கு எவ்வாறு பொருந்தும்? (15 வரிகள்)
2. இவர் ஐரோப்பியப் பிரயாணத்தில் கண்டறிந்தவற்றால் பெற்ற பயன் யாது?
3. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தோன்றியதற்குரிய காரணங்கள் யாவை?
4. அண்ணாமலை அரசரின் தாயமொழிப் பற்றை விளக்குக.
5. தமிழ் இசையை அரசர் போற்றி வளர்த்தது எப்படி?
6. கண்மணிகள்என, அன்று முதல் இன்று வரை, தலைநிமிர்ந்து நிற்க, கலைவிருப்பம், குறையைப் போக்கி நிறை செய்வார்—இவற்றைத் தனித் தனியே வாக்கியங்களில் வைத்து எழுதுக.
7. சிதம்பரம்—அண்ணாமலைப் பல்கலைக்கழகம்—இவற்றைப் பற்றிச் சிறுகுறிப்புகள் வரைக.
8. பண்டு, வள்ளல், கடைவள்ளல், மன்று, நடம், பிணிப்பு—இச்சொற்களுக்கு அகராதி பார்த்துப் பொருள் காண்க.

9. இராசேந்திரன் மேற் செலவு

சோழநாட்டை ஆண்ட அரசர்களுள் மிக்க புகழ் பெற்றவன் இராசராசனின் மகனான இராசேந்திரன். இராசராசன் காலத்தில் சோணாடு குமரி முதற் கலிங்கம் வரையிலும் பரவியிருந்தது. தமிழகம், இசை, சிற்பம், கலை, சமயம் முதலிய துறைகளில் புத்தொளி பெற்று விளங்கிற்று. இராசராசனுக்குப் பின் அவன் மகன் இராசேந்திரன் அரியணை ஏறினான்.

இராசேந்திரனுடைய தாயார் வானவன் மாதேவி யெனும் திரிபுவன மாதேவியார். இராசேந்திரன் தன் தாயுடன், கும்பகோணத்திற்கு அருகிலுள்ள பழையாறை என்னுமிடத்தில் இருந்த அரண்மனையில், இளமைப் பருவத்தைக் கழித்தான். தந்தையாகிய இராசராசன் அரியணை யேறிய காலத்திலேயே இராசேந்திரன் இளவரசனாக முடி சூட்டப் பெற்றான். இராசராசன் முப்பத்தோராண்டுகள் நாட்டை ஆண்டு வந்தான். அக்காலம் முழுதும் தந்தைக்கு உதவியாய் அரச காரியத்தில் பெரும்பகுதியை இராசேந்திரனே மேற்கொண்டு நடத்தினான். தந்தை அடைந்த பல வெற்றிகளுக்கும் இராசேந்திரனே காரணமாவான். இவனே படையை நடத்திச்சென்று போர் பல புரிந்து வெற்றி கண்டான்.

இராசராசன் தன் வாழ்நாளிலேயே இராசேந்திரனுக்கு முடி சூட்டிவிட்டு, கிடைத்தற்கரிய பேறாகிய "வீடு" அடையும் வழியிற் செல்ல முற்பட்டான். இராசேந்திரன் கி. பி. 1012-இல் சோழ நாட்டின் அரசனாக அரசு கட்டில் ஏறினான்.

இராசேந்திரன் பட்டமெய்திய காலத்தில் சோழ நாடு தெற்கே குமரி முதல் வடக்கே கலிங்கம் வரையில் பரவியிருந்தது. கைவசமுள்ள நாடுகளைப் பற்றி அரசன் கவலைப்பட வேண்டாத வகையில் அவன் சார்பாளர்கள் (பிரதிநிதிகள்) ஆட்சி புரிந்தனர். எனவே அரசன் கவலையின்றி ஆண்டுவந்தான்.

தனது ஆட்சியின் ஏழாம் ஆண்டில் தன் மகன் இராசாதிராசனுக்கு முடி சூட்டினான். தந்தையும் மகனும் ஒன்றாக இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர்.

பட்டத்திற்கு வந்த மூன்றாவது ஆண்டிலிருந்து இராசேந்திரன் பிற நாடுகளின்மேற் செல்லத் தொடங்கினான். தொடக்கத்தில் இடைத்துறை நாடு, கொள்ளிப்பாக்கை, மண்ணைக் கிடக்கை முதலிய நாடுகளை வென்று அடிப்படுத்தினான். அடுத்ததாக இலங்கையின் மேல் படையெடுத்துச் சென்றான். ஈழ அரசன் ஐந்தாம் மகிந்தனைப் போரில்வென்றான். வெற்றி கொண்ட சோழன் மணி முடிகளையும், அணிகலன்களையும், அரச சின்னங்களையும் கைப்பற்றித் தன் நாட்டுக்குக் கொணர்ந்தான். இப் படையெடுப்பின்

வாகை சூடிய கங்கை கொண்ட சோழன்

பயனாக ஈழமண்டலம் முழுவதும் சோழர்கள் வசமாயிற்று. ஈழப்படையெடுப்பின் பிறகு, சேர பாண்டிய நாடுகளில் தன் ஆணை நிலைத்து நிற்க, அந்நாடுகளுக்

கும் படையெடுத்துச் சென்றான். அதன் பின் சளுக்கிய நாட்டை ஆண்ட ஜயசிம்மனுடன் முயங்கி என்னுமிடத்தில் பொருது வெற்றி கொண்டான்.

இவ் வெற்றிக்குப் பிறகு இராசேந்திரன் தன் னாட்டைக் கங்கை நீரால் புனிதமாக்க விரும்பினான். தன் சேனைத் தலைவனை அனுப்பிக் கங்கைக் கரை வரையில் உள்ள பகையரசர்கள் எல்லோரையும் வென்று வருமாறு கட்டளையிட்டான். சேனைத் தலைவனை [illegible]கா தண்டநாயகன அரசன் ஆணையைத் தலைமேற் கொண்டு வடநாடு நோக்கிச் சென்றான். மத்திய மாகாணப் பகுதியைச் சேர்ந்த சக்கரக் கோட்டம், மகாகோசலம், ஒட்டரம் முதலியவைகளையும் வென்று பெருநிதிக் குவியலைப் பெற்றான். இப்பெரு வெற்றிக்குப் பிறகு தண்டபுத்தி, தக்கணலாடம், கீழ்வங்காளம் முதலிய நாடுகளை வென்று சோழப்பேரரசிற்கு உட்படுத்தினான். உத்தரலாடத்தை ஆண்டுவந்த மகிபாலன் சோழத் தலைவனின் சங்க நாதத்திற்கு அஞ்சிப் போர்க்களத்தை விட்டு ஓடிப்போனான். அவனது யானைகளையும் பெண்டிர், பண்டாரங்களையும் பிடித்துக்கொண்டு சோழனுடைய தண்ட நாயகன் கங்கைக் கரையை யடைந்தான். பகைவர்களை முறியடித்தான். தோல்வியுற்ற அரசர்களின் தலையில் கங்கை நீரைச் சுமக்கச் செய்து தண்ட நாயகன் வாகை சூடித் திரும்பினான். இவ்வாறு வெற்றியுடன் திரும்பிய மஹா தண்ட நாயகனை இராசேந்தின் கோதாவரி நதிக்கரையில் எதிர் கொண்டு வரவேற்றான்.

இப் பெரு வெற்றியின் அறிகுறியாக ஒரு புது நகர் கண்டான். அந்நகரில் [illegible] கொண்ட சோழேச் சு[illegible] என்னும் சிவன் கோவிலை எடுப்பித்தான். கங்கை நீரினால் தான் கட்டிய கோயிலைத் தூய்மையாக்கினான். ஊருக்கருகில் சோழகங்கம் என்னும் ஏரியையும் வெட்டித் தான் கொணர்ந்த கங்கைநீரை

அதனுட்பெய்து அதனைத் தூய்மையாக்கினான். இவற்றால் இராசேந்திரனுக்குக் "கங்கை கொண்ட சோழன்" என்னும் சிறப்புப்பெயர் வந்தெய்திற்று.

இராசேந்திரன் போர்ச் செலவு இத்துடன் நிற்கவில்லை. கடற்படை வலிமை மிக்கவனாதலின் கடல் கடந்து கடாரம் சென்றான். கடார அரசனை வென்று அந் நாட்டையும் கைப்பற்றினான். ஒரே படையெடுப்பில் கடாரத்திற்கும் அப்பாலுள்ள மலேயா, சுமத்ராவைச் சேர்ந்த ஸ்ரீ விஷயம், பன்னை, மலையூர், மாயிருடிங்கம், இலங்காசோகம், மாப்பப்பாளம், மேவிலிம்பங்கம், வளைப்பந்தூறு, தலைத்தக்கோலம், மாதமலிங்கம், இலாமுரி தேசம், மாநக்கவாரம் முதலிய இடங்களையும் கைப்பற்றினான்.

தந்தை வைத்துச் சென்ற பெருநிலப் பரப்போடு வட நாட்டையும் தன்னகப்படுத்திய இராசேந்திரன் செங்கோல் கடல் கடந்தும் சென்று நிலவியது. இராசேந்திரனைப் போன்ற தமிழரசர்களின் பெருமை உலக சரித்திரத்தில் சிறப்பான இடம் பெறும் என்பதில் ஐயமில்லை.

பயிற்சிகள்

1. இராசராசன் காலத்தில் சோழ நாட்டின் பரப்பையும், அது புத்தொளி பெற்று விளங்கிய துறைகளையும் கூறுக.
2. இராசேந்திரனது இளமைப் பருவத்தைப் பற்றிச் சுருக்கி வரைக.
3. இராசேந்திரன் ஈழ நாட்டை எவ்வாறு கைப்பற்றினான்?
4. "கங்கை கொண்ட சோழன்" என்று இராசேந்திரனுக்குப் பெயர் வருவானேன்?
5. கடல் கடந்து இராசேந்திரன் மேற் சென்றதைக் கூறி அவன் அங்கு வென்ற ஐந்து இடங்களின் பெயர்களைக் குறிக்க.

6. இராசராசன் வட நாட்டு மேற் செலவைச் சுருக்கி ஒரு கட்டுரையாக (15 வரிகளுக்குள்) வரைக.
7. பெரு நிலப்பரப்பு, கைப்பற்று, ஆணையைத் தலைமேற் கொண்டு, புத்தொளி-இத்தொடர்களை விளக்கி, அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.
8. அரியணை, அரசுகட்டில், மணிமுடி, ஆணை, வாகை, குவியல், பண்டாரம்—இச் சொற்களின் பொருள்களை அகராதியிற் பார்த்து எழுதுக.

10. நான் கண்ட பொருட் காட்சி

என் பெயர் கோவிந்தன். எங்கள் ஆசிரியர் குறிப்புப் புத்தகத்தின் பயனைப்பற்றி எங்கட்கு இவ்வாண்டுத் தொடக்கத்திலேயே சொன்னார். நான் கண்டவற்றுள் சிறப்பானவற்றை நாளிட்டு அப்புத்தகத்தில் குறித்து வைப்பது வழக்கம். அவற்றுள் ஒன்றை—யான் நேரில் கண்டதை—உங்கட்குக் கூறுகிறேன், கேளுங்கள்.

சென்னை,
28—12—1949.

சென்னையில் இந்த ஆண்டு டிசம்பர் மாதம் இறுதியில் தேனம்பேட்டை காங்கிரஸ் வெளியிடத்தில் நடைபெற்ற அகில இந்தியப் பொருட் காட்சி காணத் தக்கது. அக்காட்சியில், இந்தியாவில் இந்தியரால் செய்யப்படும் பெரும்பாலான பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றை எல்லாம் ஒரே இடத்தில் காண உதவி செய்வது இத்தகைய பொருட்காட்சியே அன்றோ? நான் அவற்றைக் கண்டு மகிழ்ந்தேன்.

அதனைப் பார்க்க ஆயிரக் கணக்கான மக்கள் நாளும் வந்துகொண்டிருந்தனர்; நுழைவுச் சீட்டு நான்

களைவாக இருந்தும், ஆயிரக் கணக்கான மக்கள்—ஆடவர், பெண்டிர், சிறுவர், சிறுமியர்—எல்லோரும் வந்து பார்த்தபடி இருந்தனர். திருவிழாவுக்கும் இத்துணை ஆயிரம்பேர் வரமாட்டார்களே!' என்று கண்டவர் வியந்து கூறினர். காட்சிச் சாலையின் வாயிலுக்கு எதிரில் மோட்டார்கள், குதிரை வண்டிகள், கோச்சு வண்டிகள், ரிக்ஷா வண்டிகள் முதலிய ஊர்திகள் எப்பொழுதும் காத்துக்கொண்டேயிருந்தன.

நான், நுழைவுச் சீட்டுப்பெற்று உள்ளே சென்றேன்; வரிசை வரிசையாக இருந்த கடைகளைக் கண்டேன். கதர்த்துணிக் கடைகள் ஒரு வரிசை; மரச் சாமான் கடைகள் ஒரு வரிசை; "பெப்பர் மின்ட், ரொட்டி, பிஸ்கட்" முதலிய தின்பண்டக் கடைகள் ஒரு பால்; அப்பளம், வடவம், பெருங்காயம், ஊறுகாய் வகைகள் இவற்றைக் கொண்ட பல கடைகள்; பல வகை உலோகங்களால் ஆன பாத்திரக் கடைகள்; மணிமாலைகள், சோப்புகள், ஊற்றுப் பேனா முதலிய சில்லறைப் பொருள்களைக் கொண்ட கடைகள், பாய், சமக்காளம், பட்டாடைகள் முதலியவை கொண்ட கடைகள்; கண்ணாடி வளையல்கள் செய்யும் கடைகள்; இந்தியாவில் செய்யப்படும் மருந்து வகைகளைக் கொண்ட கடைகள்—இங்ஙனம் பல வகைப்பட்ட கடைகளை நான் கண் குளிரக் கண்டேன்.

கடற் பொருளாகிய முத்துச் சிப்பி, சங்கு, மணிகள் இவற்றால் செய்யப்பட்ட மாலைகள் கண்ணைக் கவர்ந்தன. நான் இரண்டு பெண்கள் இராட்டினத்தில் நூல் நூற்றதைக் கண்டேன்; அவர்களிடம் சிறிது நேரம் பேசினேன். அவர்கள், 'தம்பி, இந்நூல் நூற்பதால் ஆளுக்குத் தினம் இரண்டணா கிடைக்கிறது. இவ் வேலை எங்கள் போன்ற ஏழைப் பெண்களுக்கே ஏற்பட்டது. பழைய தமிழ் நாட்டில் எங்களைப் போன்ற பெண்களே இத்தொழிலைச் செய்து

வந்தார்கள் என்பதைத் தமிழ் நூல்களே கூறுகின்றன" என்று கூறினார்கள். நான் அவர்கள் தமிழ் அறிவை நினைத்து வியப்பும், அவர்கள் ஏழ்மையை எண்ணி இரக்கமும் கொண்டேன்.

சென்னை மாகாண உழவுத்துறை அலுவலர்களும் அங்குச் சில கண்காட்சிக் கடைகள் வைத்திருந்தார்கள். நான் அவற்றை நோக்கினேன். பல வகை நெற்கதிர்கள், சோளம் முதலிய தானிய வகை இவற்றைத் தனித்தனிக் கண்ணாடிப் பெட்டிகளில் வைத்திருத்தல் கண்டேன். தேங்காய் முதலிய காய்கறிகள் நான் பார்த்த அளவை விடப் பெரியனவாக இருந்தன. நான் அவற்றைக் கண்டு வியந்தேன்; அங்கு இருந்தவரைக் கேட்டேன். நல்ல எரு, நல்ல கண்காணிப்பு இவையே அவற்றின் பருமனுக்குக் காரணம் என்பதை அவர் கூறினார்.

காட்சிச் சாலையில் ஒரு பக்கம், "கள்ளைக் குடியாதே. அஃது உனக்கு மட்டும் கூற்று அன்று; உன் மனைவி மக்கட்கும் கூற்று" என்ற வாக்கியங்கள் எழுதப்பட்ட பலகைகள் தொங்க விடப்பட்டிருந்தன. நான் அவற்றைப் படித்தேன். குடிகாரன் தன் குடிவெறியில் செய்யும் குற்றம் அவனுக்குக் கூற்றாய் முடிகிறது. அவன் உயிர் போகுமாயின், அவன் குடும்பம் துன்பப்படும் அல்லவா? ஆகவே கள் குடிப்பவனுக்கு மட்டும் அன்று, அவன் மனைவி மக்கட்கும் கூற்று என்பது முற்றும் உண்மையே என்பதை உணர்ந்தேன்.

இவ்வாறு யான் எண்ணமிட்டுக் கொண்டே நின்று கொண்டிருந்தபோது வானொலியில் தமிழ்ப் பாட்டுப் பாடப்பட்டது. ஆ! என்ன இனிய குரல் ஓசை! பாடியவர், 'ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற' என்று தொடங்கும் இராமலிங்க அடிகளது அருட்பாவைப் பாடினார். நான் அதன் பொருளை

அறிவேன். என் மனம் பொருளிலும் இசையிலும் ஈடுபட்டது. நான் என்னை மறந்தேன்.

பாட்டும் நின்றது. நான் அப்பொழுதுதான் மணி ஒன்பது என்பதை அறிந்தேன். அகில இந்தியப் பொருட் காட்சிச் சாலையைப்போல மாவட்டம் தோறும் காட்சிச் சாலைகள் வைத்தல் நலம். அது குடியானவரையும், தொழிலாளரையும் அறிவாளிகள் ஆக்கும்; பொதுமக்கட்கு நாட்டுப் பொருள்கள்மீது நாட்டத்தை உண்டாக்கும்; நாட்டுப் பற்றையும் வளரச் செய்யும் என்பதை நான் அன்றுதான் உணர்ந்தேன். நீங்கள் இத்தகைய பொருட் காட்சிச்சாலைகளைத் தவறாது பார்க்க வேண்டும்; பார்த்து, அறிய வேண்டுவனவற்றை அறிதல் வேண்டும்.

பயிற்சிகள்

1. கோவிந்தன் குறிப்புப் புத்தகம்—நீ இதைப் பற்றி யாது அறிவாய்?
2. அகில இந்தியப் பொருட்காட்சிக்கு வந்திருந்த கடைகளின் பெயர்கள் எவை?
3. நம்மவர் எவ்வெப் பொருளைச் செய்கின்றனர்?
4. 'உழவுத்துறை'—யாது? அஃது இருப்பதன் நோக்கம் யாது?
5. நூல் நூற்ற பெண்கள் கோவிந்தனிடம் யாது கூறினர்? நீ அதனால் அறிவது யாது?
6. கண்காணிப்பு, கூற்று, மாவட்டம், இவைகளுக்கு அகராதி கண்டு பொருள் கூறுக.

11. பாரதியார்

பாரதியார் தமிழ் உலகத்தையும் தமிழ் இனத்தையும் புதுமுறையில் திருப்பிய சீர்திருத்தப்புலவர். இவர் வாழ்ந்த காலத்தில், ஏன் என்று கேட்பாரிலாத நம் தமிழன்னையை அரியணையில் ஏற்றி வைக்கும் ஆற்றல் மிக்கவர் பலர் இலர். நம் பாரதியாரே அப்பணியை மேற்கொண்டார்.

பாரதியார் பிறந்த ஊர் தமிழ் வளர்த்த பாண்டிய நாட்டைச் சேர்ந்த எட்டையபுரம். இது சிற்றரசு மன்னர் ஆட்சிக்கு உட்பட்டது. மன்னர் செழுந்தமிழ்த் தேனைப் பருகி வளர்ந்தவர். ஆகவே தமிழ்ப்புலவர்க்கு உறைவிடமாக எட்டையபுரம் காணப்பட்டது.

பாரதியாரின் தந்தையார் சிவலப்பேரிச் சின்னசாமி ஐயர் என்பவர். இவர் முதல் மனைவியார் உருவும் திருவும் பெற்று இலங்கிய இலட்சுமி அம்மையார். இவ்விருவருக்கும் தமிழ் நாடு செய்த பெருந்தவப் பயனாய்ப் பாரதியார் தோன்றினர். இவர் தம் ஐந்தாம் ஆண்டு முடிவதற்குள் அன்னையாரை இழந்தார். தந்தையார் வள்ளியம்மையார் என்ற கற்பினுக்கரசியை இரண்டாம் மனைவியாக மணந்துகொண்டார். இவ்வம்மையாரிடத்திலேயே நம் பாரதியார் மிகவும் செல்வமாக வளர்ந்தார். பாரதியை வீட்டில் "சுப்பையா" என்று யாவரும் அழைப்பர்.

பாரதிக்குத் தமிழ்மொழி கற்பித்த முதல் ஆசிரியர் அவர் தந்தையாரே. ஆங்கிலம், கணிதம், வடமொழி, இந்தி என்ற கல்விகளைத் திருநெல்வேலியிலும், காசியிலும் பெற்றார். பாரதியின் சுவை தமிழிலேயே ஆழ்ந்து இருந்தது. இவர் தமிழ் அன்னைக்குத் தம்மையே உரிமையாக்கினர்.

பாரதி இளமை முதற்கொண்டே சோலை, கோயில், ஆற்றோரம் போன்ற இயற்கைச் சூழல்களி

லேயே தங்குவார். தாம் இளைஞர் என்பதை மறந்து, அச்சமும் கூச்சமும் இன்றி, தம்மை விட அறிவில் சிறந்த பெரியோரிடம் பழகி, கடவுள் இயல்புகளை ஆராய்ச்சி செய்வார். இவர் தம் ஏழாம் வயதிலேயே இளங் கவிஞராய்த் திகழ்ந்தார். தம் பதின் மூன்றும் வயதில் பல உயர்பெரும் புலவர் குழுவினரால் கொடுக்கப்பட்ட "பாரதி" என்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

பாரதி எதிர்காலத்தில் உயர்ந்த நோக்கத்திற்குப் பாடுபடுவார் என்பதற்கும், தமிழன்னைக்குப் பல தொண்டுகள் ஆற்றுவார் என்பதற்கும், நாட்டுப் பற்றைத் தெருவெலாம் தெளிப்பார் என்பதற்கும் இளமைப் பருவத்திலேயே அவரிடம் அறிகுறிகள் தோன்றலாயின.

பாரதியாருக்குப் பதினைன்காம் வயதில் திருமணம் நடந்தது. இவர் வாழ்க்கைத் துணைவியாரே திருமதி செல்லம்மாள். பாரதியின் திருமணம் நிகழ்ந்த பிறகு தந்தை சின்னசாமி ஐயர் காலம் சென்றார்.

பாரதியார் மெக்காலே திட்டப்படி நடத்தும் அடிமைக் கல்வியை வெறுத்தார். உரிமையை அடிப்படையாகக் கொண்ட அடிப்படைக் கல்வியை விரும்பினர். பள்ளிப் படிப்புக்கு என்று ஆயிரக்கணக்காகப் பணம் செலவழித்தும், வாழ்க்கைக்கும் பள்ளியறிவுக்கும் தொடர்பே இல்லையே என்று மனம் வருந்தினர்.

பாரதியார் காசிக்குச் சென்று தமது அத்தை வீட்டில் இருந்துகொண்டு கல்வி கற்றார். கல்வி கற்று முடிவு அடைவதற்குள் தமிழ்ப் பற்றும், நாட்டுப் பற்றும் பாரதியைக் காசியை விட்டு வெளியேற்றின. தம் கருத்துக்களை நாட்டுக் கவிகளாக மலர்வித்தார். தூக்கத்திற் கிடந்த நாட்டுக்கு ஊக்கமும் உள்ளக்

கிளர்ச்சியும் தந்தார். இன்று தமிழ் நாடு நாட்டு வாழ்க்கை இயலில் முன்னணியில் நிற்கின்றது என்றால் இதற்கு முதற்காரணம் நம் பாரதியின் தேசியக் கவிகள் ஊட்டிய சக்தியே.

காசிப்படிப்பை விட்டவுடன் எட்டையபுரம் மன்னர் வேண்டுகோளுக்கு இணங்கித் தம் குடும்பத்துடன் எட்டையபுரத்தில் வந்து தங்கலானார். மன்னன் மனம் மகிழச் செந்தமிழ்த் தேனை ஊட்டுவதும், புலவர் பலருடன் பொழுது போக்குவதுமே பாரதியாரின் வேலைகள். அரண்மனை வேலையும் நாளடைவில் அலுத்தது.

பாரதியார் எட்டையபுரத்தைவிட்டு நீங்கி மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழ் ஆசிரியராகச் சின்னாள் வேலை பார்த்தார். பிறகு சென்னை சென்று 'சுதேசமித்திரன்' செய்தித் தாளின் உதவியாசிரியராக அமர்ந்து இரண்டரை ஆண்டுகள் வேலை செய்தார். தமது தனிப்பட்ட கருத்துக்களையும் நாட்டுரிமை வேண்டும் கட்டுரைகளையும் 'சுதேசமித்திரனில்' வெளியிட அக்காலப் பத்திரிகைச் சட்டங்கள் இடம் அளிக்கவில்லை. பாரதி மனந்தளராது 'இந்தியா' என்ற புதுப் பத்திரிகைக்கு ஆசிரியராய் அமர்ந்தார். பாரதியாரின் உயிரும் உள்ளமும் 'இந்தியா'வில் எதிர் ஒலி செய்தன. பாரதியைத் தமிழ் நாட்டுக்கு அறிமுகப் படுத்தியது 'இந்தியாவே'.

நாட்டில் உரிமை வெறி அளவு கடந்து செல்லலாயிற்று. நாட்டு இதழ்களும் நசுக்குண்டன. நாட்டுத் தலைவர்கள் காவலில் வைக்கப்பட்டனர். பாரதியார் தம் நண்பர் அறிவுரைக்கிணங்க, கரந்துறைந்தேனும் தமிழ் அன்னைக்குத் தொண்டு செய்யலாம் என்ற உயர் நோக்கங் கொண்டு புதுச்சேரி நண்ணினார்.

புதுவையில் பாரதியார் சில காலம் உண்ண உணவிற்கும் தங்க உறையுளுக்கும் வருந்தினார்.

அங்கேயே பாரதிக்கு அரவிந்தர், வ. வே. சு. ஐயர் ஆகியோர் நட்பு கிடைத்தது.

உரிமைப் புயற்காற்று பிரிட்டிஷ் இந்தியாவில் ஓய்ந்தது. புதுவையை விட்டுப் பாரதியாரும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கடையம் என்ற சிற்றூருக்குச் சென்றார். கடையம் இயற்கை எழில்கள் மிக்கது. பாரதியார் அங்கு இயற்கையில் திளைத்தார்

பிறகு பாரதியார் சென்னையில் சுதேசமித்திரன் பத்திரிகையின் உதவி ஆசிரியராக வேலை ஏற்றுக் கொண்டார். பாரதியை மிகவும் போற்றிய பெருமை சுதேசமித்திரனுக்கு உண்டு. பாரதியார் திருவல்லிக்கேணியில் வசித்து வந்தார். தினமும் பார்த்தசாரதிப் பெருமானைக் கோயிலில் சென்று வணங்கி வருவது பாரதியார் கைக்கொண்டிருந்த செயல். கோயில் செல்லுங் காலத்திலெல்லாம் கோயில் யானையுடன், குழந்தையுடன் விளையாடுவதுபோல் விளையாடுவார். ஒரு நாள் விதியின் வசத்தால் பாரதியைக் கோயில் யானை தன் துதிக்கையால் இழுத்துக் கீழே தள்ளியது. நண்பர் உதவியால் பாரதியார் அன்று உயிர் தப்பினார். எனினும் அந்நிகழ்ச்சி காரணமாக மூன்றுமாத காலம் நோய்வாய்ப்பட்டுக் கிடந்தார். இளமைப் பருவத்திலேயே நம் வரகவி பாரதியார் 1921-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பதினொன்றாம் நாள் இரவு மண்ணுலகினை நீத்து விண்ணுலகு அடைந்து அமரரானார்.

இவர் இயற்றிய நூல்களையும், கட்டுரைகளையும், காவியம், கட்டுரை, வசனம் என்ற மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். நாம் உரிமையைப் பெற்று மகிழ்வதையும், அடிப்படைக் கல்வி வளர்வதையும், பாரதியார் புலமையை அரசியலார் போற்றுவதையும், அவர் பாடல்களை அரசியலார் சொத்தாகக் கொண்டாடுவதையும் பாரதியார் நம்முடன் ஒருவராக இருந்து

காணும் வாய்ப்புப் பெற்றிலரேனும், அவர் ஆவி கண்டு களிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

பயிற்சிகள்

1. பாரதியார் எங்கே பிறந்தார்? பெற்றோர்கள் யார்?
2. இவருடைய இளமைப் பருவத்தைப் பற்றிச் சுருக்கி எழுதுக.
3. புதுவையிலும் காசியிலும் பாரதியார் இருக்க நேர்ந்தது ஏன்?
4. நாட்டுக்கும் மொழிக்கும் பாரதியார் ஆற்றிய தொண்டைக் கூறுக. (பதினைந்து வரிகள்).
5. அரியணை, உருவும் திருவும், அச்சமும் கூச்சமும், உயர்ந்த நோக்கம், நாட்டுப் பற்று, ஊக்கமும் உள்ளக் கிளர்ச்சியும், முன்னணி, உயிரும் உள்ளமும், அறிவுரை, அடிப்படைக் கல்வி இச்சொற்றொடர்களை விளக்கி, இவற்றைத் தனித்தனியே வாக்கியங்களில் வைத்து எழுதுக.
6. கரந்து, உறைதல், அமரர், புலமை—இவற்றின் பொருள்களை அகராதியில் பார்த்து எழுதுக.
7. "சுதேசமித்திரன்" "இந்தியா" இவற்றைப் பற்றிச் சிறு குறிப்புகள் வரைக.
8. கோடிட்டவை எதிர்மறைப் பெயரெச்சங்கள்:

   பாடம் படிக்காத மாணவன், உணவு உண்ணாத குழந்தை.

   கோடிட்டவை எதிர்மறை வினையெச்சங்கள்:

பாடம் படிக்காது வகுப்புக்கு வரக்கூடாது. உணவு உண்ணாது இருந்தால் உடம்பு கெட்டு விடும். இவை போன்று எதிர்மறையில் வரும் பெயரெச்ச வினையெச்சங்களைப் பாடங்களிலிருந்து தாகுத்து, பதினைந்துக்கு மிகாமல் எழுதுக.

12. ஒரு நாடகக் காட்சி

திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளை அவர்கள்.

(தலைமை ஆசிரியர், கரந்தைத் தமிழ்ச்சங்கக் கல்லூரி, தஞ்சை)

[பேகன் கொடையிற் சிறந்தவன். மயில் தோகை விரித்தாடலைக் கண்ட இவன், அது குளிரால் வாடிய தென்றெண்ணித் தன் பீதாம்பரத்தை எடுத்து அதன் மீது போர்த்துவிட்டு மீண்டவன். இவனது வரையா வள்ளன்மையை இவன் மனைவியான கண்ணகி அவ்வப்போது கண்டித்து வந்தாள். பேகன் ஒரு நாள் தன் மனைவி மீது சினங்கொண்டான். அதனால் கண்ணகி இவனைத் துறந்து காடு சென்றாள்.]

பத்தாங் களம்

உறுப்பினர்: கண்ணகி, தேவி, நங்கை, குறத்தி, கபிலர், அரிசில் கிழார்.

காலம்: முற்பகல்

இடம்: பொதினி மலைச்சாரல்

[கானகத்திருந்த கண்ணகியிடம் குறத்தி தோன்றிக் குறி கூறிச் சென்றதும், புலவர் பெருமக்கள் ஆண்டுச் சென்று தேறுதல் மொழி புகன்று அவளைப் பேகனிடம் அழைத்துச் செல்லல்.]

தேவி:—அம்மா கண்ணகி! தங்கள் காதலர் தங்கள் மீது கொண்ட அன்பை அகற்றுமாறு சூழ்ந்தவர்

யாரோ? அம்மையே! தங்களைக் காணுந்தோறும் கரும்பெனக் காமுற்றவர் இன்று வேம்பெனத் தங்களை வெறுத்து நோக்கச் சூழ்ந்தவர் எவரோ? ஆ! கொடுமை! கொடுமை!! அன்னவர் சூழுரை நஞ்சினும் கொடிது; மலையினும் பெரிது.

கண்ணகி:—தேவி! இதற்கு நாம் என்ன செய்ய வல்லோம். மிகுந்த பசுக்கள் கூடியிருப்பினும், ஒரு கன்று அக்கூட்டத்தில் உள்ள தன் தாயையே நாடிச் செல்வதை நீ காணவில்லையா? சிறந்த வாய்ப்புகளைப் பெற்றிருந்தாலும், ஒருவர் செய்த ஊழ்வினை அவரையே தொடர்ந்து வந்து பற்றுந் தன்மையாகும். ஆதலால் நாம் பிறரை நோவதால் ஆய பயன் என்ன?

நங்கை:—அம்மையே! தாங்கள் கூறுவதும் உண்மையே. நம்மால் ஆவது என்ன இருக்கிறது? எல்லாம் இறைவன் செயல். ஏ! இறைவா, எம் தலைவியின் துயரினைக் களைவாய்!

குறத்தி:—(மறைவில்) கூடைமுறங் கட்டலையா! அம்மே! கூடை!

தேவி:—அம்மா! ஏதோ கூவுதல் கேட்கின்றதே!

குறத்தி:—(மறைவில்) பச்சை குத்தலையா! அம்மே! பச்சை!

நங்கை:—அம்மா கண்ணகி! குறத்தியின் குரல் ஒன்று கேட்கின்றது. நம் நகர்ப்புறத்தில் நாலைந்து நாட்களாக ஒரு குறத்தி, பாண்டிய நாட்டுக் குறத்தியாம். நன்றாகக் குறிசொல்லுகிறாளாம். இங்கே கூவிக்கொண்டு வருபவள் அவளாகத்தான் இருக்க வேண்டும். அவளை இங்கு அழைத்து வரலாமா?

கண்ணகி:—நங்காய்! என்ன, நீயும் அறிவில்லாதவள் போலப் பேசுகின்றனையே! குறியாவது,

கோணங்கியாவது? என்னவோ! அவைகளில் எல்லாம் எனக்கு மனப்பிடித்தம் இல்லை. வேண்டுமானால் உன் விருப்பப்படி பொழுது போக்கிக்கொள்.

குறத்தி:—குறிகள் கேட்கலையா! அம்மே! குறி! (வெளிவரல்).

நங்கை:—ஏ குறத்தி! இங்கே வா.

குறத்தி:—அம்மா! இதோ வந்துவிட்டேன்.

நங்கை:—ஏடி! நீ யார்? எந்த ஊர்? என்ன பேர்?

குறத்தி:—அம்மா! நான் தெற்கே வெகு தூரம். தென் பாண்டிநாடு. பொதியமலைக் குறத்தி; கூடை முறங் கட்டுவேன், குறிகள் சொல்லுவேன்; என்னிடம் மை இருக்கிறது. அதை அணிந்துகொண்டால் எண்ணமெல்லாம் கைகூடும். அவையை நோக்கி உங்களில் யாருக்காவது கொஞ்சம் வேண்டுமா? (கண்ணகியை நோக்கி) ஏனம்மா! உங்களுக்குக் கொஞ்சம் தரலாமா? என் பாட்டி எயினி என்றால்தான் உங்களுக்கெல்லாம் தெரியுமே! அவள் பேர்த்தி குறி எயினி நான்.

தென்றற் காற்று வீசுவதும், கந்தவேள் விளையாடுவதும், பொன்னும் மணியும் பொதிந்து கிடப்பதும், செந்தமிழ்த் தாய் மகிழ்ந்து திகழ்வதுமாகிய தென் பொதியமலை எங்கள் மலையாகும். அம்மலை, வடகலையும் தென்கலையும் பயிலும்.

தேவி:—பொதிய மலையின் பெயரைக் கேட்டிருக்கிறோம்; நேரில் பார்த்ததில்லை. வடகலை தென்கலை பயிலும் மலை என்றாளே! வடமொழியும் தென்மொழியும் அங்கே படிப்பார்களா?

கண்ணகி:—தேவி! அப்படியன்று. வடமொழியும் நம் செந்தமிழை விரும்பிக் கற்கும் மலையென்பது பொருளாகும் போலும்!

தேவி:—குறத்தி! உங்கள் மலையின் பெருமையைக் கேட்கக் கேட்க இனிமையாக இருக்கிறது. அதன் பெரு வளப்பங்களை எல்லாம் கூறுவாயாக. அது பெரிய காடடர்ந்த மலையாயிற்றே! சிங்கம், புலி, கரடிகளெல்லாம் இருக்குமே; அங்கே நீங்களெல்லாம் எப்படிக் குடியிருப்பீர்கள்?

குறத்தி:—அம்மா! அது பெரிய முனிவர்கள் இருக்குமிடம். சிங்கம் புலிகள் எல்லாம் எவருக்கும் ஒரு தீங்கும் செய்யா அம்மா!

எங்கள் மலையில் தம்முட் பகையுடையனவாகிய சிங்கமும் யானையும், புலியும் மானும், கரடியும் மரையும், மயிலும் பாம்பும் பகைமை நீங்கி ஒன்றோடொன்று நட்புக் கொண்டு வாழும். ஆதலால் அங்கு வாழ்கின்ற எங்கட்குச் சிறிதும் பயமே இல்லை அம்மா.

தேவி:—எயினி! உங்கள் மலையின் பெருமை எங்கள் மனத்தில் பெருவியப்பை உண்டாக்கிவிட்டது. உங்களது உணவு, செயல் முதலியவற்றைக் கூறுவாயாக.

குறத்தி:-அவ்வாறே கூறுகின்றேன், கேளுங்கள்.

"செழுங்கொடியின் விழுந்தவள்ளிக்
கிழங்குகல்லி எடுப்போம்
குறிஞ்சிமலர் தெரிந்துமுல்லைக்
கொடியில்வைத்துத் தொடுப்போம்
பழம்பிழிந்த கொழுஞ்சாறுந்
தேறலும்வாய் மடுப்போம்
பசுந்தழையும் மரவுரியும்
இசைந்திடவே உடுப்போம்
செழுந்தினையும் நறுந்தேனும்
விருந்தருந்தக் கொடுப்போம்

சினவேங்கைப் புலித்தோலின்
பாயலின்கண் படுப்போம்
எழுந்துதமிழ்த் தாய்காலில்
விழுந்துவினை கெடுப்போம்
எங்கள்குறக் குடிக்கடுத்த
இயல்பிதுகாண் அம்மே!"

தேவி:—எயினி ! நன்று ! நன்று !! இருக்கட்டும், குறி பார்க்கத் தெரியும் என்றாயே, நீ தக்கவர் எவருக்கேனும் குறி சொல்லியதுண்டா? குறி எப்படிச் சொல்லுவாய்? கைக்குறி பார்ப்பாயா? அன்றி முகக்குறி பார்ப்பாயா? அல்லது முறக்குறி பார்ப்பாயா?

குறத்தி:—எல்லாக் குறியும் பார்ப்பேன் அம்மா!

நான் முன் ஒருநாள் தமிழ் அன்னையின் முகக்குறியைப் பார்த்து, முத்தமிழிலும் வல்ல புதல்வர்களைப் பெறுவாய் என்று சொன்னேன். பின்னர், கரந்தையிலே உமாமகேசுவரன் என்பவரும், இருமொழியில் வல்லுநரான கதிரேசன் என்பவரும் இன்னும் பலரும் தோன்றி உனக்குத் துணைசெய்வார்கள் என்றேன். யான் கூறிய யாவும் சிறிதும் தவறாமல் அப்படியே பலித்ததம்மா.

தேவி:—நல்லது, எயினி! எங்கள் தலைவியின் முகத்தைப் பார்த்துக் குறி சொல்லு பார்ப்போம்.

குறத்தி;—அம்மா! இந்தக் குறத்திக்கு ஒருபிடி சோறும், ஒரு சிறு துணியும் கொடுங்கள். இந்தத் தலைக்குக் கொஞ்சம் எண்ணெய் வாருங்கள்.

நன்றெல்லாம் உடையதிரு நாச்சியரோ இன்று
என்றனக்குப் பிடிசோறும் சிறுதுணியும் நல்காய்
உன்றன்பேர் வாழ்வாக உறுகணவன் அம்மே
சென்றனனம் பகைவர்தமைப் போர்க்களத்தில்
[வெல்ல

குன்றினில்வாழ் இக்குறத்தி கொடுக்கும்மையின்
[திறம்பார்

குறித்தமுகம் தனிலிடுவாய் கொண்டகுறை தீரும்
இன்றிந்தப் பொழுதிலவன் இங்குவரக் காண்பாய்
எக்குறிதப் பினும்தப்பா திக்குறிபார் அம்மே.

நங்கை:—ஏ குறத்தி! மிக நன்று! இதை ஏற்று மகிழ்வாய்! (ஆடை அணிகலன் முதலிய பரிசுகளை நல்கல்).

குறத்தி:—நீங்கள் நீடூழி வாழ்க! நான் போய் வருகிறேன். இன்னும் எப்பொழுதாவது என் உதவி வேண்டியிருந்தால் சொல்லி அனுப்புங்கள். உடனே வருகிறேன்.

கூடைமுறங் கட்டலையா? அம்மே! கூடை.
பச்சை குத்தலையா? அம்மே! பச்சை.
குறிகள் கேட்கலையா! அம்மே! குறி.

(குறத்தி செல்லல்.)

பயிற்சிகள்

1. கண்ணகி என்பவள் யார்?
2. குறத்தி தனது மலை வளத்தைப் பற்றிச் சிறப்பித்துக் கூறுவன யாவை?
3. குறவர் குடிக்கு அடுத்த இயல்புகள் யாவை?
4. குறத்தி தனது குறியின் சிறப்பைப் பற்றிக் கூறுவன யாவை?
5. கல்லுதல், தேறல், மடுத்தல், உரி, பாயல்—இச்சொற்களுக்கு அகராதியில் பொருள் காண்க.
6. இந்நாடகக் காட்சியை நடித்துப் பாருங்கள்.

13. கல்லணை

"காவிரி தென்பெண்ணை பாலாறு-தமிழ் கண்ட தோர் வையை பொருநை நதி-என மேவிய ஆறு பல ஓடத் திருமேனி செழித்த தமிழ்நாடு" என்று கவி பாரதியார் நமது நாட்டைப் பாடிச் சென்றார். நம் தமிழ் நாடு நீர்வளம், நிலவளம் மிகுந்து செழிப்புற்று விளங்குவதற்கு இவ் வாறுகளே காரணமாகும். தமிழ் நாட்டின் ஒரு பகுதியாய், திருச்சி தஞ்சை மாவட்டங் களைத் தன்னகத்தே கொண்டதாய் விளங்கும் சோழ நாடு 'சோறுடைத்து' எனப் பெரியோர்களால் புகழப் பட்டு வருகின்றது. சோழ நாட்டிற்கு இத்தகைய பெருமையைத் தந்து நிற்பது அதன்கண் ஓடும் காவிரியாறேயாகும்.

காவிரியாறு மேற்கு மலைத் தொடரில் குடகு மலைப் பகுதியில் தோன்றி, மைசூர் நாட்டின் வழி யாக வந்து, கொங்கு நாட்டிடைப் புகுந்து சோழ நாட்டில் பாய்ந்து கிழக்குக் கரையிலுள்ள வங்காளப் பெருங் கடலில் கலக்கின்றது. காவிரி யாறு தனது நீரில் பொன் துகளையும் அடித்துக் கொண்டு வருவதால் பொன்னியாறு என்றும் வழங்கப்படும். பொன்னியாற்றின் நீரால் வளம் பெற்றுப் பொலிவுறு வதால் சோழநாட்டிற்குப் பொன்னிநாடு என்ற பெயரும் உண்டு. பொன்னியாற்றின் தண்ணீர் பற் பல சிறு ஆறுகளாகவும் கால்வாய்களாகவும் பிரிந்து பரவுவதால் புனல்நாடு என்ற பெயரும் சோழ நாட்டிற்கு வழங்குகிறது. நீர்வளம் மிகுந்த நாடு என்பது அதன் பொருளாகும்.

காவிரியாறு குடகுநாட்டில் தோன்றி, மைசூர் கொங்கு இந்நாடுகளின் வழியே ஓடி வந்தாலும், அங் கெல்லாம் பயிர்த் தொழிலுக்கு மிகுதியாகப் பயன் தருவதில்லை. அங்கு நிலங்கள் மேடாக இருப்பதால்

இந்நீரைக் கொண்டு பயிர்த் தொழில் செய்ய முடிவ தில்லை. ஆயினும் ஆங்காங்கு அணை கட்டியதன் வாயி லாக நீராற்றலால் மின்சாரம் உண்டாக்கிப் பயன் பெறுகிறார்கள். மைசூர் நாட்டில் கண்ணம்பாடி என்னுமிடத்தில் காவிரியில் ஓர் அணை கட்டப்பட்டுள் ளது. இவ்வணையால் உண்டாக்கப்படும் மின்சாரம் மைசூர் நாட்டிற்குப் பெரும் பயனைத் தருகின்றது. பின்னர், சேலம் மாவட்டத்தில் மேட்டூர் என்னுமிடத் தில் ஒரு பெரு பெரிய அணை கட்டப்பட்டுள்ளது.



மேட்டூர் அணை

இவ்வணையினால் கிடைக்கும் மின்சாரம் தென்னாட்டில் பயன்படுகிறது. பற்பல தொழிற்சாலைகளும் இதனால் இயங்குகின்றன. பின்னர்க் காவிரி, திருச்சிக் கோட்டம் முழுதும் பிரியாது சென்று, அங்கு நின்று

யற்பல பகுதிகளாகப் பிரிந்து பாய்ந்து பயனளிக்கின்றது.

காவிரி பண்டைக் காலத்தில் குன்று போன்ற அணைகளால் தேக்கப் பட்டும், பலவாறாகப் பிரிந்தும் செல்லவில்லை. அதனால் மேற்குத் தொடரில் மழை பொழிந்து வெள்ளம் பெருகி வருங்காலத்தில் கரை புரண்டு ஓடியும், வயல்களில் புகுந்து மணல் நிரப்பியும் கடலில் பாய்ந்தது. மழை பெய்யுங் காலத்தில் நீரோடி, ஏனைக் காலங்களில் நீர் வற்றிவிடும். இதனால் ஆண்டு முழுவதும் வழக்கமாகப் பயிர்த் தொழில் செய்ய முடியாததோடு, எங்கு வெள்ளப் பெருக்கினால் விளைவிற்கு அழிவு நேரிடுமோ என அஞ்சவும் வேண்டியிருந்தது. இதனை உணர்ந்து, குடி நலம் பேணி ஆண்ட தமிழ் மன்னர்கள் தக்கன செய்திருந்தார்கள்.

சோழ நாட்டைச் சிறப்புடன் ஆண்ட மன்னர்களுள் கரிகாற் சோழன் ஒருவனாவன். இவன், மழை காலத்தில் காவிரி நீர் பெருகி மக்கட்குத் துன்பம் விளைப்பதையும், மிகுதியான நீர் பயன் படாது வறிதே சென்று கடலில் கழிவதையும் கண்டான்; கடந்து செல்லவும், உடைக்கவும் முடியாத கரை கட்ட எண்ணினான்; காவிரி நீரைப் பிரித்து வேறு ஆறாகச் செலுத்தி அதிக நிலங்களை விளையச் செய்ய ஆசை கொண்டான்; இவற்றோடு வெள்ளம் மிகுந்து வருங் காலத்தில் அதற்கு வடிகால் ஒன்று உண்டாக்கவும் எண்ணினான்.

கரிகாற்சோழன், காவிரி நீர் வீணே கொள்ளிடத்தில் சென்றுவிடாதபடி தடுத்தான்; காவிரியின் இரு மருங்கும், எளிதில் உடைக்கப் படாததும், தாண்டிச் செல்ல முடியாததுமான கரையை எழுப்பினான்; இரு கரைகளிலும் பெருமரங்கள் நிறைந்த காடுகளை உண்டாக்கிக் கரைந்து போகா வண்ணம் காத்தான்; அன்

றியும் காவிரியின் குறுக்கே அணை கட்டி அதன் நீரைப் பிரித்து வேறோர் ஆற்றில் பாயுமாறு செய்தான். இங்ஙனம் கட்டிய அணைக்குக் கல்லணை என்பது பெயராகும். இவ்வாறு பணி பல புரிந்து நாட்டை வளப்படுத்தி மக்கட்கு நன்மை செய்ததனுல் கரிகாற் சோழன் " திருமாவளவன் " எனச் சிறப்பாக அழைக்கப் பட்டான். நாட்டை வளப்படுத்தியவன் என்பது அதற்குப் பொருள்.

கல்லணை அமைந்துள்ள இடம், திருச்சிக்கு நேர் கிழக்கில் பத்துக்கல் தொலைவிலுள்ளது. அவ்விடத்தில்தான் காவிரியிலிருந்து ஒரு கிளை பிரிந்து வெண்ணாறு என்ற பெயருடன் செல்கின்றது. திருவரங்கத்திற்கு மேற்கே பத்துக்கல் தொலைவில் காவிரியில் பிரிந்து வரும் கொள்ளிடம் கல்லணையில் மீண்டும் மிக நெருங்கிச் செல்கின்றது. காவிரியின் நீர் வடிய, வடிகால் கட்ட எண்ணிய கரிகாலன் இவ்விடத்தைத் தேர்ந்து, அதிக நீர் கொள்ளிடத்தில் பாயும் வண்ணம் வடிகாலொன்றைக் கட்டினுன். இதுவே கல்லணை எனக் குறித்து வைக்கப்பட்டுள்ளது. இக்கல்லணையை எழுப்ப அவன் தேர்ந்தெடுத்த இடத்தின் அமைப்பும், அவன் எழுப்பிய அணையின் அமைப்பும் இக்காலப் பொறிஇயல் வல்லவர்களும் கண்டு வியக்கும் வண்ணம் உள்ளன. வடிந்து செல்லும் நீர் அறுத்து விடாதிருக்க அவன், ஆயிரம் அடி நீளத்திற்கு மேற்பட்ட ஒரு கற்படுகையை அமைத்துள்ளான். இக்காலத்தில் கற்களை உளி கொண்டு செம்மைப் படுத்தியே பயன் படுத்துகிறுர்கள். அன்று மன்னன் கரிகாலன், உளியால் செம்மை செய்யப்படாத கரடு முரடான பெரும் பெரும் கற்களைச் செவ்வையாக அடுக்கிப் படுகையை அமைத்துள்ளான். அவை பல நூற்றுண்டுகட்குப் பின்னும் பெயராது காட்சியளிப்பதை இன்றும் காணலாம்.

கல்லணையிற் பிரிந்து செல்லும் காவிரியும், வெண்ணாறும், மேலும் சில சிற்றாறுகளாகவும், கால்வாய்களாகவும் பிரிந்து பரவுவதால் தஞ்சைக்கோட்டம் முழுவதும் செந்நெல் விளையும் செழுவயற் கோட்டமாக மாறியுள்ளது. இக்கல்லணையே தஞ்சைக் கோட்டத்தைத் 'தென்னாட்டின் நெற்களஞ்சியம்' என்று வழங்கச் செய்தது.

கல்லணை இன்று, காணத் தகுந்த ஒரு காட்சியாய் விளங்குகிறது. அங்குச் செல்வோர், கரிகாலன் காலத்துக் கல்லணையைக் காண இயலாது. கொள்ளிடத்தில் பாய அவன் கட்டிய வடிகாலின் அடித்தளத்தை மட்டுமே காணலாம். பாலத்தின் அடியில் பழங்காலத்தில் அமைந்தது என்று கூறப்படும் ஒரு சிறு அனுமார் கோயிலைக் காணலாம். சிறு கற்றூண் ஒன்று செய்து அதனை இரு கூறாக்கி அதனிடையில் பொறிக்கப்பட்டுள்ள உருவம் "நரசிங்காவதாரக் காட்சி"யை அளிக்கிறது. இவற்றைத் தவிர, ஏனைய பாலங்கள்,அணைக்கட்டுகள், அணைக் கதவுகள் எல்லாம் புதிய விஞ்ஞான முறைப்படி பொறிகளாலேயே அமைந்திருப்பதைக் காணலாம். காவிரி, வெண்ணாறு அணைகளின் கைப்பிடிச் சுவரின் இருகோடியிலும் வைக்கப்பட்டிருக்கும் கற்காளைகள் காணச் செல்வோரை வரவேற்பதுடன் கரிகால் வளவனை நினைவூட்டுவனவாகவும் உள்ளன.

ஏறக்குறைய இரு நூற்றாண்டுகளாக நடைபெற்ற ஆங்கில ஆட்சியின் பல்வேறு காலங்களில் இக் கல்லணை பற்பல மாற்றங்களையும் திருத்தங்களையும் பெற்று விளங்குகின்றது. அங்குள்ள அணைகளையும் சேர்த்து மக்கள் கல்லணை என வழங்கியபோதும், கொள்ளிடத்திற்கு நீர் செல்லும் வழியாகிய வடிகால் கல்லணை என்றும், காவிரி வெண்ணாற்றில் உள்ளன

காவிரி விண்ணாறு நீர்த்தேக்கங்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவையனைத்தும் சேர்ந்து "பெருங்கல் அணைக்கட்டு" என வழங்கப்படுகிறது.

கல்லணை வடிகால் பகுதியின்கீழ்க் காணும் ஒரு சிறு கல்வெட்டினால் கி. பி. 1804-ஆம் ஆண்டு அரசியலார் ஆணைப்படி காப்டன் ஜே. எல். கால்டுவெல் என்பவரால் அப்பகுதி புதுப்பிக்கப்பட்டமை தெரிகிறது. காவிரியிலும்,விண்ணாற்றிலும் உள்ள புதுமுறை அணைகள், மௌண்ட் ஸ்டூவர்ட் கிராண்ட்டப் என்பவர் சென்னைக் கவர்னராயிருந்த காலத்தில் கி. பி. 1883-இல் தொடங்கி, 1886-இல் முடிக்கப்பட்டுள்ளது. தஞ்சைக் கோட்டத்தில் எஞ்சிக் கிடந்த பல ஆயிரம் ஏக்கர் நிலங்களை நன்செயாக்க முடியும் என்பதை உணர்ந்த அரசியலார், கல்லணையின் தென்புறத்தில் கல்லணைக் கால்வாய் என்ற பெயருடன் ஒரு கால்வாயை வெட்டியுள்ளார்கள். இக்கால்வாயை கி. பி. 1929-இல் தொடங்கி மூன்றாண்டுகளில் முடித்துள்ளார்கள்.

இவ்வணைக் கதவுகளெல்லாம் பற்சக்கரங்கள் இடப்பட்ட பொறிகளால் இயக்கப்படுகின்றன. வேண்டுங்கால் நீரை விடவும், வேண்டாதபொழுது அடைத்து விடவுங்கூடும். காவிரி, விண்ணாறு, கல்லணைக் கால்வாய் இவற்றில் சென்றதுபோக எஞ்சிய நீர் வடிகால் வழிச்சென்று கொள்ளிடத்தில் ஓடுகின்றது. அன்றியும் இவ்வணைகளில் நீர்ப் பெருக்கால் மணல் நிரம்பி மேடிட்டுவிடாவண்ணம் காக்க,வடிகாலை ஒட்டி மணற் போக்கியும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வகைப் புதுமுறைச் சாதனங்கள் நிறைந்த கல்லணையால், நீர் மிகுதியால் நிலங்கள் அழிவதும், வறிதே சென்று கடலில் கலப்பதும் தடுக்கப்படுகின்றன. புதுக் கால்வாயால் புன்செய் நன்செயாக

மாற்றப்பட்டுள்ளது. அணைக்கட்டு தரும் விளக்கப்படி, காவிரியாற்றினால், ஏறக்குறைய நாற்பத்தேழு இலட்சம் (லக்ஷம்) ஏக்கர் நிலமும், வெண்ணாற்றினால் நாற்பத்தாறு இலட்சம் நிலமும் கல்லணைக் கால்வாயால் மூப்பது இலட்சம் ஏக்கர் நிலமும், பயிர் செய்யப் படுகின்றன. இவற்றால் தஞ்சை மாவட்ட முழுதும், கன்னலும் செந்நெலும் கதலியுஞ் சூழும் அன்னவயற் பழனமாக மாற்றப்பட்டுள்ளது என்னலாம். எகிப்து நாட்டை நைல் நதியின் நன்கொடை என்றும், சிந்து மாகாணத்தைச் சிந்து நதியின் நன்கொடை என்றும் கூறுவதுபோலத் தஞ்சைக் கோட்டத்தைக் காவிரி யின் நன்கொடை என்று கூறலாமாயினும், அப் பெருமை கல்லணையையே சார்ந்ததாகும்.

கல்லணை தன் கவினுறு காட்சியால் காண் போரின் கண்ணைக் கவரும் ஆழியோவென ஐயுறுமாறு அலைவீசி அணைவழிச் செல்லும் நீர் எழுப்பும் துளிகள் உடலைக் குளிர்வித்து உள்ளத்தைக் கனிவிக்கும்.

பயிற்சிகள்

1. தமிழ்நாடு நிலவளம் நீர்வளம் மிகுந்து விளங் குவதற்குக் காரணமா யிருப்பவை எவை?
2. காவிரியாற்றின் ஓட்டத்தைப்பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.
3. காவிரியாற்றில் எங்கெல்லாம் அணைகட்டி யுள்ளார்கள்? மின்சாரம் உண்டாக்குகிறார் கள்?
4. கரிகாற் சோழன் காவிரியாற்றின் நீரை வீணாய்ப்போகாமற் பயன்படுத்திக் கொள்வ தற்காகச் செய்தவை யாவை?
5. கரிகாலன் கல்லணை எங்கு அமைந்துள்ளது? அதனைப்பற்றிச் சுருக்கமாக ஒரு பத்தி எழுதுக.

6. இன்றைய கல்லணையின் தோற்றம் எப்படி யிருக்கிறது ?
7. ஆங்கில ஆட்சியில் கல்லணையில் ஏற்பட்ட மாற்றங்களையும் திருத்தங்களையும் சுருக்கிக் கூறுக.
8. கொள்ளிடத்துக்குள்ள வடிகாலும் மணற் போக்கியும் பற்றிச் சுருக்கி எழுதுக.
9. கல்லணைப் புதுமுறைச் சாதனங்களால் விளையும் நன்மைகள் யாவை ?
10. கதலி, வடிகால், நன்கொடை, ஐயுறும் பேணி, வறிதே—இச்சொற்களுக்குப் பொருள் கூறுக.
11. வாழ்வு—தாழ்வு, இன்பம்—துன்பம் } இவை நேரெதிர்ச் சொற்கள். இவைபோன்ற நேரெதிர்ச் சொற்களை உங்கள் பாட நூல்களிலிருந்து தொகுத்தெழுதுக.
12. நீர்வளம், நிலவளம், மாட்டம், பொன்துகள் பயன்பெறு, பொலிவுறுக, கரைபுரண்டு, வெள்ளப் பெருக்கம், இருமருங்கும், பணிபல புரிந்து, நூற்றாண்டு—இச்சொற்றொடர்களை விளக்கி, தனித் தனி வாக்கியங்களில் வைத்து எழுதுக.
13. மரியாதை கருதி ஒருமைப் பெயரையே பன்மையாக 'அவர்' என்றும் "மாமனார் மாமியார், தமக்கையார், தகப்பனார், தாயார்" என்றும் கூறுவதுண்டு, மரியாதைப் பன்மைப் பெயர்களாக வந்தவற்றை உமது பாட நூலிலிருந்து தொகுத்தெழுதுக.
14. கோட்டம், நரன், கன்னல், கதலி, பழனம், கவின்—இவைகளின் பொருளை அகராதியில் பார்க்க.

14. வீடும் பயிர்பச்சைகளும்

மரங்களும் செடிகொடிகளும் புல் பூண்டுகளும் நம்மைச் சுற்றிலும் எங்கும் பசுமையாகக் காட்சியளிக்கின்றன. இவை நம் கண்ணுக்குக் குளிர்ச்சி அளித்து மகிழ்விப்பதுடன் மக்கட் சமுதாயத்திற்கே இன்றியமையாதனவாய் இருக்கின்றன. மனிதன் உடல்நலத்தோடு வாழ்வதற்கு வேண்டிய ஊண் உடை உறைவிடம் ஆகிய மூன்று தேவைகளிலும், பயிர்பச்சைகள் எவ்வளவோ தொடர்புடையனவாய் இருக்கக்காண்கின்றோம். இன்னும் பல வகையிலும் நமது அன்றாட வாழ்க்கைக்கும், இவற்றிற்கும் தொடர்புகள் உள.

முதலாவதாக மக்களின் உணவுக்கும் பயிர்பச்சைகளுக்குமுள்ள தொடர்பைப் பார்ப்போம். பழங்காலந்தொட்டே மக்கள் பயிர்பச்சைகளைப் பாதுகாத்தும் போற்றியும் வந்திருக்கின்றனர். பயிர்பச்சைகளை அவர்கள் உணவாக உட்கொள்ளத் தொடங்கிய பொழுது மிகவும் துணிச்சலுடனேயே அவர்கள் அவ்வாறு செய்திருக்கவேண்டும். தம் உயிரையும் பொருட்படுத்தாமல் பல பயிர்பச்சைகளின் பல்வேறு பாகங்களையும் தின்று பார்த்தே தம் உணவுக்கு ஏற்றவை எவையென்று அவர்கள் உறுதி செய்ய வேண்டியிருந்தது. இந்தக் காரியத்தில் மர உணவுண்ணும் விலங்குகள் அவர்களுக்கு ஓரளவு வழிகாட்டியாயிருந்தன.

ஆனல், அறிவியல் முன்னேற்றத்தின் பயனாக நமக்கு இம்மாதிரியான தொந்தரவுகள் இப்போதெல்லாம் இல்லை. விஞ்ஞானிகள் புதிய பயிர்பச்சைகளையெல்லாம் பலவிதமாய் ஆராய்ந்து வருகிறார்கள். எலி முயல் போன்ற சிறு பிராணி

களைக் கூண்டுகளில் வளர்த்து, ஆராய்ச்சி செய்வதற்கு வேண்டிய உணவுகளை அவற்றிற்கு ஊட்டி வளர்த்துப் பார்த்தும், பல அறிவியல் முறைகளைக் கையாண்டும், அப்பொருள்களின் இயல்புகளைக் கண்டறிந்தும் ஆராய்ச்சிகள் செய்துவருகிறார்கள்.

மக்களின் உடல் நலத்திற்கு வேண்டிய புரதைப் பொருள், மாவுப் பொருள், உயிர்ச்சத்து, உப்பு, கொழுப்பு போன்ற உணவுச் சத்துகள் எந்தெந்த உணவுப் பொருள்களில் மிகுந்து கிடைக்கின்றன, சமைக்கும்போது அவற்றின் தன்மையை இழக்காமல் இருக்கும்படி எவ்வாறு சமைக்கலாம் என்றெல்லாம் கண்டுபிடித்து வருகிறார்கள். உணவுக்கலை நாளுக்கு நாள் முன்னேறிக் கொண்டு வருகின்றது.

நாள்தோறும் நாம் வீட்டில் உண்ணும் உணவில் கலந்துள்ள பயிர்பச்சைப் பொருள்களை எடுத்துக் கொள்வோம். தாவரத்தின் ஒவ்வொரு பாகமும் அதாவது வேர் முதல் பூவரையில் ஒவ்வொன்றும் நமது உணவுக்குப் பலவகைகளில் துணை செய்கின்றது. எத்தனைவிதக் கனிகள் காய்கள் கிழங்குகள் கீரைகள் பூக்கள்-ஏன் மொட்டுகள் கூட-மிகுதியாக நமது வீடுகளில் பயன்படுத்தப் படுகின்றன. சில வற்றை அப்படியே பச்சையாகச் சாப்பிடுகின்றோம். சிலவற்றை வெயிலில் உலர்த்தி வைத்துப் பிறகே சாப்பிடுகிறோம். சில வேக வைக்கப்பட்டும், சில வறுக்கப்பட்டும் வேறு சில நெருப்பில் வாட்டப்பட்டும் உண்ணப்படுகின்றன. சிலவற்றை ஊறுகாய்களாகப் போட்டும் உண்கின்றோம்.

இவ்வாறு நாம் உண்ணும் தாவரப் பொருள்களில் எத்தனை வகை வியப்புகள் இயற்கையில் அமைந்துள்ளன வென்று கவனித்தால் நமக்குத் திகைப்பே உண்டாகிவிடும். நம்முள் பலருக்குத் துயிலெழுந்த

தும் தேநீரோ காப்பியோ அல்லது கோக்கோவோ பருகும் பழக்கம் ஏற்பட்டுவிட்டது. இவைகளும் பயிர் பச்சை இனத்தைச் சார்ந்தனவன்றோ? தேயிலைச் செடியினின்றும் எடுத்து உலர்த்திய இலைகளே தேயிலை; காப்பிச் செடியின் விதைகளே காப்பிக் கொட்டை; கொக்கோ மரத்தின் வறுத்த விதைகளே கோக்கோ ஆகின்றன.

நமது வீடுகளில் முள்ளங்கி, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, காரட், உருளைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, சேனைக்கிழங்கு, கருணைக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகளைப் பயன்படுத்துகின்றோம். இவை அனைத்தும் மண்ணுள் வளருகின்றன. அந்தந்தப் பயிர்கள் தத்தமக்குத் தேவைப்படும்போது பயன் படுத்திக் கொள்வதற்காக உணவுப் பொருள்களைத் திரட்டி, வைப்பு நிதியென வைத்திருக்கும் புதையல்களே இவை. பொதுவாக இவைகளைக் கிழங்கு என்றே வழங்குவோமானால் கூர்ந்து நோக்கின் முள்ளங்கி, சர்க்கரை வள்ளிக்கிழங்கு, காரட் ஆகியவற்றிற்கு வேர்ப்பகுதிகள் பருப்பதாலும் எஞ்சியவற்றிற்கும் மண்ணிலுள்ள அவற்றின் தண்டுப் பகுதிகள் பருப்பதாலும் உண்டான பகுதியே கிழங்கு என்பதாம்.

உருளைக் கிழங்கின் மேல் காணப்படும் கண்களே அவற்றின் இலைக்குருத்துகள். இஞ்சி, மஞ்சள், மாங்காயிஞ்சி, முதலியவை இவ்வினத்தைச் சேர்ந்தவையே. நூல்கோல் எனப்படும் கிழங்கும், அதன் அடித்தண்டின் பருத்த பாகமேயாம். வெங்காயத்தைக் கிழங்கு என்று நாம் சொல்லாவிடினும் அது மேற் கூறப்பட்ட நூல்கோல் வகையைச் சார்ந்ததுதான். தரைமட்டத்திற்கு அடியில் உண்டாக்கப்படும் பருத்த தண்டும் கிழங்கினத்தைச் சேர்ந்ததே. அதன் கண் சதைப் பற்றுள்ளதாகக் காணப்படும் பருத்த பகுதிக்

கும், அடுக்கடுக்காகப் படிந்துள்ள இலைப் பகுதிக்கும் இடையிலே தடித்திருக்கும் பகுதியே தண்டுப் பகுதியாம்.

தண்டாக அமைந்திராத சிலவற்றையும் நாம் தண்டு என்றே வழங்குகிறோம். எடுத்துக் காட்டாக வாழைத்தண்டைக் கூறலாம். இதுவும் கீரைத் தண்டைப்போலவே தரை மட்டத்திற்கு மேல் காணப்பட்டாலும், உண்மையில் இலைகளின் அடிப்பாகங்கள் ஒன்றின்மேல் ஒன்றாகப் படிந்திருப்பதினால் உண்டான தண்டைப்போலத் தோற்றமளிக்கும் பருத்த பொருளே அது.

மரம், செடி, கொடிகளின் இலைகளான முருங்கைக்கீரை, அகத்திக்கீரை, மணித்தக்காளிக்கீரை, அரைக்கீரை, முளைக்கீரை, புதினா, பசலி, வல்லாரை, வெற்றிலை முதலான கீரைகளை நாம் உட்கொள்ளுகிறோம். இவற்றைப்போலவே முட்டைக்கோசையும் கீரை என்றே நாம் சொல்லுகிறோம். உண்மையில் அது ஒரு வகை மொட்டு என்றால் உங்கட்கு வியப்பாயிருக்கிறதல்லவா? மேலும் அது பூவின் மொட்டு அன்று; இலையின் மொட்டு ஆகும்.

நமக்கு உணவாகப் பயன்படும் பூக்கள்தான் எத்துணை வகை! முருங்கைப்பூ, வேப்பம்பூ போன்றவை காம்புகள் பெற்றும் சிறியனவாயும், தனித்தனியாயும் இருக்கின்றன. வாழைப்பூ, காலிப்ளவர் போன்றவை அமைப்பில் தனித்தனி மலர்க்கதிர்களாய் விளங்குகின்றன.

நாம் உண்ணும் பழங்களுக்கோ கணக்கில்லை. இவற்றில் சில வியக்கத்தக்க அமைப்பைப் பெற்றுள்ளன. முந்திரிப் பழம், அத்திப் பழம், பலாப் பழம், அன்னாசிப் பழம் முதலியவை மற்றப் பழங்களைப்போ

வில்லாமல், அமைப்பில் மாறுபட்டிருக்கின்றன. முந்திரிப் பழத்தில், நாம் பழம் என்று கூறும் பகுதி உண்மையில் பழம் அன்று; போலிக் கனியே. அதனுடைய பூவின் காம்பே பருத்து அவ்வாறு சதைப்பற்று அடைந்திருக்கிறது. முந்திரிக்கொட்டைதான் உண்மைக் கனியாகும். அத்தி, பலா, அன்னாசி முதலியவைகளில் பூங்கொத்து முழுவதுமே ஒன்றாய் இணைந்து, பழக்கொத்தாகின்றன. இவற்றைப் பழத்திரள் என்னலாம். இப்பூங்கொத்துகள் ஒருசேரத் தோலால் மூடப்பட்டிருப்பதால் அவைகளைத் தனித்தனியே காணுவது அரிதாயிருக்கின்றது.

உணவுப் பண்டங்களை ஆக்கும்போது குங்குமப்பூ, கிராம்பு, லவங்கப்பட்டை, பச்சைக்கற்பூரம், பெருங்காயம் போன்ற நறுமணப் பொருள்கள் சேர்க்கப்படுகின்றன. இவை யாவும் தாவரப்பொருள்களே! குங்குமப்பூ, 'பூ' வென்று சொல்லப்படினும் அது முழுப் பூ அன்று; பூவின் ஒரு பகுதியாகிய சூல் முடியாகும். கிராம்பு, மலராத ஒரு பூமொட்டு. லவங்கப்பட்டை என்பது லவங்க மரத்தின் பட்டையாகும். பச்சைக் கற்பூரமும், பெருங்காயமும், மரங்களினின்று கசியும் பிசின்கள். சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், போன்ற தாவரப் பொருள்கள் பத்திய உணவிற்கு உதவுகின்றன. இவை உணவுப் பொருள்களாக இருந்துகொண்டே மருந்துப் பொருள்களாகவும் உதவுகின்றன.

நாம் இந்நாள்வரை விதைகளினின்று எண்ணெய்களையும், ஒருவகை நெய்யையும் பெற்று வந்தோம். இப்போது கோதுமை, சோயாபீன்சு போன்ற விதைகளிலிருந்து தாவரப்பால் வடிக்கப்படுகின்றதாம். இதை, மாட்டுப் பாலைப்போலவே தேயிலை, காப்பி முதலிய குடிநீர் வகைகளுக்கும் பயன்படுத்த

லாமாம். அறிவியல் முன்னேறப் முன்னேற பயிர்த் துறையில் இன்னும் என்னென்ன புதுமைகள் உணவு வகைக்கெனக் கண்டுபிடிக்கப்பட இருக்கின்றனவோ பார்க்கலாம்!

(P.A. அம்மணி B.Sc., B.T., M.Ed. சென்னை வானொலி நிலையத்திற் பேசிய பேச்சைத் தழுவியது.)

பயிற்சிகள்

1. உடல் நலம், அன்றாடவாழ்க்கை, பயிர்பச்சைகள், வழிகாட்டியாய், அறிவியல் முறைகள், பயன் படுத்திக்கொள்ள—இவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் வைத்து எழுதுக.
2. பிசின், சூல் மூடி, திரள், போலி, மலர்க் கதிர். வியப்பு, திகைப்பு, வைப்பு நிதி, இயல்பு, சமுதாயம், எத்துணை ?—இச் சொற்களுக்குப் பொருள் கண்டெழுதுக.
3. உணவு உட்கொள்ளத் தொடங்கியபோது பழங்கால மக்கள் ஏன் துணிச்சலுடன் இருந்திருக்கவேண்டும் ?
4. விஞ்ஞானிகள் உணவுகள் பற்றி என்ன என்ன ஆராய்ச்சி செய்கின்றார்கள்.
5. பயிர் பச்சைகளை எவ்வெம்முறைகளில் நாம் சாப்பிடுகின்றோம் ?
6. காலையில் எழுந்ததும் பருகுவதற்கு எச்செடிகள் எவ்வாறு பயன்படுகின்றன ?
7. நாம் மிகுதியும் உண்ணும் கிழங்கு வகைகள் எவை ?
8. தண்டாக அமைந்திராத சிலவற்றையும் நாம் தண்டு என்று வழங்குவதை ஓர் எடுத்துக் காட்டால் விளக்குக.

9. நாம் உட்கொள்ளும் இலை வகைகள் சிலவற்றைக் கூறி விளக்குக.

10. நாம் உட்கொள்ளும் பழங்கள் சிலவற்றை விளக்குக.

11. நாம் உணவில் சேர்த்துக்கொள்ளும் நறுமணப் பொருள்கள் சில எங்கிருந்து கிடைக்கின்றன ?

12. உணவுப் பொருள்களாக இருந்துகொண்டே மருந்துப் பொருள்களாகவும் உள்ளவை எவை ?

13. நீங்கள் படித்த உணவுப் பொருள்களைக் கீழ்க்கண்ட அட்டவணையில் வகைப்படுத்தி எழுதுக.

குடிக்கும் வகை	கிழங்கு வகை	தண்டு வகை	இலை வகை	பூ வகை	பழ வகை	நறுமண வகை	மருந்து வகை	நெய் வகை	பால் வகை
1									
2									
3									
etc.									

செய்யுட் பகுதி

[பொது]

I. வாழ்த்துப் பகுதி

1. திரு அருட்பா

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே
காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
எல்லார்க்கும் பொதுவில்நட மிடுகின்ற சிவமே
யென்னரசே யான்புகலு மிசையுமணிந் தருளே.

—இராமலிங்க அடிகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில், "சமரச சன் மார்க்கம்" ஆகிய பொது நோக்க நெறியை உலகில் பரப்பிய பெரியார் இராமலிங்க அடிகள். இறைவன் திருவருளால் பாடப்பட்டனவும், அருள் நெறியைப் புலப்படுத்துவனவுமாகிய இவருடைய பாடல்கள் 'திருவருட்பா' என்னும் பெயருடையன. இவர் பெற்றோர் இராமைய பிள்ளை,சின்னம்மையார் எனப்படுவர். இவர் பாடல்கள் ஆறு திருமுறைகளாக வகுக்கப் பட்டுள்ளன. இப்பாட்டு ஆறாந் திருமுறையில் உள்ளது.

களிப்பு-மகிழ்ச்சி. மாட்டார்க்கும்-முடியாதவர் களுக்கும் - வன்மை இல்லாதவர்களுக்கும். மதி கொடுக்கும்-அறிவைக் கொடுக்கும். நடுநின்ற - நடுவு நிலைமையாக, (பொதுவாக) இருந்த. புகலும்-எடுத்துக் கூறும். இசையும்-புகழையும். அணிந்தருள்-ஏற்றுக் கொள்வீராக.

2. பிரார்த்தனை

சூரியன் வருவது யாராலே?
சந்திரன் திரிவது யாராலே?
காரிருள் வானில் மின்மினி போல்
கண்ணிற்படுவன அவை என்ன?
பேரிடி மின்னல் எதனாலே?
பெருமழை பெய்வது எவராலே?
ஆரிதற் கெல்லாம் அதிகாரி?
அதை நாம் எண்ணிட வேண்டாமோ.

—நாமக்கல் கவிஞர்

'பிரார்த்தனை' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்ட இப்பாடல், நாமக்கல் கவிஞர் - இராமலிங்கம் பிள்ளை அவர்களால்பாடப்பட்டது. இவர் நாட்டிற்கும், மொழிக்கும் மிகவும் தொண்டு செய்துள்ளார். இவர் கவிதைகள் படிக்கப் படிக்க இன்பந் தருவன; தமிழர் மனத்திலிருந்து, குல, சமய, அரசியல், பூசல்களை விரட்டி அடிக்கும் சங்கநாதமாகும். அடிமையின் மனத்திலும் உரிமை வேட்கையை உண்டாக்குவன. இவர் இப்போது சென்னை அரசியல், அவைக்களப் புலவராக அமர்ந்துள்ளார்.

காரிருள்-கருமையான இருள். மின்மினி-விட்டு விட்டு மின்னிக் கொண்டே போகும் பூச்சி (மின் மினிப் பூச்சி) பேரிடி-பெரிய இடி. அதிகாரி-காரணமா யிருப்பவர். (இதையெல்லாம் நடத்தி வைப்பவர்.)

3. தமிழ்மொழி வாழ்த்து

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே.
2. வானமளந்தது அனைத்து மளந்திடு
வண்மொழி வாழியவே.

3. ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே.

4. எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே.

5. சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்கத்
துலங்குக வையகமே.

6. தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே.

7. வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே.

8. வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே.

—பாரதியார்

நம், ‘நாட்டுக் கவி’ (தேசிய கவி) என்று நானிலம் போற்றும் பாரதியார் கவிதைகளிலிருந்து எடுத்த ஒரு பகுதியாகும் இது. தமிழ்மொழியை வாழ்த்துவதாகும். பாரதியார் வரலாற்றை நீங்கள் நன்றாய் ஆசிரியர்களிடமிருந்து கேட்டும், நூல்கள் வாயிலாகப் படித்தும் அறிந்துகொள்ள வேண்டும். தாய்மொழிப் பற்றும் தாய்நாட்டுப் பற்றும் ஊட்டவல்ல தமிழ்நாட்டு மறுமலர்ச்சியில் இவருக்குத் தனிப் பேரிடமுண்டு. இவர் பாடல்கள், இன்னும், உரிமை உணர்ச்சி, அடிமை வெறுப்பும் ஒழிப்பும், கடவுள் அன்பு, பெண்கள் உரிமை, கைத்தொழில் மேன்மை முதலிய நற்பண்புகளையும் ஊட்ட வல்லன. (“தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்” என்று அவர் வேண்டியதுபோல், இன்று அவர் பாடல்கள் நாட்டுச் சொத்தாகித் தெருவெங்கும் ஊரெங்கும் நாடெங்கும் முழங்குவதைக் காணலாம்.

1. நிரந்தரம்-என்றென்றும் (நிலைத்து).
2. வானமளந்ததனைத்தும் - வானத்தினால் அளக்கப்பட்ட அனைத்தும்-அதாவது உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் (வானம், மற்று நிலம், நீர், தீ, காற்று முதலிய பொருள்களுக்கும் இடம் கொடுத்துக் கொண்டிருப்பதால் இதில் உலக முழுவதும் அடங்கும்) மொழி இவற்றை அளத்தலாவது அப்பொருள்களின் இயல்புகளை எடுத்துரைக்க வல்லது.
3. இசை - புகழ்.
5. சூழ்கலி-சூழ்ந்திருக்கும் துன்பம்; சிறுமை. துலங்குக-விளங்குக.
6. தொல்லை-பழைய. தொல்லை-துன்பம். சுடர்க-ஒளியுடன் விளங்குக.
8. அறிந்தது-அறிந்தவற்றை (அறிவியல்-விஞ்ஞானம்). அறிந்து-ஆராய்ந்தறிந்து.

4. நாடு

சங்கொலி

1. எந்தநாட் டெவர்வந் தாலும்
   எம்மொழி பேசி னாலும்
   சொந்தநாட் டவர்போ லிங்கு
   சுகித்துநிம் மதியாய் வாழத்
   தந்தநா டுலகி லிந்தத்
   தமிழகம் போலொன் றுண்டோ
   அந்தநம் புகழைக் காத்து
   நம்நாடு அன்பே ஆற்றும்.

2. கொல்லாமை உயர்வென்னும்
   தமிழ்நாடு வாழ்க!

கொடைவள்ளல் பலர்நின்ற
தமிழ்நாடு வாழ்க!
இல்லாமை அறியாத
தமிழ்நாடு வாழ்க!
இரவாமை அறமென்னும்
தமிழ்நாடு வாழ்க!

3. படையாமல் உண்ணாத
தமிழ் நாடு வாழ்க!
பகையாரும் எண்ணாத
தமிழ்நாடு வாழ்க!
அடையாத துன்பங்கள்
அவைவந்த போதும்
அநியாயம் எண்ணாத
தமிழ்நாடு வாழ்க.

—நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

நாம் முன்பு கடவுள் வாழ்த்தில் படித்த நாமக்கல் கவிஞர் இயற்றிய 'சங்கொலி'யினின்றும் இந்நாட்டுப் பாடல்கள் எடுக்கப் பெற்றுள்ளன.

1. நிம்மதியாய்-மன அமைதியோடு. ஆற்றும் - செய்யும். நின்ற-புகழை நிலை நிறுத்திச் சென்ற

2. இல்லாமை - வறுமை. இரவாமை - பிச்சை எடுக்காமல் வாழும் வாழ்வு.

3. படையாமல்-பிறருக்கும் பகிர்ந்து கொடுக்காமல், கடைசி இரண்டடிகள் - "வறுமையிலும் செம்மை" உடையோராய், பிறருக்குக் கேடு நினையாமல் வாழ்பவர் தமிழர்கள் என்று கூறுகின்றன.

II. அறவுரைப் பகுதி

I. திருக்குறள்

விருந்தோம்பல்

1. இருந்தோம்பி இல்வாழ்வ(து) எல்லாம் விருந்
வேளாண்மை செய்தற் பொருட்டு. [தோம்பி

2. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்(று) அன்று.

3. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

4. அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்(து) ஓம்புவான் இல்.

செய்ந்நன்றி யறிதல்

5. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.

6. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

7. பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

8. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்.

9. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. [லை

ஈகை

11. நல்லாற்(று) எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

12. இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகம் காணும் அளவு.

13. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

14. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்.

15. சாதலின் இன்னாத(து) இல்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை.

வாய்மை

16. வாய்மை எனப்படுவ(து) யாதெனின் யாதொன்
தீமை இலாத சொலல். [றும்

17. பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.

18. தன்னெஞ்(சு) அறிவது பொய்யற்க பொய்த்த
தன்னெஞ்சே தன்னைச் சுடும். [பின்

19. புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

20. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

மருந்து

21. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்(கு) அருந்
அற்றது போற்றி உணின். [தியது

22. அற்றால் அளவறிந்(து) உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு.

23. மாறுபா(டு) இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா(டு) இல்லை உயிர்க்கு.

24. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

உழவு

25. சுழன்றும் ஏர்ப்பின்ன(து) உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

26. உழதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற்(று) எல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

27. பலகுடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்.

28. தொடிப்புழுதி கஃசா உணக்கில் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

29. ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

30. இலமென்(று) அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.

—திருவள்ளுவர்

பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று திருக்குறள். எந்நாட்டார்க்கும், எம்மதத்தார்க்கும், எம்மொழியார்க்கும் பொதுவான உறுதிப்பொருள்கள் பல இந்நூலுள் கூறப்படுகின்றன. இந்நூலைப் போற்றாத தமிழர் இலர். ஆங்கிலம் முதலிய பலமொழிகளில் இது பெயர்த்தெழுதப் பட்டுள்ளது. கடைச் சங்ககாலத்தின் இறுதியில் இந்நூல் தோன்றியது.

விருந்தோம்பல்

1. இல் இருந்து—மனைவியோடு வீட்டிலிருந்து. ஓம்பி—பொருள்களைப் போற்றி. வேளாண்மை—உபகாரம்.

2. சாவா மருந்து—அமுதம். வேண்டற்பாற்று—விரும்பத்தக்கது.

3. வைகலும்—நாள்தோறும். பருவந்து—வறுமையால் வருந்தி.

4. செய்யாள் - இலக்குமி.

செய்ந்நன்றி யறிதல்

5. செய்யாமல்—முன்பு ஒருதவியும் செய்யாதிருக்க. வையகம்—உலகம். ஆற்றல்—ஒப்பாதல்.

6. காலத்தினால்—ஒருவனுக்கு ஆபத்துவந்த காலத்தில். ஞாலம்—உலகம். மாண—மிக.

7. பயன் தூக்கார்—பயனை ஆராயாதவராய். நயன்—அன்புள்ள செய்கை.

8. தினைத்துணை—தினையளவு. பனைத்துணை—பனையளவு.

9. நன்றி—நன்மை. நன்றல்லது—தீமை. நன்று—அறன்.

10. எந்நன்றி—எவ்வளவு பெரிய அறங்களையும். உய்வுண்டு—பாவத்தின் நீங்கும் வழி உண்டு.

ஈகை

11. நல்லாறு—நல்ல நெறி. கொளல்—ஏற்றல். மேலுலகம்—வீட்டுலகம்.

12. இன்னாது—துன்பந்தருவதாம். இரந்தவர்-யாசித்தவர்.

13. அற்றார்—பொருளற்றவர். அழிபசி—மிக்க பசி. வைப்புழி—வைக்குமிடம்.

14. மன்ற—நிச்சயமாக. நிரப்பிய—பொருட்குறையை நிரப்பவேண்டி.

15. இயையாக்கடை—முடியாத விடத்தில்.

வாய்மை

16. வாய்மை-மெய்மை. தீமையிலாத- தீங்குபயவாத.

17. புரை-குற்றம். வாய்மையிடத்த-மெய்மைச் சொற்களோடு சேர்ந்தன. பயக்கும்-உண்டாக்கும்.

18. பொய்யற்க-பொய்யாது ஒழிக. சுடும்-துன்பத்தை எய்துவிக்கும்.

19. புறந்தூய்மை - ஒருவனுக்கு உடம்பு தூய்தாந் தன்மை. அமையும் - உண்டாம். அகம் - மனம். காணப்படும் - உண்டாம்.

20. எல்லா விளக்கும்-புறத்திருள்கடியும் உலகத்தார் விளக்குகள் எல்லாம். பொய்யா விளக்கு - மனத் திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே.

மருந்து

21. யாக்கை-உடம்பு. அற்றது போற்றி-சீரணித்ததை அறிந்து.

22. அற்றால்-உண்டது சீரணித்தால். அளவறிந்து- பின் சீரணிக்கும் அளவை அறிந்து. நெடிது - நீண்ட நாள்.

23. உண்டி-உணவு. மறுத்து உண்ணின்-மனம் விரும் பிய அளவு உண்ணுமல் நோய்வாரா அளவு உண் டால்.

24. நோய்முதல்-நோய் வருவதற்குரிய காரணத்தை. தணிக்கும் வாய்-தீர்க்கும் உபாயம்.

உழவு

25. சுழன்றும் - உழுதொழில் கடினமானதென அதைச் செய்யாமல் வேறு தொழில்களைச்செய்து திரிந்தும். தலை-முதன்மையான தொழில்.

26. வாழ்வார் - தமக்கு உரியவராய் வாழ்கின்றவர்.

27. அலகு உடை - நெல்லினை உடைய. நிழலவர் - கருணையுடையோர்.

28. தொடிப்புழுதி - ஒருபலம் நிறையுள்ள புழுதியை கஃசா - காற்பலமாக. சாலப்படும் - பணைத்து விளையும்.

29. ஏரினும் - ஏர் உழுவதைக் காட்டிலும், கட்ட பின் - களைநீக்கிய பிறகு.

30. அசைஇ - சோம்பி. நகும் - சிரிப்பாள்.

2. நன்னெறி

சினம் காக்கும் குணம்

உள்ளம் கவர்ந்தெழுந் தோங்கு சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணம்என்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. 1.

அறிஞர் இயல்பு

முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான் எட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை. 2.

மேன்மக்கள் இயல்பு

கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர்தாம் என்றும் மதியாரே—வெற்றிநெடு
வேல்வேண்டும் வாள்விழியாய்! வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். 3.

கீழ்மக்கள் குற்றமே கூறுவர்

உண்டு குணமிங் கொருவர்க்(கு) எனினும்கீழ்க்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்பும் கனி. 4.

நல்லார் கேண்மையும், அல்லார் கேண்மையும்

நல்லார் செயுங்கேண்மை நாள்தோறும் நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை ஆகாதே—நல்லாய்கேள்
காய்முற்றில் தின்தீங் கனியாம் இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்னாகிப் போம். 5.

—சிவப்பிரகாசர்

1. உள்ளம்-மனம். காத்துக்கொள்ளும் - அடக்கிக்கொள்ளும். தடம்கரை - பெரிய கரை.

2. முனிவிலும் - கோபத்திலும். நல்குவர் - கொடுப்பர், மூதறிஞர் - முதிய அறிவினை உடையவர். கனிவு - மகிழ்ச்சி. கயவர் - கீழ்மக்கள். நனிவிளைவு இல் - நன்றாக முற்றாத. அறை - சொல்.

3. காமுறுவர் - விரும்புவர். மற்றையர் - கீழ்மக்கள். வேல் வேண்டும் - வேலைப்போலும். வாள் விழி - ஒளி பொருந்திய கண். புளிங்காடி-புளிப்பேறிய காடிநீர்.

4. கீழ் - கீழ் மக்கள். சேக்கை - தங்கும் இடம். பொழில்வாய் - சோலையினிடத்தில். கனி - பழம்.

5. கேண்மை - சிநேகம். நல்லாய் - நல்லவளே. தின்தீங் கனி- தின்பதற்குரிய இனிய பழம்.

3. இன்னிசை இரு நூறு

ஒழுக்கத்தின் மதிப்பு

செல்வமும் கல்வி இலையேல் சிறப்பில்லை;
கல்வியும் நுண்அறி வின்றேல் கணிப்பில்லை;
எல்லாம் இருப்பினும் நல்ஒழுக்கம் இல்லாயின்
வல்லார்க்கும் இல்லை மதிப்பு. 1.

அறிஞர் அடக்கம்

காய்த்த விளைநெல் கதிரிறைஞ்சக் காண்டுமால்;
கோத்த பதர்கொள் குலைநிமிர்வே கொள்ளும்;
ஏத்தும் அறிஞர்க் கியல்பு பணிவுடைமை;
வாய்த்தல்இலை பேதை வயின். 2.

—அரசன் சண்முகனார்

1. இன்றேல் - இல்லாவிடில். கணிப்பு-மதிப்பு.

2. இறைஞ்ச - தாழ. காண்டும் - காண்கின்றோம். ஏத்தும் - உயர்த்திக் கூறப்படும். இயல்பு - இயல்பான ஒழுக்கம். பேதை வயின்-அறிவில்லான் இடத்தில்.

4. சதகச் செய்யுட்கள்

வேண்டுவன—வேண்டாதன

தன்மமதைச் செயல்வேண்டும்; தண்டலைநீள்
நெறியாரே தயவு செய்வார்;
வன்மவினை செயல்வேண்டா; பொய்வேண்டா;
பிறரைஒன்றும் வருத்தல் வேண்டா;
கன்மநெறி வரல்வேண்டா; வேண்டுவது
பலர்க்குமுப கார மாகும்.
நன்மைசெய்தார் நலம்பெறுவர், தீமைசெய்தார்
தீமையுற்று நலிவர் தாமே. 1,

—தண்டலையார் சதகம்

தண்டலைநீள் நெறி என்பது ஒரு திருப்பதி. தண்டலை நீள் நெறியார்--அந்தப் பதியில் எழுந்தருளியுள்ள கடவுள். வன்மவினை - கொடிய செயல்கள். நலிவர்-வருந்துவர்.

இறந்தும் இறவாதவர்

அனைவர்க்கும் உபகாரம் ஆம்வாவி கூவம்உண்
டாக்கினோர் நீதி மன்னர்;
அழியாத தேவாலயங்கட்டி வைத்துளோர்
அகரங்கள் செய்த பெரியோர் ;
தனைஒப்பி லாப்புதல்வ னைப்பெற்ற பேர்பொருது
சமர்வென்ற சுத்த வீரர் ;
தரணிதனில் நிலைநிற்க எந்நாளும் மாறாத
தருமங்கள் செய்த பேர்கள் ;
கனவித்தை கொண்டவர்கள் ஓயாத கொடையாளர்
காவியம் செய்த கவிஞர் ;
கற்பினில் மிகுந்தஒரு பத்தினி மடந்தையைக்
கடிமணம் செய்தோர் கள் ; இம்
மனிதர்கள் சரீரங்கள் போகினும் சாகாத
மனிதர்இவர் ஆவர் அன்றோ !
மயில்ஏறி விளையாடு குகனே ! புல் வயல்நீடு
மலைமேவு குமரே சனே ! 2.

—குமரேச சதகம்

கூவம் - கிணறு. வாவி - குளம். அகரங்கள் - ஊர்கள், அல்லது வீடுகள். சமர் - போர். காவியம் - பெரிய நூல். கடி மணம் - திருமணம். சாகாத மனிதர் - புகழுடம்பில் என்றும் அழியாது வாழ்பவராவர்.

5. விவேக சிந்தாமணி

செல்வர் செல்வர்க்கே ஈவர்

கதிர்பெறு செந்நெல் வாடக் கார்க்குலம் கண்டும் [சென்று
கொதிதிரைக் கடலில் பெய்யும் கொள்கைபோல் [குவல யத்தே
மதிதனம் படைத்த பேர்கள் வாடினோர் முகத்தைப் [பாரார்
நிதிமிகப் படைத்தோர்க் கீவர் நிதியிலார்க் கீய மாட் [டார்.

இது விவேக சிந்தாமணியில் இருந்து எடுக்கப் பட்ட பாட்டாகும்.

கார்க்குலம் - மேகக்கூட்டம். கொதி திரை - கொந்தளிக்கும் அலை. குவலயம் - நிலவுலகம். மதி தனம் - (நன்கு) மதிக்கப்படும் பொருள், மிக்க பொருளுமாம். ஈயமாட்டார் - கொடுக்க மாட்டார்.

III. வரலாற்றுப் பகுதி

1. பஞ்ச தந்திரம்

(அ.) முயல் சிங்கத்தைக் கொன்றது

குறுமுயல் சிங்கந் தன்னைக் கொன்றதொன் றுண்டே
[தென்னிற்
செறியுமோர் காட்டி லேயோர் சிங்கமுண் டந்தக்
[காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை யாடியூன் மிகவுந்
[தின்று
வெறிகொடு திரியு நாளில் விலங்கெலா மொருங்கு
[கூடி, 1.

ஆணிளஞ் சிங்க மேயுன் அடவியில் விலங்கை யெல்
[லாம்
வீணிலே கொல்ல வேண்டாம் விதத்தினில் தின
[மொன் றுக்
ஊணுனக் களிப்போ மென்ன உண்மையாக் கொண்டு
[சிங்கம்
ஆணையு மிட்டொவ் வொன்று யருந்தியங் கிருக்கு
[நாளில் 2.

தனிமுய லொன்றுக் கோர்நாள் தன்முறை வருத
[லோடும்
இனியது விடாது நம்மை யென்னுமோ ரெடுப்பெ டுத்து
வினையையிப் போது செய்து வென்றுநா முய்ந்தோ
[மாகில்
நனிவிலங் கனைத்து முய்யு நமக்குநற் புகழுண்
டென்றே, 3.

கருதியச் சிங்கத் தின்றன் கடும்பசி வேளை தப்பி
வருதலு முயலை நோக்கி மன்னனம் பசிவே ளைக்குப்
பெருமத வேழ மேனும் பிந்துவ தில்லை பிந்தி
வருவதென் னுரைநீ யென்று மனந்தனிற் சினந்து
[கூற, 4

ஐயநின் பசித்த வேளைக் கடியனேன் வந்தே னங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு வெருவியங் கொளிந்தி
[ருந்தேன்
பையவே சிங்க மாங்கோர் பருமுழை புகுந்தபின்னர்
துய்யவுன் பக்கல் வந்தேன் சுவாமியென் றிறைஞ்சி
[நிற்க, 5.

சிங்கநா மல்லால் வேறோர் சிங்கநீ கண்டா யாகில்
அங்கதைக் காட்டு வாவென் றழைத்தலு மழைத்துப்
[போயோர்
பங்கமும் புனலுஞ் சேர்ந்த பாழ்ந்துர வதனைக்
[காட்ட
அங்கதை யெட்டிப்பார்த்த ததனிழ லுருவந்தோன்ற,6.

தன்னுரு நிழலைத் தானே சத்துரு வென்று பாய்ந்து
துன்னுபங் கத்த ழுந்தித் துளங்கியே யுயிரி ழந்த
தென்னலா லுபாயத் தாலே யாவையும் வெல்ல
[லாமென்
றின்னமோர் நண்டு கொக்கை யீர்ந்ததோர் கதை
[யுஞ் சொல்லும். 7.

(ஆ) காகம் நாகத்தைக் கொன்ற கதை

கோடுறு சினையிற் காகம்
 கூடுவைத் தனேக காலம்
பேடொடு கூடி வாழும்
 பெருமரப் பொந்தில் வந்தே
ஆடிய கரும்பாம் பொன்றங்
 கதுபெறும் முட்டை யெல்லாம்
நாடியே குடித்துப் போட
 நலிந்துளம் மெலிந்து வாடி, 1.

தன்னுயிர்ப் பாங்க னை சம்புக னருகு போயிங்
கென்னசெய் குவனு னென்ன விதைக்கொல லரி
 [தோ நீபோய்
மன்னவன் றேவி யாடு மஞ்சனச் சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து போடுக பொந்திலென்
 [ன, 2.

காகமப் படியே செய்யக் காவல னேவ லாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை யீர்ந்தன ரீரும் போதில்
நாகமங் கிருந்து சீற நறுக்கின ரிருதுண் டாக
ஆகையா லுபாயத் தாகா திலையென வறையும் பின்
 [னும். 3.

—வீரமார்த்தாண்ட தேவர்

பஞ்ச தந்திரத்தை வட மொழியிலிருந்து தமிழில் எழுதியவர் வீரமார்த்தாண்ட தேவராவர்.

1. குறு முயல்-சிறிய முயல். உறுவிலங்கு-பொருந்திய (வாழும்) விலங்குகள்.

2. அடவி-காடு. ஆணை-கட்டளை (உத்தரவு). அருந்தி-தின்று.

3. எடுப்பு-ஒரே எண்ணம். வினை-சூழ்ச்சி. உய்ந்தோம்-பிழைத்தோம். நனி-மிகுதியான.

4. மன்னனம் மன்னன் + நம் எனப் பிரிக்க. அரசனுகிய நம். வேழம்-யானை.

5. வெய்ய-கொடிய. வெருவி-அஞ்சி. பையவே-மெதுவாக. பருமுழை-பெரிய குகை.

6. துய்ய-தூய்மையான. பங்கமும்-குழைந்த சேறும். பாழ்ந்துரவு-பாழுங் கிணறு.

7. துளங்கி-அசைந்து, அஞ்சி.

2

1. கோடு-மரக் கொம்பு. சினை-கிளை. பேடு-பெட்டை. நாடியே-தேடிவந்து. நலிந்து-வருந்தி.

2. பாங்கன்-நண்பன். மஞ்சனச் சாலை-நீராடும் அறை. பொன் அணி-பொன் அணிகலன்.

3. காவலன்-அரசன். ஏவலாளர்-வேலைக்காரர். ஈர்ந்தனர்-(வெட்டிப்) பிளந்தனர். அறையும்-சொல்லும்.

(இ) மலரும் மாலையும்.

2. 'ஆசிய சோதி'

புத்தரும் மகனிழந்த தாயும்.

தாயின் துயரம்

காடும் மலையுங் கடந்துவந்தேன் உன்னைக்
  கண்டு துயரெல்லாம் போக்க வந்தேன்
வாடும் மலர்ச்செண்டு போல்கிடக்கும் இந்த
  மைந்தன் உயிரெழச் செய்யுமையா. 1.

நெஞ்சிற் கிடத்தி வளர்த்தபிள்ளை கண்ணில்
  நித்திரை நீக்கியான் காத்தபிள்ளை
விஞ்சு தவத்தினில் பெற்றபிள்ளை என்னை
  விட்டுப் பிரிந்தறி யாதபிள்ளை. 2.

பெற்றவயிறு துடிக்குதைய யாதொரு
பிள்ளையும் வேறெனக் கில்லையையா
உற்ற உறவினர் இல்லையையா என்மீ (து)
உள்ளம் இரங்கிட வேணுமையா. 3.

வேறு

வாய்முத்தம் தாராமல்
மழலையுரை யாடாமல்
சேய்கிடத்தல் கண்டெனக்குச்
சிந்தைதடு மாறுதையா. 4.

முகம்பார்த்துப் பேசாமல்
முலைப்பாலும் உண்ணுமல்
மகன்கிடக்கும் கிடைகண்டு
மனம்பொறுக்கு தில்லையையா. 5.

நீடும் மதியினைப்போல்
நிலவெறிக்கும் செல்வமுகம்
வாடிநிறம் மாறியதென்
வயிற்றிலெரி மூட்டுதையா. 6.

'பின்னி முடிச்சிடம்மா
பிச்சிப்பூச் சூட்டிடம்மா'
என்னும் மொழிகளினி
எக்காலம் கேட்பனையா. 7.

நெஞ்சிற் கவலையெல்லாம்
நிற்காமல் ஓட்டும்அந்தப்
புஞ்சிரிப்பைக் காணுது
புத்திதடு மாறுதையா. 8.

இட்டளைந்து கூழைஎனக்
கின்னமுதம் ஆக்கியகை
கட்டழிதல் கண்டுமனம்
கறங்காய்ச் சுழலுதையா. 9.

சோலைப் பசுங்கிளிகள்
தோழனையும் காணுமல்
நாலு திசைகளிலும்
நாடித் திரியாவோ? 10.

அன்னப் பறவைகளென்
அழகனைப் பார்க்கவந்தால்
என்னமொழி கூறஇனி
என்நா எழுமையா? 11.

துள்ளிவிளை யாடஎன்றன்
சுந்தரனைத் தேடிவரும்
புள்ளிமான் கன்றினுக்கெப்
பொய்சொல்லி நிற்பனையா? 12.

சித்திரத் தேரும்
சிறுபிறையும் கூடிஎனைப்
பித்தியிலும் பித்தி
பெரும்பித்தி ஆக்குதையா. 13.

குஞ்சை யிழந்தகுயில்
கூவியழக் கண்டகணு
நெஞ்சை யறுக்குதையா
நினைப்பொழிய மாட்டாதையா. 14.

கொம்படர்ந்த மாவின்
குலையடர்ந்த பூம்பிஞ்சு
வெம்பிவிழக் கண்டகணு
மெய்யாய் விடுமோஐயா? 15.

கழுத்திற் கயிறிறுக்கிக்
கன்றுவிழக் கண்டகணு
பழுத்துப் பலித்திடுமோ
பலன்மாறி நின்றிடுமோ? .... 16.

தாயாகி உள்ளம்
தருக்கி யிருந்ததுபோய்ப்
பேயாகி இன்று
பிணங்தூக்கி நிற்பேனே? 17.

18. இந்தப் பிறவியில் யான்
எப்பிழையும் செய்தறியேன்
எந்தவிதம் என்வயிற்றில்
இவ்விடியும் வீழ்ந்ததையா?

வேறு

19. கன்றெ ழிந்தகா ராவின்க லக்கமொத்
தன்ற ரற்றி அழுத அரிவையை
என்றும் எங்கணும் எவ்வுயி ருந்தொழ
நன்று கண்டமெய்ஞ் ஞானியும் நோக்கியே.

புத்தர் கூறுதல்

வேறு

20. தாயேநின் மனக்கவலை ஒழிந்திடத்
தக்கநல் மருந்தளிப்பேன்
சேயினை எழுப்பிடுவேன் விளையாடித்
திரியவும் செய்திடுவேன்.

21. நாவிய கடுகுவேண்டும், அதுவுமோர்
நாவுரி தானும் வேண்டும்
சாவினை அறியாத வீட்டினில்
தந்ததா யிருக்கவேண்டும்.

22. பக்கமாம் பதிகளிலே சென்றுநீ
பார்த்தது வாங்கிவந்தால்
துக்கமும் அகலுமம்மா குழந்தையும்
சுகமாக வாழுமம்மா.

—கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை

"மலரும் மாலையும்" என்னும் நூல் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின் பாடல்களின் தொகுதியாகும். "ஆசிய சோதி" என்னும் பிரிவில் 'புத்தரும் மகனிழந்த தாயும்' என்னும் பகுதியிலிருந்து எடுத்ததாகும் இப்பாடம். பிள்ளை அவர்கள் திருவிதாங்

கூர் நாட்டில் உள்ள சுசீந்திரத்தை அடுத்துள்ள தேரூர் என்னும் சிற்றூரில் 1867-ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பெற்றோர் சிவதாணுப் பிள்ளை - ஆதிலட்சுமி யம்மாள் ஆவார்கள். மகனிழந்த தாய் புத்தரிடம் வந்து புலம்பிப் பிள்ளையைப் பிழைப்பித்துத் தரும்படி வேண்டுகிறாள். தாய் சேய்க்காக அழுது முறையிடுவது கல்லையும் உருக்கும். புத்தர் மறுமொழியும் இதில் உள்ளது.

2. நெஞ்சிற்கிடத்தி - மார்பின் மீது போட்டு அணைத்து. கண்ணில் நித்திரை நீக்கி- என் கண்ணி லிருந்து தூக்கத்தை ஓட்டி (நான் தூங்காமல்). விஞ்சு- மிகுந்த.

4. சேய்-பிள்ளை.

6. நீடும்மதி-முழுமதி. எரி-நெருப்பு.

8. புஞ்சிரிப்பு-புன்சிரிப்பு (புன்முறுவல்).

9. அளைந்த-பிசைந்த. கட்டு-அழகு. கறங்காய்- காற்றாடி போல்.

11. மொழி - மறுமொழி.

12. சுந்தரன் - அழகன்.

13. சித்திரத்தேர், சிறு பறை - பிள்ளை தேர் உருட்டியும் சிறுபறை கொட்டியும் விளையாடிய விளையாட்டுகள். ஆண்பால் பிள்ளைத் தமிழில் இவ்விரு பருவமும் பாடப்படும். இவற்றை நினைத்தாலும், சிறு தேரையும் சிறு பறையையும் பார்த்தாலும் பித்துப் பிடித்தவள் போல் ஆக்குகின்றன.

14. மாட்டாது ஐயா-முடியாது ஐயா!

15. பூம்பிஞ்சு-பூவிலிருந்து இப்போதுதான் வெளிப்பட்ட (மிகவும் இளைய) பிஞ்சு. வெம்பி-வாடி. தான் கண்ட மூன்று தீக்கனுக்களைச் சொல்லி அழுது, அவற்றின் பயனாகவே தன்மகன் இறந்ததாகக் கருதுகிறாள் தாய்.

17. தருக்கி-பெருமிதத்தோடு.

19. காரா-உடல் முழுவதும் கருப்பாயுள்ள பசு, காரன் பசு என்றும் வழங்கும். அரற்றி - புலம்பி. மெய்ஞ்ஞானி-உண்மை அறிவாளியாகிய புத்தர்.

21. நாவிய-ஒருவகைக்கடுகு; நாய்க்கடுகு என்பர். நாவுரி-நாழியும் உரியும் (முகத்தல் அளவைகள்)

IV. பல்சுவைப் பகுதி

1. தேவாரம்

சந்தமா ரகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினி லுமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையா ரிணையடி யென்மனத் துள்ளவே

—திருஞானசம்பந்தர்

2. திருமாலை

விரும்பிநின் றேத்த மாட்டேன் விதியிலேன் மதி [யொன் றில்லை
இரும்புபோல் வலிய நெஞ்சம் இறைஇறை உருகும் [வண்ணம்
சுரும்பமர் சோலை சூழ்ந்த அரங்கமா கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டு கொண்டேன் கண்ணிணை களிக்கு [மாறே.

—தொண்டரடிப்பொடியாழ்வார்

பண்ணோடு பயின்றும், தாளத்தொடு பொருந்தியும் வரும் இசைப் பாடல்கள் சிந்தைக்கும், செவிக்கும் நல்விருந்தாய், மனத்திற்கு மட்டிலா மகிழ்ச்சியைத் தருவன. நமக்கு வந்துள்ள இவ்விசைப் பாடல்கள் தேவாரத்திலிருந்தும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலிருந்தும் எடுக்கப்பட்டவை.

1. தேவாரம், (1) தேவ + ஆரம் = தெய்வத்திற்குரிய (பா) மாலை. (2) தே + வாரம் = தெய்வத்திற்கே உரியது. (3) தே + வாரம் = தெய்வத் தன்மை உடைய (வாரம்) இசைப்பாடல் எனப் பொருள்படும். இத்தேவாரப் பாடலைப் பாடியவர் திருஞானசம்பந்தர். இவர் வரலாற்றைப் படித்தும் கேட்டும் அறிக. தேவாரம் சிவபெருமான்மேல் பாடப்பெற்றது.

2. திருமால்மீது ஆழ்வார்கள் பாடிய பாடல்களை "நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்" எனத் தொகுத்தனர். இப்பாடல் தொண்டரடிப்பொடியாழ்வார் பாடியது. இவ் விருவகைப்பாடல்களும் சிறந்த இசைப் பாடல்கள் என எல்லோராலும் போற்றப்படுகின்றன. திருமாலை-அழகிய பாமாலை.

1. சந்தம்-சந்தனமரம். ஆர்-ஆத்திமரம். அகில்-அகில்மரம். சாதி-உயர்ந்த. உந்து-தள்ளிக்கொண்டு வருகின்ற. மா-சிறந்த. மந்தமார்-தென்றல் தவழும். பொழில்-சோலை. மல்குவண்-வளப்பம் நிறைந்த. எந்தையார்-எமது தந்தை. இணையடி-இரண்டு திருவடி.

2. இறைஇறை-கொஞ்சம் கொஞ்சமாக. சுரும்பு-வண்டு. கரும்பினை-கரும்பு போன்றினிக்கும் கடவுளை. கண்ணிணை-இரு கண்களும்.

3. தனிப் பாடல்கள்

வைக்கோலும் யானையும்

1. வாரிக் களத்தடிக்கும் வந்தபின்பு கோட்டைபுகும்
போரிற் சிறந்து பொலிவாகும்—சீருற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலு மால்யானை யாம்.

மீனும் பேனும்

2. மன்னீரி லேபிறக்கும் மற்றலையி லேமேயும்
பின்னீச்சிற் குத்தும் பெருமையால்—சொன்னேன்
[கேள்
தேனுந்து சோலைத் திருமலைரா யன்வரையில்
மீனும்பே னுஞ்சரியா மே.

—காளமேகப் புலவர்

அவ்வப்போது காணும் நிகழ்ச்சிகள், காட்சிகள், செய்திகள் முதலியவற்றைப் பற்றி அவ்வப்போதே தனித் தனியாகப் பாடுபவை தனிப்பாடல்களாம். இப்பாடல்கள் காளமேகப் புலவர் பாடியவை. திருவரங்கத்தில் சற்றேறக்குறைய ஐந்நூறு ஆண்டுகட்கு முன் சமையல் தொழிலில் அமர்ந்திருந்த இவர், பின் திருவானைக்கா சென்று சைவராகி, தேவியார் அருளால் சிறந்த புலவரும் ஆனார் என்று கூறுவர். இவர் பாடல்கள் இரு பொருள் பட்டு, நயம் பொருந்தி இன்புறுத்துவன. நகைச் சுவையும், வசைச் சுவையும் பொருந்தியன.

1. வைக்கோலும் யானையும்: (1) வைக்கோல், வாரிக் களத்து அடிக்கும்-வாரியெடுத்து நெற்களத்தில் அடிக்கப்படும் கோட்டைபுகும்-பின் கோட்டையாக (சேர்த்து) வைக்கப்படும். போரில்-வைக்கோல் போரில். பொலிவாகும் விளங்கும் (2) யானை; வாரிக் களத்தடிக்கும்-(பகைவரை) வாரிப்போர்க்களத்தில் கீழே அடிக்கும். கோட்டை புகும்-பின் கோட்டைக்குள் புகுந்து செல்லும். போரில் சிறந்து பொலிவாகும்-சண்டையில் வெற்றி பெற்று விளங்கும். செக்கோல-செங்கோல-செம்மையாகிய அழகிய.

2. மீனும் பேனும்: (1) மீன்; மன்னீரிலே-பெருமையுடைய தண்ணீரில். மற்றலையில் மற்று (நீர்) அலைகளில். பின்னீச் சிற்குத்தும்-பின்னாக நீந்திச் சென்று குத்தி (பாயும்) (2) பேன்: மன்னீரிலே-மிருதியான மற்றலை ஈரிலே. யில்-மல் + தலையில்-வலிய தலையோட்டின் மீது. பின்னீச்சிற் குத்தும்-பிறகு 'ஈச்' என்ற ஒலியுடன் பெண் ...ன் குத்துவார்கள்

4. வெண்ணிலா

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே - ஒரு
(...)வள்ளியோடம் போலவரும் வெண்ணிலாவே. 1

பானுவெங் கதிர்குளிக்கும் வெண்ணிலாவே-நித்தம்
(...)ாற்கடலும் ஆடுவையோ வெண்ணிலாவே. 2

ஆம்பல்களி கூரவரும் வெண்ணிலாவே-உனக்கு
அம்புயம்செய் தீங்கெதுவோ வெண்ணிலாவே. 3

இரவையும்நண் பகலாக்கும் வெண்ணிலாவே-உன்னை
இராகுவும் விழுங்கிடுமோ வெண்ணிலாவே. 4

வளர்ந்துவளர்ந்துவந்த வெண்ணிலாவே-மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ வெண்ணிலாவே. 5

கூகைஆந்தை போலநீயும் வெண்ணிலாவே - பகல்
கூட்டினில் உறங்குவாயோ வெண்ணிலாவே. 6

பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே—[நீயும்
பாரில்வர அஞ்சினையோ வெண்ணிலாவே. 7

பளிங்குபோலு முன்னுருவில் வெண்ணிலாவே கறை
பற்றியே இருப்பதேனோ வெண்ணிலாவே. 8

பூமியின் உருநிழலோ வெண்ணிலாவே—அது
போகாக் குறுமுயலோ வெண்ணிலாவே. 9

குன்றும் குகைகளுமோ வெண்ணிலாவே—அன்றிக்
கூனக் கிழவிதானோ வெண்ணிலாவே. 10

ஆழியும் நீ வரக்கண்டு வெண்ணிலாவே—குறித்து
ஆடுவதேக் காரணமோ வெண்ணிலாவே. 11

ஆதாரமொன் றில்லாமல் வெண்ணிலாவே—நீயும்
அந்தரத்தில் நிற்பதேனே வெண்ணிலாவே. 12

சுற்றித் திரிவதுமேன் வெண்ணிலாவே—உனக்குச்
சொந்தஇடம் ஒன்றில்லையோ வெண்ணிலாவே. 13

பறக்கச் சிறகிருந்தால் வெண்ணிலாவே—உன்றன்
பக்கம்வந்து சேருவேனே வெண்ணிலாவே. 14

பால்போல் நிலவெறிக்கும் வெண்ணிலாவே--என்றன்
பாங்கில்விளை யாடவாராய் வெண்ணிலாவே. 15

பாங்கில்விளை யாட வந்தால் வெண்ணிலாவே—நல்ல
பால்தருவேன் பழந்தருவேன் வெண்ணிலாவே. 16

துன்பமிகத் தாமடைந்தும் வெண்ணிலாவே-பிறர்க்குச்
சுகமளிப்பர் உன்போலுண்டோ வெண்ணிலாவே. 17

இருளதனை விழுங்கவல்ல வெண்ணிலாவே-உன்னை
இருள்விழுங்கும் சூழ்ச்சியேதோ வெண்ணிலாவே. 18

—கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

முன்பு நாம் படித்த 'புத்தரும் மகவிழந்த தாயும்' என்னும் பாடலைப் பாடிய-கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களின் "மலரும் மாலையும்-எனும் நூலி லிருந்தே இதுவும் எடுக்கப்பட்டது.

2 பானு-ஞாயிறு.(சூரியன்). ஆடுவையோ-நீராடுவாயோ

3 ஆம்பல் - அல்லி. அம்புயம் - தாமரை.

4 இராகு - கோள். (கரும்பாம்பு.)

6 கூகை - கோட்டான்.

8 கறை - களங்கம்.

6 குறுமுயல்-சிறுமுயல். (திங்களிலுள்ள களங்கத்தை முயலாக உருவகித்தல் கவிமரபு).

11 ஆழி - கடல் (ஆழமுடையது).
12 அந்தரம் - வானம்.
15 பாங்கு - பக்கம்.

THE MADURA TAMIL SANGAM

5. தமிழன் இதயம்

ஆடுராட்டே

எடுப்பு (பல்லவி)

ஆடுராட்டே சுழன்றாடு ராட்டே.

தொடுப்பு

சுழன்று சுழன்று சுழன்றாடு ராட்டே - இனிச்
சுயராஜ்யம் வந்ததென்று ஆடுராட்டே (ஆடு).

முடிப்பு (சரணங்கள்)

பாபம் குறையுமென்று ஆடுராட்டே - இனிப்
பயங்கள் மறையுமென்று ஆடுராட்டே
கோபம் குறையுமென்று ஆடுராட்டே - நல்ல
குணங்கள் மிகுந்ததென்று ஆடுராட்டே 1
மேலான ஜாதியென்று மிக்கப்பேசி - மிக
மாறான காரியங்கள் செய்துவரும்
மாலான ஜனங்களின் வஞ்சனையெல்லாம் - இனி
மாண்டு மடியுமென்று ஆடுராட்டே. 2

—நாமக்கல் கவிஞர்

கடவுள் வாழ்த்தில் நாம் படித்த நாமக்கல் கவிஞரின் "தமிழன் இதய"த்திலிருந்து இஃது எடுத்தது ஆகும்.

1 பாபம் - தீச்செயல். பயம் - அச்சம். குணம் - பாடு.
2 மாலான - மயக்கம் (அறிவின்மை). மாண்டு மடியும் - சாய்ந்து அழியும்.

6474